பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 20 திங்கட்கிழமை (03.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 158

## கொலை, கொள்ளை, கடத்தல், கப்பம் கோரல் குற்றங்களைத் தடுக்க

# குடாநாட்டின் பாதுகாப்பு உடனடியாக இறுக்கப்படும்!

## மக்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றார் படைகளின் தளபதி

யாழ்ப்பாணம், மே 3

குடாநாட்டில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் கொலை, கடத்தல், கப்பம் கோருதல், கற்பழித்தல் போன்ற வன்செயல்களைத் தடுப்பதற்காக -

பாதுகாப்பு ஏற்பாடுகள் இங்கு உடனடியாக இறுக்கப்படும் என்று யாழ்.பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க தெரிவித்தார்.

மக்கள் நலன்கருதி தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைக்கு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (24ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.தே.க. மறுசீரமைப்பு; சட்டத்தரணிகள் ஆராய்வு

கொழும்பு, மே. 03

ஐ.தே.கவின் சட்டத்தரணிகள் சங்கம் அக்கட்சியை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் ஆராய எதிர்வரும் 07 ஆம் திகதி அவசரமாகக் கூடுகின்றது.

ஐ.தே.கவை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பில் நாடு முழுவதிலும் உள்ள ஐ.தே.க. ஆதரவுச் சட்டத்தரணிகளின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதே இக்கூட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

### ★ படப்பிடிப்பு நிலையத்தைத் திறக்கவிருந்த ★

## இளைஞர் ஒருவர் நேற்றிரவு நெல்லியடியில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே 3

நெல்லியடியில் படப்பிடிப்பு நிலையம் ஒன்றை இன்று திறக்கவிருந்த இளைஞன் நேற்றிரவு 7 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தும்பளை, தம்புருவளையைச் சேர்ந்த மகாலிங்கம் சதீசன் (வயது - 25) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் செலிங்கோ காப்புறுதி நிறுவன கிளைக்கு முன்பாக படப்பிடிப்பு நிலையம் (ஸ்ரூடியோ) ஒன்றை (24ஆம் பக்கம் பார்க்க)

### கபிலநாத் படுகொலை வழக்கில் தேடப்பட்ட

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் சாள்ஸ் சனியன்று பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மே 3

சாவகச்சேரி வர்த்தகரின் மகனான மாணவன் திருச்செல்வம் கபிலநாத் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக - சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினரான சாள்ஸ் என அழைக்கப்படுபவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ்வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

சம்பந்தப்பட்டவர் இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று இந்தியத் தூதருடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு, மே 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் 14பேருக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தவுக்கும் இடையில் இன்று கொழும்பில் முக்கிய சந்திப் பொன்று நடைபெறவுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் இந்தச் சந்திப்பு இன்று பகல் 12 மணியளவில் இடம்பெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.

தேர்தலின் பின்னரான தற்போதைய நிலைமை, அரசியல் தீர்வு தொடர்பாகக் கூட்டமைப்பு மேற்கொள்ளவுள்ள முன்னெடுப்புகள் (24ஆம் பக்கம் பார்க்க)

### சுழிபுரம், தொல்புரம் பகுதிகளில் நாளாந்தம்

## வீதிகளில் நின்று சேஷ்டை புரியும் இளைஞர்கள் சிக்கினர் படையினரிடம்!

மூளாய், மே 03

சுழிபுரம், தொல்புரம் பகுதிகளில் பொழுது கருகிய வேளையில் வீதிகளில் குழுக்களாக நின்று சேஷ்டைகள், அடாவடித் தனங்களில் ஈடுபட்டு வந்த சுமார் 20 இளைஞர்கள் நேற்றிரவு படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

(24ஆம் பக்கம் பார்க்க)

### ★ அரசமைப்புச் சபை இயங்காததால் ★

## மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நெருக்கடியில்!

கொழும்பு, மே. 03

அரசமைப்புச் சபை இயங்காததன் காரணமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் விசாரணைக்குழு ஆகியவற்றின் செயற்பாடுகள் தற்போது மிகுந்த நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளன.

இக் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலங்கள் கடந்த வருடம் முடிவடைந்து விட்டன.

ஆனால், அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரசமைப்புச் சபை செயற்பட்டால் மட்டுமே இந்தக் குழுக்கள் இயங்க முடியும்.

இந்நிலையில் இக் குழுக்கள் தற்போது வெறுமனே முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்து வருகின்றன. ஆனால், உருப்படியான விசாரணை நடத்தி பரிந்துரைகளை மேற்கொள்ள முடியாத நிலையிலும் குழுக்களின் (24ஆம் பக்கம் பார்க்க)

### சமூக விரோதக் குற்றங்களைக் கண்டித்து

## யாழ்.நகரில் இடம்பெறவிருந்த பேரணி அச்சுறுத்தலால் நேற்றுக் கைவிடப்பட்டது!

யாழ்ப்பாணம்,மே.03

யாழ்.நகரில் நேற்று நடைபெறவிருந்த கண்டனப் பேரணி ஒன்று இனந்தெரியாதவர்களின் அச்சுறுத்தல், மிரட்டல் என்பன காரணமாகக் கைவிடப்பட்டது.

குடாநாட்டில் இடம்பெற்று வரும், ஆள்கடத்தல், கப்பம்கோரல், கொலை, கற்பழிப்பு போன்ற சமூகவிரோத குற்றச் செயல்களைக் கண்டித்து மக்கள் சக்தி என்ற அமைப்பால் (24ஆம் பக்கம் பார்க்க)

## வருடத்தின் நான்கு மாதங்கள் கழிந்தும் இன்னும் 'பட்ஜெட்டை' சமர்ப்பிக்காதது ஏன்?

### ஆளுந் தரப்பின் சதித்திட்டம் என்று ஜே.வி.பி. சீற்றம்

கொழும்பு, மே 03

இந்த வருடம் பிறந்து நான்கு மாதங்கள் கடந்துவி[illegible] அரசுவரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்காமல் இருப்பது ஏன் என்று ஜே.வி.பி. கட்சி சீற்றத்துடன் கேள்வி எழுப்பியிருக்கிறது.

[illegible]களின் இந்த வருடத்துக்கான சம்பள உயர்வு, பொருள்களின் விலைக்குறைப்பு என்பவற்றைத் தடுக்கும் சதித்திட்டத்துடனேயே அரசு வரவு - செலவுத்திட்டத்தை (பட்ஜெட்டை) இழுத்தடிக்கிறது என்றும் (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆளுங்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நேற்று ஜனாதிபதி சந்தித்தவேளை...

# ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் நேற்று ஜனாதிபதி மஹிந்த மந்திராலோசனை

கொழும்பு, மே 03

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, எதிர்வரும் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கலந்துரையாடலின்போது சபை முதல்வர் மற்றும் பிரதம அமைப்பாளர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசின் சபை முதல்வராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத்தில் இதே பதவிகளை வகித்தவர்களுக்கே இந்தப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# வவுனியாவில் ஆணின் சடலம் மீட்பு

வவுனியா, மே 03

வவுனியா, செட்டிகுளம் கலைமகள் வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) வவுனியா பொலிஸார் மீட்டனர்.

சடலம் வவுனியா- செட்டிகுளத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஞானசிங்கம் சிந்துஜன் என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. பொதுமக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்திற்குரிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-சி)

# பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்-5 மாணவர்களுக்கான வலயநிலை நான்காவது பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். அதே சமயம் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் முதலாவது பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (ஒ)

# பாணின் விலை ஒரு ரூபாவினால் நள்ளிரவு முதல் கொழும்பில் உயர்வு

கொழும்பு, மே 03

ஒரு இறாத்தல் பாணின் விலை நேற்று நள்ளிரவு தொடக்கம் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் கொழும்பில் அறிவித்தது.

கோதுமைமாவின் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை அடுத்தே பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டது என அந்தச் சங்கத்தின் தலைவர் எம்.கே. ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கோதுமைமாவின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பாணின் விலை மாத்திரமே அதிகரிக்கப்பட்டது எனத் தெரிவித்த அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர், ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகளில் மாற்றங்கள் ஏற்படாது எனவும் உறுதியளித்துள்ளார்.

# கதிர்காமத்துக்கான பாத யாத்திரை சந்நிதியிலிருந்து இன்று ஆரம்பம்

வடமராட்சி, மே 3

கதிர்காமக்கந்தன் வருடாந்தப் பெருந் திருவிழாவை ஒட்டி வருடந்தோறும் இடம்பெற்றுவரும் பாதயாத்திரை இம்முறை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகிறது.

கடந்த 23 ஆண்டுகளுக்கு மேலாக அகில இலங்கை கதிர்காம வேல்முருகக் கந்தவேள் பாதயாத்திரைச் சங்கத்தினால் அதன் தலைவர் யோகி ஸ்ரீசிவாச்சந்திரி சிவகுமாரானந்தா தலைமையில் இப்பாத யாத்திரை நடைபெற்று வருகிறது.

''வேலின் வேலைத் தாங்குவது எமது வேலை'' என்னும் மகுடவாசகத்தை முன்நிறுத்தி 6 அடி உயரமான ஆதிகால கதிர்காமக் கந்தன் வேலுடன் இப்பாத யாத்திரைக் குழுவினர் கதிர்காமத்தை நோக்கிச் செல்வார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் இன்று திங்கட்கிமை காலை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் கதிர்காமக் கந்தன் வேல் வைக்கப்பட்டு விசேட அபிசேக பூசைகளைத் தொடர்ந்து பாத யாத்திரை புறப்படும்.

இப்பாத யாத்திரைக் குழுவினர் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், மட்டுவில், சரசாலை, கொடிகாமம் வழியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் ஊடாக மூன்றுமாதங்களில் கதிர்காமக் கந்தன் பெருந்திருவிழா கொடியேற்ற தினத்தில் அங்கு சென்றடைவர். (ஒ-236)

## அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு

# அமைச்சுகள், அரச நிறுவனங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்குமாறு ஜனாதிபதி திறைசேரிக்கு பணிப்பு

கொழும்பு, மே 03

எதிர்வரும் மூன்றுமாத காலத்துக்கான ஒவ்வொரு அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அவசியப்படும் நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறைசேரியின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுவரை நடைமுறையிலிருந்த இடைக்காலக் கணக்கு அறிக்கை ஏப்ரல் 30ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளதோடு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குமான நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் திறைசேரியின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் சிங்களப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமொன்று நிறைவேற்றப்படாததன் காரணமாகக் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இடைக்காலக் கணக்கறிக்கையொன்றின் ஊடாக அவசியமான நிதித் தொகைகள் ஒதுக்கப்பட்டன. ஆனாலும் எதிர்வரும் மூன்றுமாத காலத்துக்குமான இடைக்காலக் கணக்கறிக்கை ஒன்று நிறைவேற்றப்பட மாட்டாது என்பதால் ஜனாதிபதியினால் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இடைக்காலக் கணக்குஅறிக்கையொன்றோ, வரவு - செலவுத் திட்டமொன்றோ முன்வைக்கப்படும் வரையிலும் அரசமைப்பின் 150/3 இன் விதிக்குஅமைய அவசியமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அமைகிறது எனவும் அவர் விளக்கமளித்துள்ளார். (ஒ-206)





ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சி மையம்
An ISO 9001:2000 Certified Company
veta
Experts in English Training
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
May மாதத்திற்கான பிரிவுகள் ஆரம்பம்
Batch I - Sat,Sun 8.00 a.m.
Batch II - Sat,Sun 3.30 p.m.
Batch III - Mon,Wed,Fri 9.30 a.m.
Batch IV - Mon,Wed,Fri 4.00 p.m.
நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.
DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403


## மரண அறிவித்தல்

### கந்தையா நாகராஜா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தியேட்டர் லேன், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகராஜா (ஓய்வுபெற்ற ANZ GRINOCAYS வங்கி உதவிச் சிறாப்பர்) நேற்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற ஓவசியர் சுப்பையா மற்றும் திருமதி சுப்பையா, திரு.திருமதி மயில்வாகனம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் இந்துமதி ஆகியோரின் கணவரும் யசோதை (கனடா), ஆனந்தி (ஆசிரியை, உடுவில் மான்ஸ் பாடசாலை), காலஞ்சென்ற தமயந்தி மற்றும் Dr. பரமேஸ்வரன் (கண்டி வைத்தியசாலை), அகிலன் (U.K.) ஆகியோரின் அன்புத்தந்தையும் கிரிதரனின் (கனடா) மாமனாரும் இஷானின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தியேட்டர் லேன்,
இணுவில்.

தகவல்:
நா.பரமேஸ்வரன் (மகன்).


COMPUTER COURSES
Diploma in Computerized Accounting
Tally, Quick Book, Accpac M.Y.O.B
Diploma in Video Editing
Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio,. Adobe After Effe. Nuendo,
Diploma in AutoCAD
2D & 3D Modeling
Adv. Dip. in Hardware & Networking
புதிய பிரிவுகள் ஆரம்பம்
100%
மேலதிக விபரங்களுக்கு
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். Tel: 021-222 4403


## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் தபேந்திரன்

(சுகாதாரத்திணைக்களம், முல்லைத்தீவு)

கயட்டை, ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பூமாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் தபேந்திரன் (சுகாதாரத்திணைக்களம், முல்லைத்தீவு) அவர்கள் நேற்று (02.05.2010) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி இராசகிளி அண்ணாச்சாமி, ஜெயேந்திரன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ம.அண்ணாச்சாமி (இ.போ.சபை முன்னாள் நடத்துநர்), புனிதவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆவரங்கால் கிழக்கு கவிடுதூவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கயட்டை,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

தகவல் :
கண.கிருஷ்ணராஜன்
(பேரமகன்).

### கணேசு தேவராசா



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு தேவராசா 29.04.2010 வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-05-2010) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (97533)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜனாதிபதியின் மே தின அழைப்பு

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கும், நாட்டின் அபிவிருத்திக்காக உழைப்பதற்கும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அழைட்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அரசாங்கக் கட்சியின் மே தின விழாவில் வைத்து அவர் இந்த அழைப்பை விடுத்திருக் கிறார்.

நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான, உகந்த திட்டங்ளை வகுத்து நடை முறைப்படுத்தக்கூடிய அரசியல் வலுவும் நாடாளுமன்றப் பலமும் ஜனாதிபதிக்கு நிறையவும் உண்டு. அவ்வாறு இருக்க, எதிர்க்கட்சிகளின் ஆதரவை அவர் கேட்பது ஏன் அல்லது எதனைக் கருதி இவ்வாறு பகிரங்க அழைப்புவிடுத்திருக்கிறார் என்ற கேள்வி மிகப் பலரின் மனங்களில் எழும்.

மே தின விழாவில் வித்தியாசமான ஒரு கருத்தை ஆச்சரியப்படக் கூடியதாக முன்வைக்க வேண்டும் என்ற 'திறிலு'டனும் ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்திருக்கக்கூடும் என்று ஒரு சாரார் நினைக்கக் கூடும். ஒரு விடயத்தின் பொருட்டுப் பல கருத்துக்கள் முளைப்பது இயல்பே.

ஜனாதிபதி என்ற வகையில் அதீத அதிகாரங்களைக் கொண்டுள்ள மஹிந்த, ஓர் உள்ளார்ந்த தேவை கருதியே இந்த அழைப்பை விடுத்திருப்பார்.

எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொண்டால், அவர்களை கைக்குள் போட்டுக்கொண்டால், தமது அடுத்த 6 வருட ஆட்சியையும் பிசிறின்றி 'சந்தோஷமாக' நடத்தலாம் - ஓட்டலாம் - என்று அவர் கருதியிருக்கக்கூடும்.

தமது அபிவிருத்தித் திட்டங்களையும் சரி, அரசியல் திட்டங்களையும் சரி எதிர்க்கட்சிகளின் ஆதரவோ, உதவியோ இன்றி தனித்துச் செயற்படக்கூடிய அதிகார பலமும் ஆட்சிப் பலமும் இருக்கும் போது, எதிர்க்கட்சிகளை தம்முடன் உள்வாங்குவது, அதற்காக ஆதரவு கேட்டு அழைப்பு விடுவது தமது பெருந்தன்மையைப் பிரதிபலிக்கும் என்று கூட ஜனாதிபதி நினைத்திருக்கலாம்.

அவரது அழைப்பும் அதற்கான நோக்கும் போக்கும் வெவ்வேறு வகையான உள்நோக்கங்களுடன் கூடிய இலக்குகளைக் கொண்டிருக்கலாம்....!

நாட்டில் அபிவிருத்திக்காக எதிர்க்கட்சி களின் ஆதரவைக் கேட்கும் ஜனாதிபதி, நாட்டின் மிகப்பெரிய விவகாரமான இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் எதிர்க் கட்சிகளின் ஆதரவைக் கேட்காமல் விட்டது ஏன்?

நாட்டின் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ள இன விவகாரத்தை சகல அரசியற் கட்சிகளும் சேர்ந்து தீர்த்து வைக்க வேண்டியதும் அதனை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதும் உடனடித் தேவையாகும். அதனைப் புறமொதுக்கி அல்லது இரண்டாவது வரிசையில் வைத்தே ஜனாதிபதி பார்க்கிறார் என்ற நிலைப்பாடு அவரது மே தின அழைப்பிலிருந்து வெளிப்படுகிறது.

நாட்டில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வந்த போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதோடு, இனப்பிரச்சினை இந்த நாட்டின் பெரிய விவகாரங்களில் ஒன்று என்ற நிலையில் இருந்து கீழே வீழ்த்தி நசுக்கப்பட்டு விட்டது என்ற மனநிலை ஜனாதிபதி மஹிந்தவுக்கு வந்து விட்டதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

தமிழ் மக்களுக்கு உள்ளதாகக் காட்டப்படும் பிரச்சினைகளை, அரசு தனித்து நின்று, தனது அதிகாரத்தால் நசுக்கிவிடலாம் என்று ஜனாதிபதி நினைக்கிறாரோ என்னவோ?

நாட்டுக்கு அபிவிருத்தி, வளர்ச்சி எத்துணை அவசியமோ, அதேபோன்று இனப்பிரச்சினைக்குரிய உகந்த, நல்லிணக்கத்துடனான தமிழர்களுக்குரிய பிரிக்கப்பட முடியாத, பலவீனப்படுத்தப்படாத உரிமைகளை வழங்கக் கூடிய காத்திரமான, கனதியான தீர்வு தேவை. அதற்கும் கூட, நாட்டின் சகல கட்சிகளின் ஒத்துழைப்புத் தேவையே. ஜனாதிபதி தமது மே தின அழைப்பில் இதனைத் தவிர்த்துக் கொண்டது ஏன்?

அதிகாரம் முழு அளவில் தன்னிடம் குவிந்து கிடப்பதால், எவரின் உதவியுமின்றி தமது எண்ணத்துக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப அதனைத் தீர்க்கலாம்.தாம் கிள்ளித் தெளிப்பதைப் பெற்றுக் கொண்டு தமிழர்கள் திருப்தியடைய வேண்டியதே என்று ஏகாதிபத்திய வரம்புக்குள் நின்று எண்ணுகிறார் போலும்!

தமிழர்களை சம உரிமைகள் இல்லாத இரண்டாம் தரப் பிரசைகளாக்கி, அற்ப சொற்ப சலுகைகளைப் போட்டு, பெரும்பான்மையினரின் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப எம்மவரை அடிமை கொள்ளும் நிலை உருவாக்க உள்ளார்ந்த திட்டம் இருப்பதால், ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவு தேவையில்லையென்று கருதினாரோ என்னவோ.....!

கடந்த 60 வருடங்களாக தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டம் அகிம்சை வழியிலும் சரி, ஆயுதப் போராட்டத்திலும் சரி தோற்றுவிட்டது. அதனால் தமிழர்கள் இலங்கை அரசுகள் வழங்கும் அற்ப சொற்ப சலுகைகளுடன் கைகட்டி, வாய்பொத்தி நின்று வாங்க வேண்டியவர்களே என்று அதிகாரம் தலைக்கேறிய நிலையையில் ஜனாதிபதி செயற்படுவார் என்பதற்கான ஓர் சமிக்ஞையாகவும் அவரது மே தின உரையைக் கொள்ளலாம்.

ஆகையால் இது விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் மிக எச்சரிக்கையுடனும் புத்திசாதுரியத்துடனும் செயற்பட வேண்டிய தேவை உடனடியாக எழுந்துள்ளது. எங்களுடைய பிரிக்க முடியாத பிறப்புரிமைகளைப் பெற்றுக்கொள்வது என்ற அடிப்படை நிலையில் எந்தத் தருணத்திலும் தளம்பிவிடக் கூடாது, விழிப்புணர்ச்சியுடனும், விவேகத்துடனும், சமயோசிதமாகவும் தக்க திட்டங்களைத் தீட்டிச் செயற்பட வேண்டும். எங்களுக்குரிய உரிமைகளைப் பெறுவதில் இப்போது பிழைத்துப் போனால் எப்போதுமே தலையை உயர்த்த முடியாத பீடைநிலை நிரந்தரமாகி விடும். இதனை மன்தில் வைத்து ஒற்றுமையுடனும் எச்சரிக்கையுடனும் உழைக்க வேண்டும்.

# ஜனாதிபதி மூன்றாம் முறையும் போட்டியிட அரசமைப்பில் வழி செய்ய ஆலோசனை

**நேற்று (02.05.2010) சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்திருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒருபகுதி இது**

பூட்டானிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடு திரும் பியதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றில் கையெழுத்திட்டார். கடந்த வாரம் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்ட 37 அமைச்சர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் பற்றி அறிவித்தலில் தெரிவிக் கப்பட்டிருந்தது. அறிவித்தல் நாளைய தினம் (திங்கள்) வெளிப்படை யாகும்.

பூட்டானில் ராஜபக்ஷ வெளியிட்டிருந்த கருத்துக்களை உள்நாட்டிலாவது அமுல் நடத்துவதற்கு அவர் முயற்சி செய்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக விருக்கின்றது.பூட்டானில் அவர் வெளியிட்டிருந்த ஒரு கருத்து பின்வருமாறு :-

தற்போது நடைமுறையில் உள்ள பொறிமுறையை மேம்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். பகுப்பாய்வு, மீளாய்வு, மீள்வலு வூட்டல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக நாம் இதனைச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இதனைத்தான் அமைச்சர்கள் தம் பணிகளைச் செய்வதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலதிக பங்களிப்புக்களைச் செய்யும் விதத்திலும் செயல்படுத்த அவர் விரும்புவதாகத் தெரிகின்றது. நேற்று நடைபெறவிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலும் இதனையே ஜனாதிபதி வலியுறுத்துவார் என்று எதிர் பார்க்கப்பட்டது. புதன்கிழமை நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்திலும் இதனையே அவர் வலியுறுத்துவார் என்றும் அவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயங்களில் எல்லாம் முக்கியபங்களிப்பில் ஈடுபட விருப்பவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே என்று தெரிகின்றது. வளர்ச்சிப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள மற்ற எல்லா அமைச்சுக்களையும் ஒன்றிணைத்து செயல்படுத்தும் பொறுப்பு இவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி, ஜவுளித் தொழில், ஊரக வளர்ச்சி, முதலீட்டுத்துறை, மகநெகும மற்றும் சமுர்த்தித்துறை போன்ற அமைச்சுகள் இதில் அடங்கும்.

முதலீட்டுச் சபை - இது வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்கும் பணியை மேற்கொள்ளும் - பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அடுத்துவரும் வாரத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் புதிய நிர் வாகம் புதிய உத்வேகத்துடன் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதியும் பல பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றார்.அதில் ஒன்று கண்டி மாவட்டத்திலிருந்து நியமனம் பெறவிருக்கும் அமைச்சர்களுக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைப்பது. நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் சில வாக்களிப்பு நிலையங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்து ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெறவிருந்தமையே இதற்குக் காரணம். மேலும் சமசமாஜக்கட்சியிலிருந்து திஸ்ஸ விதாரண அமைச்சரவைக்கு ஈர்க்கப்படுவதும் ஒரு விடயமாகும். இலங்கையில் மிகப் பழைய கட்சியான சமசமாஜக் கட்சியிலிருந்து ஒருவர் அமைச்சரவைக்குள் ஈர்க்கப்படாமல் போனமை ஆச்சரியத்துக் குரியதுதான். இலங்கையில் இடதுசாரிகளின் பழம் பெரும் கட்சி களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருப்பது கவனத்துக்குரியது.

**அரசமைப்பு மாற்றங்கள்.**

ஜனாதிபதி தற்போது ஆலோசித்து வரும் விடயங்களில் அரசமைப்பில் மாற்றங்கள் செய்யும் விடயமும் ஒன்று என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இருதடவைகளுடன் வரையறை செய்யும் தற்போது நடைமுறையில் உள்ள அம்சங்களை மாற்றி இன்னொருதடவையும் பதிவியில் இருக்க வகை செய்யும் வகையில் அரசமைப்பை மாற்றுவது அல்லது பதவிக்காலத்தை வரையறையின்றி நீடிப்பதற்கு வழி செய்வது போன்ற விடயங்கள் ஆராயப் படுவதாக கூறப்படுகின்றது. எது வானாலும் தற்பொழுது ஜனாதிபதி முறை அமுலில் இருக்கும் நாடுகளில் இரண்டுமுறைக்குமேல் பதவியில் இருப்பதில்லை என்ற கோட்பாட்டினை இது மீறு வதாக அமையக் கூடும். இவை ஜனாதிபதி நவம்பரில் பதவிப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் நடைமுறைக்கு வருமா என்பது தெரியவில்லை. வேறு பல திருத்தங்களும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

## முக்கிய அமைச்சுகள் ராஜபக்ஷ சகோதரர்களின் கட்டுப்பாட்டில்

வழமைபோல் அமைச்சரவையொன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் மனக்கசப்புகள் வெளிவருவது இம்முறையும் இடம் பெற்றுள்ளது. புதிய பதவிகளை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஊடகங்களை சந்தித்த போது பல அமைச்சர்கள் முகங்களை மகிழ்ச்சியாகக் காட்டிக் கொண்டார்கள். தங்களுக்கு நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு, அல்லது தேசிய பாரம்பரிய சொத்துக்கள் மற்றும் கலாசாரத்து றைகள் போன்ற முக்கிய அமைச்சுக் களைத் தந்தமைக்காக அவர்கள் ஜனாதிபதியைப் பாராட்டிக் கொண்டார்கள். ஆனால் தமது நண்பர்கள் மற்றும் ஆதரவாளர் களுக்கு தமது ஏமாற்றங்களை வெளியிடாமல் மறைக்க அவர்களால் முடிய வில்லை.

முக்கியமான அமைச்சுக்கள் யாவும் ராஜபக்ஷ சகோதரர்களின் இறுக்கமான கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். பிரதம மந்திரி டி.எம். ஜயரட்ண, வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வர்த்தகம் தொழில் துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மின்சாரம் மற்றும் சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தபால் தொலை தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, விவசாய அமைச்சர் மகிந்தயாப்பா அபயவர்தன மற்றும் உள்நாட்டு வர்த்தகம் கூட்டுறவு அமைச்சர் ஜோன்சன் பெர்ணாண்டோ ஆகியவர்கள் மட்டுமே விதிவிலக் கானவர்கள். ஏனைய அனைவரும் ஓரளவு விரக்தியுற்றவர்களாகவே காணப்படுவதாகக் கூறலாம்.

**முன்னாள் பிரதமர் ஏமாற்றம்**

பழைய பதவியிலேயே தாம் அமர்த்தப்படாமை குறித்து முன்னாள் பிரதம மந்திரி ரட்ணசிறிவிக்கிரம நாயக்க ஏமாற்ற மடைந்திருப்பார் என்பது புரிந்து கொள்ளக் கூடிய விடயமே. இந்தப் பதவியில் ஜயரட்ண அதிக ஆர்வம் கொண்டிருந்திருப்பார் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவே செய்யும். அமைச்சரவையிலிருந்து ஒதுங்கிக் கொள்ளும்படி செய்ய முயற்சிகள் இடம் பெற்றிருந்தாலும் அவர் அப்படி செய்யவில்லை.

பொதுமுகாமைத்துவம் மற்றும் சீரமைப்பு அமைச்சு அவருக்கு வழங்கப்பட்டமை பலரை குழப்பமடையச் செய்தது.

ஐ.தே.கவின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான காமினி திஸாநாயகாவின் புதல்வரும் நுவரெலிய தொகுதி எம்.பி.யுமான நவீன் திஸநாயக்க பிரதி அமைச்சர் பதவியொன்றை ஏற்க மறுத்து அமைச்சர் பதவியொன்று கிடைப்பதற் கான சந்தர்ப்பம் வரும் வரை காத்திருப்பதாக ஜனாதிபதியிடம் தெரிவித்து விட்டார்.

நுவரெலியா தொகுதியில் சிங்கள வேட்பாளர்கள் மத்தியில் தாம் முதல் இடத்தில் வந்திருப்பதால் தமக்கு அமைச் சர் பதவி வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் ஆனால் இரண்டாவதாக வந்த சி.பி.ரட்ணாயக்காவுக்கு அமைச்சர் பதவி கிடைத்துள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். பலர் தங்களுக்குத் தமது பழைய அமைச்சுகளே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இவ்வாறான மனக்கசப்பு எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியிலும் காணப்பட்டாலும் வெளிப்படையாக எதுவும் தெரியவில்லை. இருந்தாலும் தேர்தல்களில் தொடர்ச்சியான தோல்விகள் ஏற்பட்டுவருவது கட்சியில் குமுறல்களை உருவாக்குவதாகவே தெரிகின்றது. அமைச்சர்களைப் பொறுத்தவரை தாம் நினைத்தபதவிகள் கிடைக்கா விட்டாலும் வேறு அமைச்சுகளும் கார்களும் பாதுகாவலர்களும் வேறு வசதிகளும் கிடைத்துள்ளன. ஆனால் எதிர்க்கட்சிப் பிரமுகர்க ளுக்கு அவ்வாறான வாய்ப்புகள் கிடையா. எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவே இப் பொழுது எல்லார் கவனத்தையும் ஈர்ப்பவராக இருக்கின்றார்.

கட்சியின் ஒருபகுதியினர் தலைமைப் பதவியிலிருந்து அவர் விலகிக் கொண்டும் புதிய முகங்கள் தோன்றவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் விக்கிரமசிங்க அவ்வாறான எண்ணத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்த போதிலும் தலைமைப் பொறுப்புகளை இளம் உறுப்பினர்களிடம் கொடுத்து விட்டு வெளிநாட்டில் நீண்ட காலம் தங்கியிருப்பது பற்றி அவர் ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

கடந்த வாரம் மூன்று முக்கிய விடயங்கள் குறித்து அவர் கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைகள் நடத்தியதாகக் கூறப்பட்டது. ஒன்று கட்சியின் உள்ளே மேல் கட்டமைப்பில் புதிய குழுவொன்று உருவாக வேண்டும். இரண்டாவது கட்சியின் ஒற்றுமையைக் கட்டிக்காப்பது. கட்சியின் நோக்கங்களை அடைவதற்கு தொடர்ந்தும் போராடுவது, மூன்றாவது அடுத்த ஆண்டில் நடைபெற விருக்கும் உள்ளுராட்சி தேர்தல்களையொட்டி இந்த விடயங்களை அவசரமாகக் கவனிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. (ப)

# நாளை

| | |
|---|---|
| சித்திரை 21 | 04.05.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி | : ஷஷ்டி |
| | மு.இ. 07.53 வரை |
| நட்சத்திரம் | : பூராடம் |
| | மு.ப. 09.23 வரை |
| சுபநேரம் | : 10.26 -11.56 |
| ராகுகாலம் | : 02.56-04.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

பருத்தித்துறை நகர எல்லைக்குள் ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் மருத்துவமனைக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உண்டு.

01. ஆய்வு கூடப் பரிசோதகர் (MLT)/ ஆய்வு கூட உதவியாளர் (Lab Assistant)
02. தாதிய உத்தியோகத்தர்/பயிற்சி தாதியர்
03. மருந்தாளர்/உதவி மருந்தாளர்

முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. தகுதியானோர் தமது விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 10.05.2010இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மு.பாலகிருஷ்ணன்,
சிவகாமி நிலையம், ஐயனார் வீதி, பருத்தித்துறை.
(97531)



## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 547
திகதி 2010/05/01

சுப்பர் இலக்கம் 02
வெல்லப்பட்ட இலக்கங்கள் 03 22 57 59

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின | ரூ. 25,060,358.40 வீகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீகிதம் | 06. |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீகிதம் | 163 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீகிதம் | 325 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீகிதம் | 8,233 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 50.00 வீகிதம் | 4,718 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 118,345 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 30.00 வீகிதம் | 18,982 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 5,946,560.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மீதி தொகை பணமாக

[illegible]

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 25,130,205.60

தேசிய லொத்தர் சபை


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 22 ★ 07 ★ 1942

ஆண்டவன் அடியில் 03 ★ 04 ★ 2010



### இராசையா இராசரத்தினம்

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
அன்பால் எம்மை அரவணைத்துப்
பண்பால் எம்மை நல்வழி நடத்தி
நிலையில்லா இவ்வுலக வாழ்வதனில்
நீங்கா நினைவுகளை எம் மனதில் நிலைநிறுத்தி
நிலையான வாழ்வதனில் இணைந்து கொண்டீர்
உம் வாழ்வு இறை நிழலில் சாந்தி பெற
என்றென்றும் தொழுகின்றோம் அரன்பாதம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து உதவிகள் பல நல்கி, அஞ்சலி செய்தும் எமக்கு ஆறுதல் கூறியும் தேற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (03.05.2010) திங்கட்கிழமை முற்பகல் 10மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

இல. 510, கே.கே.எஸ் வீதி,
மனோகரா திரையரங்குச் சந்தி,
யாழ்ப்பாணம். [5ஆம் வட்டாரம், மண்கும்பான்]
குடும்பத்தினர்.
(சி/567253)

## மரண அறிவித்தல்



### கோகிலம் பாலசுந்தரம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, மகாரம்பைக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட கோகிலம் பாலசுந்தரம் காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய தபாலதிபர் காலஞ்சென்ற சு. பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், சிறீதரன், சுலோஜனா, ரவீந்திரன், முரளிதரன், சுமதி, சுகந்தி, சிந்துஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-05-2010) திங்கட்கிழமை வவுனியா மகாரம்பைக்குளத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, விபுலானந்தர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
41, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (97534)

தகவல்:
சு. கனகாம்பிகை,
கோ. பத்மாவதி, (மைத்துனிகள்).

## 'சைவ வித்தியா' மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே.3

யாழ்.சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 'சைவ வித்தியா' மலர் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச்சங்கத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கு.சோமசுந்தரம் கலந்து கொள்வார். (ஒ-10)

## தொலைபேசிச் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், மே.3

திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில் போன்ற பகுதிகளுக்கு கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விஸ்தரிக்கப்படவுள்ளன.

திருநெல்வேலிப்பகுதியில் புதிதாகப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றை விரைவில் அமைத்து தொலைபேசி இணைப்புக்களை விஸ்தரிப்பதற்கு ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (04-224)

## மக்கள் கோரிக்கை

நெடுந்தீவு, மே.3

நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழு, பொதுக்குழு, இயக்குநர் சபைக்கான தேர்தல்களை விரைவில் நடத்தி மக்களிடம் சங்கத்தின் நிர்வாகத்தைக் கையளிக்க விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (04-111)

## கைதடி இல்லத்தில் இரவில் மருத்துவ சேவையின்றி முதியோர் சிரமம்

நாவற்குழி, மே.3

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வதிவிட வைத்திய அதிகாரி இல்லாததால் அவசரத் தேவைகளுக்கு மருத்துவ உதவி பெறுவது கடினமாக உள்ளது.

தற்போது பகல் வேளைகளில் கைதடி ஆரம்ப மருத்துவப் பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர் அருள்நேசன் சிறந்த சேவையை வழங்கி வருகின்றார். ஆனால் இரவு வேளைகளில் அவசர மருத்துவத் தேவை ஏற்படும் போது அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்திய சாலைக்கே நோயாளர்களை அனுப்பி வைக்க வேண்டியுள்ளது. (ஒ-க-121)

## வடமராட்சி கிழக்கில் விரைவில் மீள்குடியேற்றம்

வடமராட்சி, மே.3

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்களை விரைவில் மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்டச் செயலகம் எடுத்து வருகின்றது.

இப் பிரதேசத்திலுள்ள செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக அப்பகுதிகளில் படையினரால் கண்ணிவெடி அகற்றும் பணி நிறைவுற்றுள்ளதாகவும், இதனையடுத்து மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாக அரச அதிகாரிகள், படைத் தளபதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிகின்றது. (ஒ-236)


## வேலைக்கு ஆள்கள் தேவை

★ பில் கிளார்க்
★ உணவு பரிமாறுபவர்
★ ரீ மேக்கர்.

ஐரயல் கிறீம் ஹவுஸ்,
இல 458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி O.P.D முன்பாக)
(97529)



## THE ROYAL COLLEGE OF JAFFNA

மூன்று மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில...
[illegible]
யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. தொ.பே. 0776751649



## பாலர் பாடசாலை ஆசிரியைகள் தேவை

அரியாலை, கோப்பாய், நீர்வேலி, நல்லூர், சாவகச்சேரி, சுன்னாகம், உடுப்பிட்டி ஆகிய இடங்களுக்கு அருகில் வசிக்கும் க.பொ.த (சாதாரணம்/உயர்தரம்) சித்தியடைந்த ஆங்கில அறிவுள்ள, அர்ப்பணிப்புள்ள ஆசிரியைகள் தேவை.

முன் அனுபவம் தேவையில்லை. நேரில் வரவும். நாளை (04.05.2010) செவ்வாய்க் கிழமை நேரம் பி.ப 2மணி.

140, கோயில் வீதி, நல்லூர்.
(Unicef/ Unops முன்பாக)
(சி/567259)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 22 ★ 07 ★ 1942

இறைவன் அடியில் 03 ★ 04 ★ 2010



### இராசையா இராசரத்தினம்

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
சென்று முப்பது நாள் ஆனாலும் என்றென்றும்
நீங்காது உங்கள் நினைவுகள்.

லலிதா ஜுவல்லறி,
105, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (97530)
மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் இராஜேஸ்வரன்

(உரிமையாளர், வேல்முருகன் றேடர்ஸ்)



எழுதுமட்டுவாள் தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர், மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராஜேஸ்வரன் நேற்று (02.05.2010) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.50, மருதடி வீதி,
நல்லூர். (97528)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மங்கையர்க்கரசி ஜெயபாலன் (கேதீஸ்)



சரவணையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி ஜெயபாலன் 29.04.2010 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் ஜெயபாலனின் அன்பு மனைவியும் ஜானி, கீதன், கீத்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சீனிவாசகம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் (கனடா) அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி மகேசன் தம்பதியினரின் (சாவகச்சேரி) மருமகளும் தேவராசா (ராசா), பத்மாவதி, சண்முகராசன் (பவா-கனடா), கனகராஜன் (பாபுஜி-லண்டன்), பஞ்சாட்சரதேவி (மஞ்சு), ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மபாலன் (ஜேர்மனி), சாந்தினி அருந்தவபாலன், மாலினி அழகராசா (ஜேர்மனி), விக்னகுமார் (நோர்வே), உத்தரை, புஷ்பநாதன், மஞ்சுளா (கனடா), ஞானசேகரவேல், சுகுணாதேவி (லண்டன்), நாகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் சறோஜினி (ஜேர்மனி), அருந்தவபாலன், அழகராசா (ஜேர்மனி), தாமராதேவி (நோர்வே) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 06.05.2010 வியாழக் கிழமை மு.ப. 10 மணிமுதல் 11.30 மணிவரைக்கும் Hospital Pitie Salpetriere, 22,Rue Bruant - Paris 75013 (Metro Chevaterte) என்னும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மதியம் ஒரு மணிக்கு SALLE LANDOWSKI, 71 Rue Rondeaux - 75020 Paris (Metro - Gambetta) என்னும் முகவரியில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜெயபாலன் - பிரான்ஸ் -0033143859731
0033622317773
சண்முகராஜன் - கனடா - 0019055543671
ஆனந்தராஜா - ஜேர்மனி - 004921311769023

தகவல் :
குடும்பத்தினர்.
(வே.குணரத்தினம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெங்களூர் 'ஸியாற்' அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் 'ஸியாற்' அக்கடமியின் அனிமேஷன் பயிற்றுவிப்பாளர் ஆர்.இராஜேஸ், யாழ்.மக்நெற் அக்கடமியின் பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ்.சுகுணன், நிலையப் பணிப்பாளர் கே.கமலநாதன் ஆகியோர் சான்றிதழ் வழங்குவதை முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்தில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# இளம் சந்ததியினர் தந்தை செல்வாவை அறியும் வகையில் புதிய கட்டடத் தொகுதியொன்று விரைவில் அமைக்கப்படும்

## அறங்காவலர்சபை உறுப்பினர் தகவல்

யாழ்ப்பாணம்,மே 3

கற்றறிந்த பொதுமக்கள் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் காப்பகம், நூல் நிலையம், மண்டபம் உள்ளடங்கிய கட்டடத் தொகுதியை தந்தை செல்வா நினைவாலய வளாகத்தினுள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என தந்தை செல்வா அறங்காவற்குழு உறுப்பினர் பி.கனகசபாபதி தெரிவித்தார்.

தந்தை செல்வநாயகத்தின் 33ஆவது சிரார்த்ததின நிகழ்வுகள் கடந்த 26ஆம் திகதி அவரது நினைவாலயச் சதுக்கத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே பி.கனகசபாபதி இவ்வாறு கூறினார். இதில் மேலும் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

80அடி நீளமும் 30அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்படவிருக்கும் இந்தக் கட்டடத்தொகுதிமூலம் தந்தை செல்வாவின் கொள்கைகளையும், இலட்சியங்களையும் அடுத்த சந்ததியினருக்கும் எத்துச்செல்லக்கூடிய பணியை மேற்கொள்ள முடியும்.

தந்தையின் பிறந்த தினம், சிரார்த்ததினம் ஆகியவற்றை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு இதுவரை ஏற்ற மண்டபம் கிடைக்காமையால் தற்காலிகமாக அமைக்கப்படும் கொட்டகைகளிலேயே இவை இடம் பெற்று வந்தன. இனிவரும் காலங்களில் இடம்பெறும் நினைவுரைகள், நிகழ்வுகள் புதிய மண்டபத்திலேயே இடம்பெற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

அத்துடன், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு மேலும் சில திட்டங்களை நிறைவேற்றத் தீர்மானித்திருக்கின்றது.

நினைவுத்தூபியின் முன்புறமுள்ள சிமெந்திலான தந்தையின் சிலையை வெண்கலச்சிலையாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

எண்பது அடி உயரமான நினைவுத் தூபி சீர்செய்யப்படுவதுடன் இடி தாங்கியும் சிவப்பு நிறவிளக்கும் தூபியின் உச்சியில் பொருத்தப்படவேண்டும்.

தமிழ்த் தேசிய வரலாற்றின் ஒட்டுமொத்தப் பார்வையாக தந்தை செல்வாவின் உரைகள், மாநாட்டு தலைமைப் பேருரைகள், பத்திரிகை அறிக்கைகள் என்பனவற்றை நூல்வடிவில் வெளியிடுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

தந்தையின் வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் இணையத்தளம் ஒன்றினை உருவாக்குவதற்கும் திட்டம் உள்ளது.

ஆண்டுதோறும் நடத்தப்படும் நினைவுப் பேருரை நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு வசதியாக நிரந்தர வைப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. அத்துடன் நினைவாலய வளாகம் முறையாகச் செப்பனிடப்பட்டு அழகுபடுத்தப்படவேண்டும்.

ஐந்து பாகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ள தந்தை செல்வாபற்றிய வரலாற்று ஆவண நூலில் பின் இணைப்பாக இணைக்கப்படக்கூடிய ஆவணங்கள், புகைப்படங்கள் என்பனவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றை வழங்கி உதவும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பணிகள் நிறைவு பெறுவதற்கு அனைத்துத் தமிழ் பேசும் மக்களினதும் பேராதரவினை வேண்டி நிற்கிறோம் -என்றார். (04-க-14)

# தொழிநுட்பப் பயிற்சி நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 3

மோட்டார் வாகனத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையமொன்று இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஸ்ரான்லி வீதி, 214ஆம் இலக்கத்தில் காலை 8.30 மணிக்கு பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதாக 'டீஸல் மோட்டார் எஞ்சினியறிங் பிஎல்சி'யின் யாழ். கிளையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலேயே இந்த நிறுவனத்தால் அமைக்கப்படும் இரண்டாவது பயிற்சி நிலையம் இதுவென்பது குறிப்பிடத்தக்க தாகும். (201-க)

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 3

மாதகல் - பாணகவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருப்பதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

காலை 6.20 மணி தொடக்கம் 7.20 மணி வரையான மேடலக்கின சுப முகூர்த்த வேளையில் அம்பாளுக்கும், விநாயகர் போன்ற பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (க-5)

# யாழ். - காரைநகர் இடையே 784 ஆம் இலக்க பஸ்சேவை ஆரம்பம்

காரைநகர், மே 3

காரைநகரில் இருந்து யாழ்.நகருக்கான 784 இலக்க இ.போ.ச. பஸ்சேவை கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் இருந்து யாழ்.நகருக்குச் செல்லும் அரச அலுவலர்கள், வைத்திய சாலைக்குச் செல்வோர், வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் எனப் பலரும் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கையை அடுத்தே 784 இலக்க பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவையூடாக மிகக் குறுகிய நேரத்தில் யாழ்.நகரை வந்தடையக்கூடியதாக உள்ளதாக காரைநகர் பயணிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தினமும் காலை 7.50 மணிக்கு துறைமுகத்திலிருந்து மேற்கு வீதி ஊடாக இந்த பஸ் யாழ்.நகரை நோக்கிச் செல்வதுடன் இரவு 7.30 மணிக்கு நகரில் இருந்து காரைநகரை நோக்கிப் புறப்படும்.

இதேவேளை காரைநகரில் இருந்து யாழ்.நகருக்கான கடைசி பஸ் சேவையின் நேரமும் நீடிக்கப்பட்டுள்ளது. மேற்கு வீதி ஊடாக 782 இலக்க பஸ் இரவு 7 மணிக்கும், கிழக்கு வீதி ஊடாக 786 இலக்க பஸ் இரவு 7.15 மணிக்கும் யாழ்.நகரை நோக்கிப் புறப்படுகின்றன. (04-250)

# தினமும் குவியும் கழிவுகளால் தூய்மையிழக்கும் ஆஸ்பத்திரிவீதி

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.நகரில் சத்திரச் சந்திக்கு அண்மையில் ஆஸ்பத்திரி வீதியோரத்தில் கழிவுப் பொருள்களை கொட்டுவதால் இப்பகுதியின் தூய்மை பாதிக்கப்படுவதாக அக்கறையுள்ளோரால் சுட்டிக்காட்டப்படுகிறது.



பொலித்தீன் பைகள், கடதாசிப் பைகள், கழிவுப் பெட்டிகள் உட்பட மற்றும் பல கழிவுப் பொருள்கள் இந்த வீதியோரத்தில் பெருமளவில் கொட்டப்பட்டு வருகின்றன.

இத்தகைய பொலித்தீன்களையும் மற்றும் கழிவுகளையும் கால்நடைகள், பறவைகள் என்பன தமது உணவுக்காக உண்டு வருகின்றன.

வீதியோரத்தில் கொட்டப்படும் இக்கழிவுகளால் இப்பகுதியின் தூய்மை மிகவும் பாதிக்கப்படுவதாகப் பாதசாரிகள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கழிவுகளைக் கால்நடைகள் தமது உணவுக்குப் பயன்படுத்துவதால் அவற்றிற்கும் நோய்கள் ஏற்பட்டு பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (04-224)

# செயற்கையான முறையில் பழுக்க வைத்த மாம்பழங்களை விற்றால் கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே 3

மாம்பழத்தை இயற்கையாகப் பழுக்க வைத்த பின்னரே அதனை விற்பனை செய்ய வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் வியாபாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் மாம்பழ 'சீசன்' ஆரம்பமாகியுள்ளது. குடாநாட்டுச் சந்தைகளில் மாம்பழங்கள் தாராளமாக விற்பனைக்கு வரத்தொடங்கியுள்ளன.

இந்தப் பருவகாலத்தில் மரங்களில் உள்ள மாங்காய்க்கு இரசாயன மருந்தை விசிறி அதனைச் செயற்கை முறையில் பழுக்க வைத்து, விற்பனை செய்யக்கூடாது என்றும் அவ்வாறு விற்பனை செய்வோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதாரப் பகுதினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய இரசாயன மருந்து விசிறப்பட்டு பழுக்க வைக்கப்படும் மாம்பழங்களை மக்கள் உண்பதால் அவர்களுக்குப் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே வியாபாரிகள் தாம் விற்பனை செய்யும் மாம்பழங்களை இயற்கையான முறையில் பழுக்க வைத்து சுகாதாரத்திற்கு ஏற்ற வகையில் மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு விற்பனை செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (04-224)

# வன்னிப்பகுதியில் சேதமடைந்த வர்த்தக நிலையங்களுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், மே 3

வன்னிப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கே திறைசேரியில் இருந்து இவ்வாறு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வணிகக் கைத்தொழில் வேளாண் ஒன்றியத்தின் தகவல் முகாமையாளர் கே.கோகுலன் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னேற்பாடாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு விசேட விண்ணப்ப படிவங்கள் நாளை செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவுக்கான விண்ணப்ப படிவங்களை வர்த்தகர்கள் அன்றைய தினமே பெற்றுப் பூர்த்தி செய்து தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வர்த்தக நிலையங்களுக்கு கனகபுரத்திலுள்ள வணிகக் கைத்தொழில் வேளாண் ஒன்றிய அலுவலகத்திலும் முல்லைத்தீவு மாவட்ட வர்த்தக நிலையங்களுக்கு முதலாம் யூனிற் யோகபுரம் மல்லாவியில் அமைந்துள்ள வேளாண் ஒன்றிய அலுவலகத்திலும் வைத்து இந்த விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (01-224)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.மே 3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களிடையே நடத்தப்பட்ட வலய மட்டத் தமிழ்த் தினப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:

**ஆக்கம் எழுத்து (பிரிவு - 1)**

முதலாம் இடம் - க.பிரவிந்தன், (நுணாவில் கிழ.அமிர்தாம்பிகை வித்தி), இரண்டாம் இடம் - ச.சங்கவி (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), மூன்றாம் இடம் - ம.கம்சாயினி (கச்சாய் அ.த.க.பா).

**கட்டுரை வரைதல் (பிரிவு - 2)**

முதலாம் இடம் - இ.தர்சனா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), இரண்டாம் இடம் - வி.பவிந்தினி (மட்டுவில் கமலாசனி வித்தி), மூன்றாம் இடம் - இ.தசானந் (மந்துவில் றோ.க.த.க.பா).

**கட்டுரை வரைதல் (பிரிவு - 3)**

முதலாம் இடம் - சி.லக்ஷிகா (கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை), இரண்டாம் இடம் - கு.றதீபா (மட்டுவில் கமலாசனி வித்தி), மூன்றாம் இடம் - மு.வினோராஜ் (உசன் இராமநாதன் ம.வி).

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் (பிரிவு - 4)**

முதலாம் இடம் - இ.சங்கீதா (கொடிகாமம் அ.த.க.பா), இரண்டாம் இடம் - ஸ்ரீ.உஸானந்தினி(உசன் இராமநாதன் ம.வி), மூன்றாம் இடம் - சி.கமலதீபன் (சந்திரமௌலீச வித்தி,மட்டு).

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் (பிரிவு - 5)**

முதலாம் இடம் - ப.கஜீதா (மீசாலை வீரசிங்கம் ம.வி),இரண்டாம் இடம் - தி.மீரா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி); மூன்றாம் இடம் - அ.பிரதீபா( உசன் இராமநாதன் ம.வி).

**இலக்கணப் போட்டி ( பிரிவு - 04)**

முதலாம் இடம் - செ.நிஷாந்தினி (கச்சாய் அ.த.க.பா),இரண்டாம் இடம் - இ.இராசப்பிரவிந்தன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),மூன்றாம் இடம் - பு.சதீபா (மட்டுவில் கமலாசனி வித்தி).

**இலக்கணப் போட்டி (பிரிவு - 05)**

முதலாம் இடம் - க.சஞ்ஜீவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), இரண்டாம் இடம் - ந.கோகினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), மூன்றாம் இடம் - ச.குகப்பிரியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**திறனாய்வுப் போட்டி (பிரிவு -05)**

முதலாம் இடம் - செ.ஜனசா (உசன் இராமநாதன் ம.வி), இரண்டாம் இடம் - சி.தனுஷா (வரணி ம.வி),மூன்றாம் இடம் - ந.நியூதா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

**குறுநாடக ஆக்கம் (பிரிவு - 04)**

முதலாம் இடம் - ஜெ.லாவண்யா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - க.வானதி (வரணி ம.வி),மூன்றாம் இடம் - செ.தர்சிகா (கைதடி விக்கினேஸ்வரா ம.வி).

**குறுநாடக ஆக்கம் (பிரிவு -05)**

முதலாம் இடம் - க.துவாரகன் (வரணி ம.வி), இரண்டாம் இடம் - ந.டயாழினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), மூன்றாம் இடம் - ந.செல்வகுமார் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி).

**கவிதை (பிரிவு - 04)**

முதலாம் இடம் - ர.ரனிஷ்ரன் (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி),' இரண்டாம் இடம் - ச.வர்மினா(உசன் இராமநாதன் ம.வி), மூன்றாம் இடம் - சி.வாசுகிரதா (மட்டுவில் கமலாசனி வித்தி).

**கவிதை ஆக்கம் (பிரிவு - 05)**

முதலாம் இடம் - சி.நிக்சிகா (உசன் இராமநாதன் ம.வி), இரண்டாம் இடம் - தே.அபிகா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - பா.கிரிசா (மீசாலை வீரசிங்கம் ம.வி), இ.நிசாந்தன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

**சிறுகதை ஆக்கம் (பிரிவு - 4)**

முதலாம் இடம் - அ.கஜன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),இரண்டாம் இடம் - த.தர்மிகா (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி), மூன்றாம் இடம் - இ.விஜிதா (விடத்தற்பளை கமலாசனி வித்தி).

**சிறுகதை ஆக்கம் (பிரிவு - 05)**

.முதலாம் இடம் - ந.நிதர்சனா (உசன் இராமநாதன் ம.வி), இரண்டாம் இடம் - தௌ.கார்த்திகா(சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி),மூன்றாம் இடம் - கு.தர்மேந்திரன்(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

**வாசிப்பு - (பிரிவு - 01)**

முதலாம் இடம் - சி.அபர்ணா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - யோ.சைந்தவி (கச்சாய் அ.த.க.பா), மூன்றாம் இடம் - செ.பிரியந்தினி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி).

**வாசிப்பு (பிரிவு - 02)**

முதலாம் இடம் - சி.டிலக்ஷனா (மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா),இரண்டாம் இடம் - ந.கவிப்பிரியா (மீசாலை வீரசிங்கம் ம.வி), மூன்றாம் இடம் - க.சாளினி (கைதடி விக்கினேஸ்வரா ம.வி).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு கதை கூறல் (பிரிவு - 01)**

முதலாம் இடம் - ப.சாம்பவி (சந்திரமௌலீச வித்தி,மட்டுவில்), இரண்டாம் இடம் - மு.சௌமியா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை),மூன்றாம் இடம் - ஸ்ரீ.ஆர்த்திகன் (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி).

**பேச்சு (பிரிவு - 01)**

முதலாம் இடம் - செ.இளங்கதிர் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாம் இடம் - த.கீர்த்திகாயினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி),மூன்றாம் இடம் - இ.மாதங்கி(இயற்றாளை அ.மி.த.க.பா).

**பேச்சு(பிரிவு - 02)**

முதலாம் பிரிவு - ந.லிதுஜனன் (விடத்தற்பளை கமலாசனி வித்தி), இரண்டாம் இடம் - ர.டரசிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), மூன்றாம் இடம் - தி.ரினோஜிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**பேச்சு (பிரிவு - 03)**

முதலாம் இடம் - மோ.டிலோஜினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), இரண்டாம் இடம் - சு.தயாகரன் (சந்திரமௌலீச வித்தி.மட்டுவில்),மூன்றாம் இடம் - க.பிரியங்கா(மட்டுவில் கமலாசனி வித்தி).

**பேச்சு (பிரிவு - 04)**

முதலாம் இடம் - சி.ரூபகானன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), இரண்டாம் இடம் - ம.ஒலிசியா(வரணி ம.வி), மூன்றாம் இடம் - த.செ.ஆண்டனியா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

**பேச்சு (பிரிவு - 05)**

முதலாம் இடம் - சி.பவித்திரா(மீசாலை வீரசிங்கம் ம.வி), இரண்டாம் இடம் - க.நிரோஜினி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),மூன்றாம் இடம் - பா.றெரனாசி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**பாவோதல் (பிரிவு - 1)**

முதலாம் இடம் - த.அஜிதா, (மிருசுவில் அ.த.க.பா.), இரண்டாம் இடம் -ச.நிலானி (கொடிகாமம் அ.த.க.பா),மூன்றாம் இடம் -இ.வதுரசன், (கைதடி முத்துக் குமாரசாமி ம.வி), தே.தீபிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**பாவோதல் (பிரிவு - 2)**

முதலாம் இடம் - இ.லபீனா (வரணி ம.வி),இரண்டாம் இடம் - சி.பிறிஸ்லா (மீசாலை வீரசிங்கம் ம.வி), மூன்றாம் இடம் - ப.நிதுர்சன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**பாவோதல் (பிரிவு - 3)**

முதலாம் இடம் - வி.கார்த்திகாயினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), இரண்டாம் இடம் - சூ.சிந்திரலா (சந்திரமௌலீச வித்தி, மட்டுவில்),மூன்றாம் இடம் - செ.சுமித்தா (கொடிகாமம் அ.த.க.பா.).

**பாவோதல் (பிரிவு - 4)**

முதலாம் இடம் - இ.பிரதீபா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), இரண்டாம் இடம் - ம.மானுசா (சந்திரமௌலீச வித்தி, மட்டுவில்), மூன்றாம் இடம் - சி.சிவப்பிரிந்தா (விடத்தற்பளை கமலாசனி வித்தி).

**பாவோதல் (பிரிவு -5)**

முதலாம் இடம் - த.கவுசலா (மீசாலை வீரசிங்கம் ம.வி), இரண்டாம் இடம் - க.வேல்ராஜ் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), மூன்றாம் இடம் - கா.பவீதா (வரணி ம.வி).

**இசையும் அசைவும் (பிரிவு - 01)**

முதலாம் இடம் - க.நிவேதிகா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாம் இடம் - கி.நிலக்ஷனா (நுணாவில் கிழ.அமிர்தாம்பிகை வித்தி), மூன்றாம் இடம் - செ.சங்கவி (கச்சாய் அ.த.க.பா).

**இசை - தனி (பிரிவு - 02)**

முதலாம் இடம் - ஸ்ரீ.சுலக்ஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), இரண்டாம் இடம் - செ.பார்த்தீபன்(வரணி ம.வி), மூன்றாம் இடம் - செ.துஷானி (சந்திரமௌலீச வித்தி, மட்டுவில்).

**இசை - தனி (பிரிவு - 03)**

முதலாம் இடம் - சி.சரண்யா (சந்திரமௌலீச வித்தி, மட்டுவில்), இரண்டாம் இடம் - சு.வானதி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் - க.யதுசன் (உசன் இராமநாதன் ம.வி).

**இசை - தனி (பிரிவு - 04)**

முதலாம் இடம் - ஜெ.லோசனா (கைதடி நாவற்குழி அ.த.க.பா), இரண்டாம் இடம் - க.தர்சிகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - சு.வானதி (வரணி ம.வி).

**இசை - தனி (பிரிவு - 05)**

முதலாம் இடம் - சி.ஸ்ரீரேகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - பு.புரந்தீஸ் (வரணி ம.வி), மூன்றாம் இடம் - த.தனுசா (நாவற்குழி ம.வி).

**இசை - குழு 1 (திறந்த போட்டி)**

நாவற்குழி ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.

**இசை - குழு 11 (திறந்த போட்டி)**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி ம.வி.

**நடனம் - தனி (பிரிவு - 2)**

முதலாம் இடம் - ஈ.வித்தகி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - ந.பதிறேமினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - த.நிதர்சனா (வரணி ம.வி).

**நடனம் - தனி (பிரிவு - 3)**

முதாலாம் இடம் - த.சஜந்தினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ச.மதுஷா ( சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் - கு.மதனி (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி).

**நடனம் - தனி(பிரிவு - 4)**

முதலாம் இடம் - வி.ஜானுசா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - கு.ஜென்சி (மீசாலை வீரசிங்கம் ம.வி), மூன்றாம் இடம் - க.மாதுஜா (வரணி ம.வி).

**நடனம் - தனி (பிரிவு - 5)**

முதலாம் இடம் - சு.அபிஷேகாயினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - த.குணாயினி (வரணி ம்.வி).

**நடனம் - குழு (திறந்த போட்டி)**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி,சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**நாட்டார் பாடல் (திறந்த போட்டி)**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி,கைதடி நாவற்குழி அ.த.க.பா,கச்சாய் அ.த.க.பா.

**இலக்கிய நாடகம் (திறந்த போட்டி)**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி,கைதடி நாவற்குழி அ.த.க.பா, அல்லாரை அ.த.க.பா.

**வில்லுப்பாட்டு (திறந்த போட்டி)**

மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

**விவாதம் (திறந்த போட்டி)**

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, மீசாலை வீரசிங்கம் ம.வி, வரணி ம.வி.

**தமிழறிவு வினாவிடை (திறந்த போட்டி)**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி,வரணி ம.வி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**இசை நாடகம்(திறந்த போட்டி)**

கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**சிந்துநடை(திறந்த போட்டி)**

மந்துவில் றோ.க.த.க.பா, மீசாலை விக்கினேஸ்வரா ம.வி.

**வடமோடி நாட்டுக் கூத்து (திறந்த போட்டி)**

கைதடி நாவற்குழி அ.த.க.பா.

(04-207)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்.மே-3

தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பத்தைக் கோரியுள்ளது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி எதிர்வரும் 12 ஆம் திகதியாகும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.தேவக்குமார் அறிவித்துள்ளார்.

(04-224)

## புதிய இடத்தில் சந்தை

யாழ்ப்பாணம்.மே 3

கிளிநொச்சி பொதுச் சந்தை தற்போது அம்பாள் குளத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

சந்தைக்கான கொட்டகைகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டு சந்தையின் வியாபார நடவடிக்கைகள் புதிய இடத்தில் ஆரம்பமாகியுள்ளன.

சந்தைப் பகுதியில் வர்த்தக நிலையங்களைத் தற்காலிகமாக அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

(04-224)





புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய உடற்கல்விப் பணிப்பாளர் எஸ்.குயின்ரன் போட்டியில் வெற்றி பெற்ற வீரருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும், மாணவிகளின் உடற் பயிற்சிக் காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்கு பயன் தராத அமைச்சை இ.தொ.கா. ஏற்காது

## நிர்வாகசபை கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,மே3

மலையக மக்களுக்கு சேவையாற்றக் கூடிய அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படும் பட்சத்திலேயே அதனை ஏற்றுக்கொள்வதென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய மற்றும் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப் பேச்சாளர் ஏ.பி. சக்திவேல் கருத்துத் தெரிவிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா. சார்பில் போட்டியிட்ட மூவர் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். எமக்கு ஒரு பிரதியமைச் சுப் பதவியும், அமைச்சுப் பதவியும் வழங்க அரசு முன்வந்தது. பிரதியமைச்சுப் பதவியை எமது கட்சியின் தலைவர் முத்துசிவலிங்கம் ஏற்றுள்ளார். கால்நடை அபிவிருத்தி அமைச்சை அரசு வழங்க முன்வந்த நிலையில் அதனை நாம் ஏற்றவில்லை.

கால்நடை அமைச்சை வைத்துக் கொண்டு மலையக மக்களுக்குப் பணியாற்றமுடியாது என்பதால் எமது செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் அதனை ஏற்கவில்லை. மலையகத்துக்குச் சேவை செய்யக்கூடிய சமூக அபிவிருத்தி மற்றும் மனித வளத்தையும் இணைத்துத் தருமாறு நாம் கோரியுள்ளோம். இதன்மூலமே உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள முடியும்.

மலையகத்தில் வீடு, குடிதண்ணீர், உட்பட பல அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவேண்டியுள்ளதால் கால்நடையுடன் இணைந்த அமைச்சுப் பதவியை நாம் கோரினோம்.

இந்நிலையில்,அரசு மலையகத்துக்குச் சேவை செய்யக்கூடிய அமைச்சுப் பதவியை வழங்க இணங்கியுள்ளது. ஜனாதிபதியின் பூட்டான் விஜயத்துக்குப் பின்னர் எம்மால் பணியாற்றக்கூடிய அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால் ஏற்போம் இல்லாவிட்டால் நிராகரிப்பதெனத் தேசிய மற்றும் நிர்வாக சபைக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மகாவலி கங்கையில் கழிவு நீர் கலப்பு

கொழும்பு, மே 3

அம்பகமுவ பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கினிகத்ஹேன நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் ஹோட்டல்களிலிருந்தும் கழிவறைகளிலிருந்தும் வெளியாக்கப்படும் கழிவு நீர், மகாவலி கங்கையுடன் கலக் கப்படு வதால் பல்வேறு சூழல் பிரச்சினைகள் எழ வாய்ப் புண்டு என்று சூழல் தொடர் புடைய தாப னங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இப்பிரதேசத்தின் சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கழிவு நீரை திறந்த வெளியில் கலந்துவிடுவதால் சுகாதார சீர் கேடுகள் ஏற்படலாமென அஞ்சப்படுகின் றது. இது தொடர்பாக இப்பகுதி மக்கள் அம் பகமுவ பிரதேச சபையிடம் முறைப்பாடுச் செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

ஹோட்டல்கள் மற்றும் வர்த்தக நிலை யங்களிலிருந்து கழிவறை நீர் இவ்வாறு திறந்த வெளியில் விடுவதால் நகரமெங் கும் துர்நாற்றம் வீசுகின்றது என இப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பேகமுவ பிரதேச சபை பொது சுகா தாரப் பரிசோதகர் இது விடயத்தில் உரிய நடவடிக்கையெடுக்குமாறு மக் கள் வேண்டு கோள் விடுக்கின்றனர். (ளி)

# பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி கேகாலைப் பிரதேசத்தில் கூடுதல் பஸ்சேவை

கேகாலை மாவட்டத்திலுள்ள பஸ் டிப்போக்கள் மூலம் கூடுதல் பாடசாலை பஸ் சேவைகளை நடத்துவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை, பின்னவலை, அரணாயக்கா போன்ற பகுதிகளிலுள்ள பிரபலமான பட சாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் நன்மை கருதியே பிரஸ்தாப பஸ்சேவை கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு மாவனல்லை, கேகாலை, றம்புக்கனை போன்ற பஸ் டிப்போக்கள் பாடசாலை ஆரம்ப, முடிவு வேளைகளில் கூடுதலான சேவைகளை நடத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# புதிய எதிர்க்கட்சி தலைவர் நியமனத்தை ஏற்பதற்கு ஐ.தே.கட்சியினர் மறுப்பு

மத்திய மாகாண சபைக்கு எதிர்க் கட்சித் தலைவர் ஒருவரை நியமிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போது தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டவரை ஏற்கத் தயாரில்லையென மத்திய மாகாண சபையின் ஐ.தே. கட்சி அங்கத்தவர்கள் பலர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய கடந்த புதனன்று கண்டி ஹோட்டலொன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் கலந்துகொண்ட ஐ.தே.கட்சி அங்கத்தவர்கள் கட்சியின் உயர்பீடத்தின் நடவடிக்கைகள் அநீதியானவை என கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினராக இருந்த வசந்த அலுவிகார நாடாளுமன்றத்துக்கு தெரிவானதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கே.கே. பியதிஸ்ஸ நியமனம் பெற்றுள்ளார். இந் நியமனத்தைக் கண்டித்து தாங்கள் கட்சியின் உயர்பீடத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர் எனவும் எதிர்க் கட்சி அமைப்பாளர் லக்கி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அநீதியான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்க முடியாதென கண்டனக் காரர்கள் ஏகோபித்த முடிவை எடுத்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (ளி)




# பெரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் வத்தேகம போக்குவரத்து சீர்குலைவு

மாத்தளை,மே 3

மாத்தளை வத்தேகம பிரதான வீதியில் உக்குவெல, மாரேகொனரம்புகே வெல பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை பிரமாண்டமான மரமென்று சரிந்து பாதையின் குறுக்காக வீழ்ந்ததால் இப் பகுதிப் போக்குவரத்து சுமார் நான்கு மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன.

தற்போது பெய்துவரும் கடும் மழையாலும், காற்றாலும் குன்றொன்றின் மீது நின்றிருந்த இம்மரம் வேரோடு சரிந்துள்ளதுடன் மூன்று மின் தூண்கள், வீடொன்று, கடையொன்று சேதமாகியுள்ளன.

மாத்தளைப் பொலிஸார், பிரதேச அனர்த்த நிவாரணசபை பகுதியினர், பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் இம்மரம் தறிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# கத்தி வெட்டுக்கு வயோதிபப் பெண் பலி சந்தேக நபரைத் தேடி வலைவீச்சு

மாத்தளை, மே 3

நான்கு பிள்ளைகளின் தாயான 69 வயது வயோதிபப் பெண் ஒருவர் காடு வெட்டும் கத்தியால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் தொடர்புபட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் தலைமறைவாகியுள்ள அப்பெண்ணின் மைத்துனரை மஹாவெல பொலிஸார் தேடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பபாவதி குமாரிஹாமி எனும் இப் பெண் பலத்த வெட்டுக்காயத்துடன் கடந்த புதனன்று மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமாகியுள்ளார்.

மாத்தளை பதில் நீதிவான் வீ.கே. சிவராமலிங்கம் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை நடத்தினார் பின் சடலப் பரிசோ தனையை மேற்கொண்டு நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்பிக்குமாறு மாத்தளை வைத்திய சாலையின் சட்ட வைத் திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

சட்டவைத்திய அதிகாரி தனது அறிக்கையில் பலமான வெட்டுக் காயங்களால் மரணம் சம்பவித்துள்ளது எனத் தெரிவித்ததையடுத்து, இது கொலையெனத் தீர்ப்பளித்த நீதிவான் சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மஹாவெல பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி. அபேசிங்கவின் தலைமையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ளி)

# இருவேறு வாகன விபத்தில் ஒருவர்பலி, மூவர் காயம்

புசல்லாவை மற்றும் சிலாபம் ஆகிய பகு திகளில் அண்மையில் இடம்பெற்ற இரு வேறு வாகன விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியாவிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச மரக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று இரட்டைப்பாதைப் பகுதியில் கடந்த 30ஆம் திகதி அதிகாலை விபத்துக்குள்ளானதில் வாகனச் சாரதி உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காயமடைந்து கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.சிலாபம் - காக்கப்பள்ளி பகுதியில் கடந்த 30ஆம் திகதி லொறி ஒன்று விபத் துக்குள்ளானதில் காயமடைந்த இருவர் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாரதிகள் நித்திரைக் கலக்கத்துடன் வாகனங்களை செலுத்திய மையே இந்த இரண்டுவிபத்துக்களுக்கும் கார ணமென விசாரணைகளை மேற் கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ளி)

# மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக பதுளையில் 55 பேர் இடம்பெயர்வு

பதுளை,மே 3

மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக பதுளை மாவட்டத்திலுள்ள ஹல்துமுல்ல, பெரகல கிராமசேவையாளர் பிரிவில் வசித்து வரும் 55 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் பொடுப்பிலி தெரிவித்தார்.

இக்கிராமத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 55 பேரும் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர்.இவர்கள் இதல்கஸ்கின்ன தோட்டத்திலுள்ள பொதுக் கட்டடமொன்றில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர் கூறினார். இதே வேளை, பொலன்னறுவை திம்பு லாகல பிரதேசத்தில் கடந்த செவ்வாக்கிழமை வீசிய கடும் காற்று காரணமாக 28 வீடுகள் தேசமடைந்திருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளர்கள் குறித்த பிரதேசத்தை ஆராய்ந்து வழங்கும் சிபாரிசுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றார்.

## சந்திரசேகரனின் அஸ்தியை இந்தியாவில் கரைக்க ஏற்பாடு

அக்கரப்பத்தனை, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமரர் சந்திர சேகரனின் அஸ்தி எதிர்வரும் சனிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இந் தியாவின் இராமேஸ்வரக் கடற்கரையில் கரைக்கப்பட இருக்கிறது என கட்சி வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி மரணமான மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரனின் பூதவுடல் தலவாக்கலை பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டதோடு அவருடைய அஸ்தி கொட்டகலை, பொது தகனச்சாலையில் பாதுகாக்கப் பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# தொங்குபாலத்திலிருந்து வீழ்ந்த சிறுமி வெள்ளத்தில் மூழ்கிப்பலி

பதுளை,மே 3

பதுளை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழையால் பெருக்கெடுத்து ஓடும் மாணிக்கக் கங்கையில் பசறை ரணுகல்ல பகுதியில் உள்ள தொங்குபாலமொன்றைக் கடக்க முயன்ற மூவர் அப்பாலத்தில் தவறி வீழ்ந்தனர் எனவும், அயலில் இருந்தவர்களின் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் இருவர் மீட்கப்பட்டனர் எனவும் ஏழு வயதுச் சிறுமி வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார் எனவும் பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை கெமுனு வித்தியாலயத்தில் கல்வி பயின்ற கணஹெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஏழு வய்துச் சிறுமியே இந்த அனர்த்தத்தில் பலியாகியுள்ளார்.

இச்சிறுமி தனது தாயுடன் கொட்ட முதுனே எனினும் இடத்திலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு தனது பெரியப்பாவையும் அழைத் துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் பாலத்தின் சிதைவடைந்த பகுதியிலிருந்து ஆற்றில் வீழ்ந்துள்ளனர். பசறை பொலிஸாரும் பிரதேசவாசிகளும் கங்கையின் கரை பகுதிகளில் சிறுமியின் சடலத்தைத் தேடி வருகின்றனர்.

பசறை பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம். ரத்நாயக்கவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# நாவலப்பிட்டியில் பொதுமக்களின் சாட்சியங்களை பெற நடவடிக்கை

கண்டி ,மே 3

கடந்த பொதுத்தேர்தலின் போது நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் 37 வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்றதாகக் எனக் கூறப்படும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அமைக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணைகுழு கடந்த புதன்கிழமை பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தது.

சட்டத்தரணி ஒருவரின் தலைமையிலான விசாரணை குழுவொன்றை இது தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றது. இக்குழுவினர் இச்சம்பவம் தொடர்பாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அலுத்கமகே, பைசல் முஸ்தபா ஆகியாரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் பொதுமக்களின் வாக்குமூலம் சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டதுடன், இக்குழுவினர் இச்சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை நெசவு ஆலையை புனரமைத்து செயற்படவைத்தல் குறித்த அறிவித்தல்

யுத்தத்திற்கு முன்னர் திறம்பட செயற்பட்ட நெசவு ஆலை யுத்தத்தின் போது முற்றாகச் சேதமாக்கப்பட்டதுடன், அதில் இருந்த இயந்திர தளபாடங்கள் யாவும் முற்றாக இல்லாது அழிக்கப்பட்டன. எனவே இதனைப் புனரமைத்து அவ்விடத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க திட்டமிட்டுள்ளதால் இவ்விடயத்தில் அக்கறை உள்ளவர்களையும் மேற்படி நெசவு ஆலைக்கு காணிகளை நன்கொடை செய்தவர்களையும், மேலும் இந்நடவடிக்கையில் ஆர்வம் உள்ளவர்களையும் எதிர்வரும் 09.05.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 15ஆம் கட்டை, உடுப்பிட்டி என்ற விலாசத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து உரிய ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
உடுப்பிட்டி நலன்புரிச்சங்கம்.

(97506)


வீட்டுக்கு
மற்றும்
ஹோட்டலுக்கு



டயிடஸ் ஸ்ரோர்ஸ்
2439422



## ஜீப் வாகனம் விற்பனைக்கு

Mitsubizi J-44 Long Wheel Original Condition ஜீப் 28 Sri - XXXX இலக்கம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773248975

(97727)



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No-1 புறொயிலர் குஞ்சுகள் 04.05.2010 விநியோகிக்கப்படும். 150/=

★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ ஜென்சி பாம், 1ஆம் கட்டை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
★ P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
தொ.பே.இல: 0213213952, 0776090926

(97647)


## மஹஜன சம்பத / Mahajana Sampatha 30.04.2010

அதிர்ஷ்ட முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2234

வெற்றி எழுத்து Y — வெற்றி எண்கள் 5 2 4 7 1 9

| பரிசு | எழுத்து / இலக்கங்கள் | தொகை | வென்றவர்கள் |
|---|---|---|---|
| அதி பரிசு | Y 5 2 4 7 1 9 | ரூபா. 20,779,337/= | - |
| 1 பரிசுகள் | 5 2 4 7 1 9 | ரூபா. 2,000,000/= | 02 |
| 2 பரிசுகள் | 2 4 7 1 9 | ரூபா. 100,000/= | 14 |
| 3 பரிசுகள் | 4 7 1 9 | ரூபா. 10,000/= | 125 |
| 4 பரிசுகள் | 7 1 9 | ரூபா. 1,000/= | 1215 |
| 5 பரிசுகள் | 1 9 | ரூபா. 100/= | 11933 |
| 6 பரிசுகள் | 9 | ரூபா. 20/= | 118261 |
| 7 பரிசுகள் | 5 2 4 7 1 | ரூபா. 10,000/= | 12 |
| 8 பரிசுகள் | 5 2 4 7 | ரூபா. 1,000/= | 118 |
| 9 பரிசுகள் | 5 2 4 | ரூபா. 100/= | 1188 |
| 10 பரிசுகள் | 5 2 | ரூபா. 50/= | 11835 |
| 11 பரிசுகள் | Y | ரூபா. 20/= | 47359 |

Rs. 13,320,250.00

தேசிய லொத்தர் சபை

### கடலுணவுகளின் விலை நேற்று திடீரென உயர்வு

கடலுணவு வகைகளின் விலைகள் நேற்றுமுன்தினம் என்றும் இல்லாதவாறு மிகவும் அதிகரித்துக் காணப்பட்டதாக பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

மீனவர்கள் கடலுக்கு வழமை போல் தொழிலுக்குச் சென்றிருந்த போதும் கடல்படு திரவியங்களின் புழக்கம் குறைந்து காணப்பட்டதென கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

பருவப் பெயர்ச்சி காற்று மாற்றத்துக்கான சித்திரைக் குழப்பம் இயற்கையாக நிகழ்வதால் கடல் வாழ்உயிர்கள் உணவுக்கு வெளியேறாமல்பாறைகளில் பதுங்கி விடுவது வழக்கம் என்கின்றனர்மீனவர்கள்.

(ஒ-160)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

30-04-2010

1186 சிவப்பு

கன்னி 06 17 31 45

ஜக்பொட் பரிசு ரூபா. 5,480,675/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 197,653 | 20/- | 3,953,060/- |
| 2 இலக்கங்கள் | 18,174 | 40/- | 726,960/- |
| 1 இல. + லக்கினம் | 18,047 | 60/- | 1,082,820/- |
| 2 இல. + லக்கினம் | 1,640 | 200/- | 328,000/- |
| 3 இலக்கங்கள் | 489 | 1000/- | 489,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,480,675/- | - |
| மொத்தம் | | | 7,439,840/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 236,056 | | 7,939,840/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,922,325/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| வவுனியா | 501223333-4-11 |
| கொழும்பு | 501224592-0-19 |
| அம்பாறை | 501217263-4-16 |
| காலி | 501215486-6-40 |
| கேகாலை | 501225422-6-49 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சபாரத்தினம் இரத்தினம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி

## திருமதி சபாநாயகி கணேசராசா (மலர்)

திதி: 03.05.2010



பிறப்பு 27 * 02 * 1955

இறப்பு 14 * 05 * 2009

ஆண்டு ஒன்று ஆனதுவோ
ஆற முடியவில்லை - சோதரியே !
நீர் வளர்த்த மழலைகள் - இருவரும்
உங்கள் நிழல் படம் பார்த்து
அக்காம்மா எப்போது எம்மிடம் வருவீர்கள்
எனக் கேட்கின்றனரே
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
எம்மிடம் வாருங்கள்
ஹரிஷன் மது என வாய்நிறையக் கூப்பிடுங்கள்

இன்று (03.05.2010) திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

203/2, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளின் அறியாமையை விலக்கும் கல்விச்சாலை யாழ்.சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை




யாழ்ப்பாணம் நகரையொட்டிய கடற்கரையோரமாகக் காணப்படும் சிறிய மீனவக்கிராமம் குருநகர். இக்கிராமம் அதிகளவிலான சனத்தொகையை கொண்ட ஓர் பிரதேசமாகும். இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தொழில் மீன்பிடித் தொழிலே. இம்மீனவ மக்களின் அறியாமையை நீக்குவதற்கு அடித்தளமாகக் காணப்படும் பாடசாலை யாழ்.சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை. இன்று சமூகத்தில் சிறந்த கல்விமான்களாகத் திகழும் பெரிய மனிதர்கள் சிலர் இச்சிறிய பாடசாலையிலேயே கல்வியைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிட வேண்டிய விடயம்.

இன்றைய காலகட்டத்தை எடுத்துக் கொண்டோமானால் இப்பாடசாலை கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. எனினும் இம்முன்னேற்றத்துக்கு தடையாக சில குறைகள் இப்பாடசாலையில் காணப்படுகின்றன. அதாவது அடிப்படைத் தேவைகளுள் தளபாடப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளதென இப்பாடசாலையின் அதிபர் திரு.த.ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார். மேலும் 405 மாணவர்களும் 25 ஆசிரியர்களும் உள்ள இப்பாடசாலைக்கு தளபாடமென்பது அடிப்படையான் தேவையான ஒன்றே. அத்தோடு ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவர், ஆசிரியர்களுக்கு தேவையான அலுமாரிகள் சேதமடைந்த நிலையில் காணப்படுக்கின்றது. பாடசாலையின் கூரை கூட மிகுந்த சேதத்துக்குள்ளாகிய நிலையில் உள்ளது. இதனால் மழை காலங்களில் மாணவர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றோடு மாணவர்களின் அத்தியாவசிய தேவையான குடிநீரைப் பெற்றுக் கொள்ளப் பாவிக்கும் கிணறு பாதுகாப்பற்ற முறையில் மூடி அடைப்பின்றி காணப்படுகின்றது. இதனால் கழிவுகள் கிணற்றுநீரை அசுத்தமடையச் செய்கின்றன. இதைவிட மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கென நூலகம், ஆய்வுகூடம் போன்றவை காணப்பட்ட போதிலும் உரிய சாதனங் கள் இல்லாமையால் மாணவர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலை கூட பாதுகாப்பற்ற முறையில் காணப்படுகின்றது. அதாவது பாடசாலையைச் சுற்றிக் காணப்படும் மதிலானது உயரம் குறைந்த நிலையில் காணப்படுவதால் வெளியாட்கள் சிலர் பாடசாலை விடுமுறை நாட்களில் பாடசாலை வளாகத்துக்குள் நுழைந்து சில சமூக சீர்கேடான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பாடசாலையைச் சுற்றியுள்ளோர் குறை கூறுகின்றனர். இப்பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைப் படைத்த போதிலும் இச்சாதனைக்குத் தடையாக விளையாட்டு உபகரணங்கள் பற்றாக்குறையும் விளையாட்டுப் பயிற்றுனர் இன்மையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.



இப்பாடசாலை மாணவர்கள் பெரும்பாலும் ஏழைகளே. ஆகையால் பாடசாலையைத் தவிர வெளியிடங்களில் சென்று கணனிக்கல்வியைக் கற்க முடியாது. எனவே இப்பாடசாலைக்குப் பெரும் குறையாகவுள்ள கணனிக்கல்வியை விரைவில் இம்மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். அத்தோடு பாதணி, பாடசாலை புத்தகப்பை போன்றவற்றை இவ் ஏழை மாணவருக்கு வழங்க முன்வரவேண்டும்.

இப்பாடசாலையின் கல்வித்தரம் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த. சாதாரணம் வரையே காணப்படுக்கின்றது. எனினும் க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளை இப்பாடசாலை மாணவர்கள் பெறுகின்றனர். மேலும் தொடர்ந்து உயர்தரக்கல்வியை இப்பாடசாலையில் தொடர முடியாமல் பெரிய பாடசாலைகளிற்கு அதிக பணத்தை, செலவு செய்து கற்கச் செல்கின்றனர். ஆகையால் இப்பாடசாலையிலேயே தொடர்ந்தும் தம் உயர்கல்வியை தொடர வேண்டும் என்றும் தம் பாடசாலைக்கு சிறந்த உயர்தரப் பெறுபேறுகளை வாங்கித் தரவேண்டும் என்றும் இம் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவ் ஏழை மாணவருக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் இப்பாடசாலையை அபிவிருத்தி செய்து தொடர்ந்தும் சிறந்த எதிர்காலப்பிரஜைகளை உருவாக்கிக் கொள்ள இப்பாடசாலைக்கு கல்வி சம்பந்தப்பட்டவர்கள் உதவ முன்வரவேண்டும்.

***

# மீண்டும் புத்துயிர் பெறுமா யாழ்ப்பாணக் கோட்டை?



தொகுப்பு: தர்ஷா சந்திரகுமார்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இச்சம்பவம் கி.பி 1948ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம் 4ஆம் திகதி நிகழ்ந்தது. யாழ் கோட்டை உட்பட இலங்கை முழுவதும் ஸ்ரீலங்கா கொடி ஏற்றப்பட்டது. அன்றிலிருந்து யாழ் கோட்டை கம்பீரமாகமாகவும் அமைதியுடனும் நிம்மதியுடனும் காணப்பட்டது என்பது வரலாற்றுச் சான்றாகும். எனினும் இவ்வமைதியும் நிம்மதியும் நிலைக்கவில்லை. கி.பி 1961ஆம் காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் சிங்களவரிடம் ஏற்பட்ட இனவாத யுத்தத்தினால் யாழ்.கோட்டை யுத்த தளமாகியது. சித்திரவதைச் சிறைச்சாலையாகவும் மாற்றம் பெற்றது. பல தசாப்த கால யுத்தத்தினால் யாழ்.கோட்டை பலவிதமான யுத்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் யாழ்.கோட்டை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பல நூற்றாண்டுகளுக்கு முன் அந்நிய ஆட்சியில் கம்பீரமான தோற்றத்தில் காணப்பட்ட இக்கோட்டை தற்போது எலும்புக்கூடுகளாகச் சிதைந்து எஞ்சியிருக்கும் கட்டடங்கள் மயானத்தை ஒத்த தோற்றத்தில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. எம் மூதாதையரால் மீட்கப்பட்ட இவ்வரலாற்றுச் சின்னத்தை தொடர்ந்தும் சிதைவடையாமல் புனரமைத்தல் அவசியம். பற்றைக்காடுகளால் சூழப்பட்ட இக்கோட்டை பாழடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இக்கோட்டை அகழிகள் குப்பை கூளங்கள் சேர்வடையும் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. தொடர்ந்தும் இந்நிலையில் யாழ் கோட்டை காணப்பட்டால் எதிர்காலத்தில் இதன் வரலாற்றுச் சுவடு இருந்ததற்கான ஆதாரம் இல்லாமலே அழிந்துவிடும். ஆகவே தற்போது நாட்டில் நிலவியுள்ள அமைதியான சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு இக்கோட்டையைப் புனரமைத்து சுற்றுலாத் தளமாக மாற்றுவதனால் சுற்றுலாத்துறைக்கு பெருமளவிலான வருமானம் கிடைக்கும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மாணவர்கள் கோட்டை [illegible] பற்றி அறிந்து கொள்வதற்கு கோட்டையைப் பார்வையிட அரசு அனுமதிக்க வேண்டும். வெளிமாவட்டங்கச் சேர்ந்த வெளிநாட்டவர்களையும் கவரும் விதமாக இலங்கையில் காணப்படும் வரலாற்றுத் தளங்கள் போன்ற யாழ் கோட்டையை மக்கள் பயன்படுத்தும் விதமாக விரைவிலேயே இக்கோட்டையை சீரமைத்தல் வேண்டும். மேலும் சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் முகமாக இக்கோட்டை அகழிகளில் குப்பை கழிவுகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக கவனமெடுத்தல் அவசியம். ஆகவே எதிர்காலத்திலும் யாழ் கோட்டையின் தனித்துவம் அழியாமல் பாதுகாக்க சம்பந்தப்படவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.





(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணான ஒன்று விலைமதிப்பற்றதாகலாம்!

கலைக்குத் தன்னை அர்ப்பணித்தவர் களில் மிக உயர்வானவர் மைக்கேல் ஆஞ்சலோ. இத்தாலியின் புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் ஒருமுறை மைக்கேல் ஆஞ்சலோ சலவைக் கற்கள் விற்பனை செய்யும் கடையில் ஒரு பெரிய சலவைக் கல் இருப்பதைக் கண்டார். அது பார்ப் பதற்கு அசிங்கமாக அந்த கடையின் வியாபாரத்தைப் பாதிக்கும் வகையில் இருந்தது.

அக்கடை முதலாளியோ அந்தக் கல்லை யாரிடமாவது விற்றுவிட வேண்டும் என்று பல நாள்களாகவே முயன்று வந்தார்.

அப்போது அந்தக் கடைக்கு வந்த மைக்கேல் ஆஞ்சலோ அந்தக் கல்லை, தானே எடுத்துக் கொள்வதாகச் சொல்லிக் கல்லைப் பற்றி விசாரித்தார்.

கடைக்காரருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. கடையை அடைத்துக் கொண்டிருந்த அந்தக் கல்லை மகிழ்வுடன் இலவசமாகவே தந்து விட்டார்.

வருடங்கள் கழிந்தன.

மைக்கேல் ஆஞ்சலோ தனக்கு வெண் சலவைக் கல்லைப் பரிசாகத் தந்த கடை முதலாளியை தம்முடைய இல்லத்திற்கு அழைத்து அங்கிருந்த ஓர் அழகிய சிற்பத்தைக் காட்டினார்.

அது ஓர் அழகிய சிற்பம். சிலுவையில் அறையப்பட்டு கிடத்தி வைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அன்னை மேரி தம் மடியில் கிடத்தியிருக்கும் காட்சியைக் காட்டும் சிற்பம் அது.

அந்தச் சிற்பத்தைக் கண்டு வியந்து போனார் கடைக்காரர்.

அப்போதுதான் மைக்கேல் ஆஞ்சலோ கடை முதலாளியிடம் ஓர் உண்மையைச் சொன்னார்.

''சில வருடத்திற்கு முன்பு உங்கள் கடைக்கு வந்திருந்த சமயத்தில் தங்களிடமிருந்து ஒரு வெண் சலவைக் கல்லை இலவசமாகப் பெற்றது நினைவிருக்கிறதா?என்றார் மைக்கேல் ஆஞ்சலோ.

''ஆமாம் நினைவிருக்கிறது''

'' நீங்கள் தந்த அந்த அழுக்கேறிய சலவைக் கல்லில் செய்த சிற்பம்தான் நீங்கள் இப்போது காண்பது. இந்தச் சிற்பத்தில் காட்சியளிக்கும் இயேசு கிறிஸ்துவும், அன்னை மாதாவும் அக்கல்லில் நீண்ட நாள்களாகவே அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அக்கல்லை நான் என் வீட்டிற்கு கொண்டு வந்து அவர்களைச் சுற்றியிருந்த வேண்டாத பகுதிகளை



நீக்கினேன். இப்போது அழகிய சிற்பமாக உருவாகிவிட்டது'' என்று மைக்கேல் ஆஞ்சலோ கூறினார்.

கடை முதலாளி அந்தச் சிற்பத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.


## Study at SAITM Campus



**SAITM**

**தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தென்னாசிய நிறுவனம்**

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள முதலாவது பசுமை வளாகமாகும். இது இலங்கையையும் மற்றும் பிராந்திய இளைஞர்களை தொழில்துறையிலும் ஒழுக்கசீலத்திலும் சிறப்புடைமை ஆக்கும் தொலைநோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பல்துறை வளாகமானது பசுமை நிறைந்த கண்கவர் பகுதியில் அமைந்துள்ளதுடன் சகல கலாசாரங்களையும் சூழல்களையும் கொண்ட மாணவர்களை ஒன்றிணைத்து அவர்களைத் தோழமையுடன் பழகவும் வசதியளிக்கிறது.

இலங்கையின் உயர்கல்வி தனியார் துறையில் **SAITM** ஒரு மிகப்புதிய வரவாகும்.

இது இலங்கையிலும் வெளியிலும் கற்கும் தகுதி உடைய கற்போர் அனைவருக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் காத்திருக்கின்றது.

**Bachelors Degree Programs (இளநிலைப்பட்ட படிப்பு நிகழ்ச்சிகள்)**

★ *Doctor of Medicine (MD) - Nizhny Novgorod State Medical Academy, Russian Federation, Sri Lanka Campus.*
★ *BSc Engineering Degrees(4 Years) - **Only** Affiliated University of Asian Institute ofTechnology (A IT), Thailand, in the region*
- ★ *BSc Eng in Civil and Infrastructure Engineering*
- ★ *BSc Eng in Electronics Engineering*
- ★ *BSc Eng in Mechatronics Engineering*
- ★ *BSc.Eng in ICT (Telecom) Engineering*
- ★ *BSc in IT and Computer Science*

★ வர்த்தக முகாமைத்துவ இளநிலை- பிரிட்டிஷ் பட்டம் *(Bachelor of Business Management - British Degree)*
★ தொடர்பாடல் ஊடகத்துறை இளநிலை பிரிட்டிஸ் பட்டம் *(Bachelor of Interactive Media - British Degree)*

**Higher National Diplomas - Edexel, United.Kingdom (உயர்தேசிய டிப்ளோமா -எடெக்சல்,ஐக்கிய ராச்சியம்)**


- ★ உயர்தேசிய டிப்ளோமா வியாபாரம் *(Higher National Diploma in Business )*
- ★ உயர் தேசிய டிப்ளோமா கணனி *(Higher National Diploma in Computing)*
- ★ உயர் தேசிய டிப்ளோமா மல்ரிமீடியா *(Higher National Diploma in Multimedia)*

**South Asian Institute of Technology and Management**
P.O.Box 11, Millennium Drive, New Kandy Road, Malabe.
Tel : +(94) 11 2413331, +(94) **11 2413351** Fax :+(94) 11 2413332 info@saitm.edu.lk
0777 269973, 077 4747081, 0773 837373, 0716 212121

SAITM
South Asian Institute of Technology and Management
www.saitm.edu.lk

*Education with character*


## காந்தி ஏன் மகாத்மா?



தென்னாபிரிக்காவில் வாழ்ந்த சமயத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சி இது,

ஒருமுறை, காந்திஜி ஒரு ரயிலைப் பிடிப்பதற்காக வேகமாக வந்து கொண்டிருந்தார். அவ்வாறு ஓடி வந்து வண்டியில் ஏறும்போது அவரது இடதுகால் செருப்புத் தவறி ரயிலை விட்டுக் கீழே விழுந்தது. ரயில் விரைவாகச் சென்று கொண்டிருந்தது. காந்திஜி சற்றும் தாமதிக்காமல் தனது மற்றொரு கால் செருப்பைக் கழற்றி தான் தவறவிட்ட செருப்பின் அருகே தூக்கி வீசினார்.

அந்த ரயில் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகளுக்கு காந்தியின் இந்தச் செய்கை வியப்பைத் தந்தது.

ஒரு பயணி காந்திஜியை அணுகி, பாபுஜியிடம், ''தாங்கள் தங்களது செருப்பை ஏன் அவ்வாறு வீசினீர்கள்?'' என்று வினவினார்.

அதற்கு மகாத்மா,

'' ஐயா, ரயிலில் நான் ஏறும்போது எனது இடது கால் செருப்பு தவறிவிட்டது. அதை நான் திரும்பவும் எடுக்க முடியாது. பின்னர் எனது வலது கால் செருப்பை மட்டும் வைத்துக் கொள்வதில் பலனில்லை. எனவேதான் தவறவிட்ட எனது செருப்பின் அருகிலேயே மற்றொரு கால் செருப்பையும் விட்டெறிந்தேன். அந்த வழியாக யாராவது வரும்போது என் இரண்டு செருப்புக்களும் தென்பட்டால் அவருக்காவது பயனாய் இருக்குமே'' என்றார். பிறருக்குப் பயன்பட வேண்டும் என்ற பெரிய எண்ணம்தான் அவரை மகாத்மாவாக ஆக்கியது! தன்னலம் போதும்,பிறர் நலம் பேணுக.

நன்றி:
சொன்னார்கள்..! சொன்னார்கள்...!!
சொன்னார்கள்....!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் முக்கியத்துவத்தை...

பாடங்களை ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய கட்டாயம் நாளுக்கு நாள் நிகழ்ந்தேறி வருகின்றது. இதற்கு யாரும் விதிவிலக்காக இருக்க முடியாது என்பதைக் காலம் உணர்த்தி வருகின்றது. இலங்கையின் அரசியல் பீடத்தில் ஒவ்வொரு முக்கிய முகமும் பிரகாசித்து அதே வேகத்தில் மங்கிப் போகின்ற வரலாறுகள் அண்மைய காலமாக அரங்கேறியே வருகின்றன.

நாட்டின் கதாநாயகனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சரத் பொன்சேகா இன்று எத்தனை கம்பிகள் என எண்ணியே சோர்ந்திருக்கின்றார். அதன் தொடராக ஒரு காலத்தில் இலங்கையை நடுங்கவைத்த ஜே.வி.பி இன்று முகவரியற்று சிதைக்கப் பட்டிருக்கின்றது. அதேபோல கொழும்புத் தமிழ் மக்களின் நாயகன் எனச் சொல்லுமள விற்கு விளங்கிவந்த மனோகணேசன் தனது தொகுதியை தனது சகோதரனுக்குக் கொடுத்துவிட்டு மற்றொரு தொகுதியை யும் கைப்பற்ற எண்ணி தோற்றுப் போக இறுதியில் ரணிலும் கழற்றிவிட்ட பரிதாபமும் அரங்கேறியது.

சரி இவைதான் போகட்டும் தமிழனத்தை உலகின் உயர்வில் இருந்து படுபாதாளத்திற்குக் கொண்டு சென்ற பெருமைக்குரிய முரளிதரன் எனப்படு கின்ற கருணா மற்றும் டக்ளஸ் ஆகியோ ரின் கதையும் சோகம் நிறைந்தாய்த்தான் மாறியிருக்கின்றது. காரணம் கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறியதன் பின்னர் சிங்கள அரசுகளுடன் கைகோர்த்த போது அன்றே எதிர்வு கூறப்பட்டிருந்தது காலப்போக்கில் இவர் அரசால் கைகழுவப்படுவார் என்று. அதே போல விடுதலைப் புலிகள் பலமிழந் தால் டக்ளஸ் உட்பட்ட அரசின் சார்பு நிலை எடுத்த அனைத்து தமிழ் அரசியல் சக்திகளும் நிர்க்கதியற்ற நிலைக்குத் தள்ளப்படுவர் என எதிர்வுகூறப்பட்டிருந்தது.



இரா. சம்பந்தன்



டக்ளஸ்

அதனையே புதிய அமைச்சரவை நியமனங்கள் நிரூபித்துள்ளன. கிழக்கு மாகாணத்தை தனி நிர்வாக அலகாகக் கொண்டு அதிகாரம் கேட்ட கருணா அவருடன் கூட இருந்த பிள்ளையானாலேயே வாரிவீழ்த்தப்பட்டு மஹிந்தவின் தயவில் தேசிய நல்லிணக்க சேவைகள் அமைச்சர் என்ற ஒரு பெறுமதியற்ற அமைச்சை பெற் றுக் கொண்டு காலம் கடத்தினார். ஆனால் தற்போது மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் என்ற நிலைக்கு கீழ் இறக்கப்பட்ட அவரின் எதிர்கால அரசியல் வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகவே இருக்கப்போகின்றது என்பது வெளிப்படையானது.

இதேவேளை, தமிழ் மக்களின் காவலனாக அரசுடன் சேர்ந்திருந்தே தீர்வைப் பெற்றுத்தரப் போகின்றேன் என முழங்கி வருகின்ற டக்ளஸ் தேவானந்தாவிற்கு மரபுரீதியான தொழில் அபிவிருத்தி மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி என்கின்ற அமைச்சே வழங்கப்பட்டுள்ளது. மறவன்புலவுப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது மக்களைச் சந்தித்த டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்ட பகுதி மக்களிடம் போதிய வரவேற்பு இன்மையை உணர்ந்து அவர் தெரிவித்த கருத்தே அவருக்கு வினையானதாக சொல்லப்படுகிறது.

அவர் சொன்னது நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் பொன்சேகாவிற்கே வாக்களியுங்கள் பொன்சேகா வெற்றிபெற்றதும் நாங்கள் அவருடன் இணைந்து உங்கள் அபிவிருத்திக்காக உழைப்போம் என்றிருக்கின்றார். இது மஹிந்தவிற்கு தெரியவர மஹிந்த டக்ளசுக்கு பகிரங்க ஒன்று கூடல் ஒன்றில் வைத்து வசைமாரி பொழிந்ததாக கூறப்படுகின்றது. இதன் தொடராகத்தான் டக்ளஸ் இராஜினாமா செய்யப் போவதாக

# ... சிதைக்கும் கைங்கரியத்தில் முனைப்பு!

நாடகமாடி கடையடைப்பை வலியுறுத்த அதனை நேரடியாக மஹிந்தவின் பிரதிநிதியே தடுத்து நிறுத்தியதாக யாழ்ப்பாணத்தில் கதைகள் உலாவியமை நினைவிருக்கலாம்.

இதன் தொடராக டக்ளஸின் கோட்டையிலேயே மஹிந்தவின் செல்லப்பிள்ளை அங்கஜன் களம் இறக்கப்பட்டு டக்ளசுக்கு எதிராக மட்டுமே தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். ஆனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் காங்கிரஸும் மோதிக்கொண்டிருக்க அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஈபிடிபி மூன்று ஆசனங்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் தட்டிச் சென்றது. ஆனாலும் டக்ளஸை ஒதுக்க வேண்டும் என்ற முனைப்பில் மஹிந்த செயற்படுவதன் முடிவாகவே அவருக்கு பெறுமதியற்ற அமைச்சு ஒன்று வழங்கப்பட்டிருக்கின்ற அதேவேளை வடமாகாண ஆளுநராக அங்கஜன் ராமநாதன் தெரிவாகவுள்ளார் என்ற தகவலும் வெளியாகியிருக்கின்றது.

யாழ்.மாநகர சபை முதல்வர் டக்ளஸின் அதி விசுவாசியான திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேரடியாகவே அங்கஜனைத் தூற்றி பரப்புரை செய்திருந்த நிலையில் அங்கஜன் ஆளுநரால் என்ன நடக்கும் என்ற செய்தி காலப்போக்கில் ஊடகங்களை ஆக்கிரமிக்கும் என்பது மட்டும் வெளிப்படை.

இந்த நிலையில் தம்முடன் நின்ற அல்லது தாம் நினைத்ததை எல்லாம் சிரமேற்கொண்டு ஒப்பேற்றிய தமிழ் பிரதிநிதிகளாகச் சொல்லிக்கொள்வோரின் பற்களைப் பிடுங்கும் நடவடிக்கையை மஹிந்த மேற்கொண்டு வருகின்றமையை இயல்பாகப் புரிந்துகொள்ளலாம்.

இந்த இடத்தில் அடுத்த ஒரு பாய்ச்சலை மகிந்த மேற்கொள்கின்றார் என்ற பேச்சு அரசியல் மட்டங்களில் உலா வருவதை அவதானிக்கலாம். வடமாகாண சபைத் தேர்தலை நோக்கிய முனைப்புக் கள் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்த லுக்கு முன்பாகவே தலைகாட்டத் தொடங்கி யிருந்தன. இதில் ஆர்வங்காட்ட பலரும் தயாராகிவிட்டிருக்கின்றனர். ஆனால், வட மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமா? என்ற கேள்விதான் தொக்கிநிற்கின்றது.

காரணம் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அவதானித்த மஹிந்த அரசு மாகாண சபைத் தேர்தல் மூலம் வடமாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரகாசமான வெற்றியினைப் பெற்றுக் கொள்ளும் என்பதை இலகுவில் விளங்கிக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தாமலேயே காலத்தை இழுத்தடிப்பது அல்லது மாவட்டங்களை மையப்படுத்தியதான அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல் என்ற பெயரில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு தனித் தனியான பிரதிநிதிகளைத் தேர்வு செய்தல் என்ற நிலையினை எடுத்தல் போன்றதான வழிமுறைகளை மஹிந்த முன்னெடுக்க முனைவதாக தெரியவந்துள்ளது.

இதற்கமைய மாவட்டங்களை மையப்படுத்தியதான நகர்வினை மேற்கொள்வது தொடர்பில் இந்தியாவிடம் மஹிந்த ஆசி பெற்றிருப்பதான தகவல்களும் வெளிவந்துள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் வட மாகாண சபைத் தேர்தல் என்ற அறிவிப்பும் வெளிவந்திருக்கின்றது. ஆனாலும் அது நடந்து முடிந்தால்தான் உண்மை புலனாகும்.

எனவே தமிழ் பிரதிநிதித்துவம், அல்லது தமிழர்களின் முக்கியத்துவத்தை சிதைக்கும் கைங்கரியத்தை சிங்கள பேரினவாத அரசு முன்னெடுக்கத் தலைப்பட்டுள்ளது.



சிவநேசதுரை



விநாயகமூர்த்தி முரளிதரன்

இவ்வாறான முனைப்பை மேற்கொள்ளும் சிங்கள அரசு எமது மக்களுக்கு ஏதாவது ஒருபிடி தீர்வையேனும் தரும் என்கின்ற நப்பாசையைக் கைவிட்டு எங்கள் மக்களுக்கான உடனடியான அபிவிருத்திக்கான வரிகளை ஆராய்ந்து அதற்கமைய முனைப்புக்களை மேற்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

தமிழ் தேசியத்திற்காக தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்கள் நாடாளுமன் றத்தின் மூலம் மட்டும் தான் தமிழ் மக்களுக்கு பணியாற்ற முடியும் என்றிரா மல், மக்கள் பணியாற்ற முடிந்தவரையில் முன்வரவேண்டும். அவ்வாறான பணியாற்றலின் ஊடாக மக்கள் மத்தியி லான நம்பிக்கையை வளர்த்து அதன் பின்னர் எமது கருத்துச் செலுத்துதல்களை மேற்கொள்ளல் சாலச் சிறந்தது.

இதேபோன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஒரு பாரிய பொறுப்பு உள்ளதை அது மறந்துவிடக் கூடாது.

தமிழ் மக்களின் பெரும்பான்மை கட்சியாக மக்களால் தேர்வு செய்யப்பட்டு நாடாளுமன்றம் அனுப்பப்பட்டுள்ள குறித்த கட்சி எமது மக்களின் உடனடியான வளர்ச்சிக்காக கூடுதல் அக்கறை எடுத்துச் செயற்படவேண்டும்.

எமது மக்களுக்கு உதவ புலம்பெயர் சமூகம் கூடுதல் ஆர்வம் கொண்டிருந்தாலும் அதை நடைமுறைப் படுத்துவதில் தாயகத்தில் ஒரு பொது அமைப்பு எமக்காக இல்லை. அவ்வாறான அமைப்பை தொடக்கு வதற்கு இலங்கை அரசு தடையாக இருக்கும் என்று கூறினாலும் அதைக் கடந்து மக்கள் பணியாற்றுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தும் முனைப்புக்களையும், சட்டநுணுக்கங்களையும் ஆராய்ந்து மக்களுக்கான உதவிகளை துரிதப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மக்களதும் வேணவாவாகும்.

நன்றி: 'புதினம் நியூஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பரீட்சைக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பாடரீதியான வினாத்தொகுப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## வணிகக் கல்வி | பகுதி - I & II

### ✱ உற்பத்தி/செயல்பாட்டு முகாமைத்துவம் Production/Operation Management

#### பகுதி - II

01. 1) 1. உற்பத்தி (Production) என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
2. வணிக நிறுவகம் ஒன்றின் உற்பத்திப் பகுதியின் முக்கிய கருமங்களைக் குறிப்பிடுக.
2) கட்டளைக்கான உற்பத்திக்கும் (Job Production) தொகுதி உற்பத்திக்கும் (Batch Production) இடையிலான வேறுபாடுகளையும் ஒத்த தன்மைகளையும் குறிப்பிடுக.
3) 1. உற்பத்தி செய்முறையில் பயன்படுத்தப்படும் நவீன நுட்பங்களைக் குறிப்பிடுக.
2. வணிக உற்பத்திக் கருமங்களில் நவீன தொல்நுணுக்கத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகள் யாவை என விளக்குக. நீர் கருதுகின்றவாறு அதன் பிரதிகூலங்கள் யாவை?
4) 1. வாடிக்கையாளர்கள் பணத்திற்கான பெறுமதியைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதை உறுதி செய்வதில் தரக்கட்டுப்பாடு எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது என விளக்குக.
2. தரக்கட்டுப்பாடு தொடர்பாக ஏற்படக்கூடிய கிரயங்களைக் குறிப்பிடுக.
5) நிறுவனங்கள் பின்பற்றும் இருப்புக் கட்டுப்பாட்டு முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
6) பின்வருவனபற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. வேலை ஆய்வு (Work Study)
2. PERTநுட்பம்.
3. தரவட்டம்(Quality Circle)

02. 1) 1. உற்பத்தி நிறுவனம் ஒன்று தொடர்பில் இருப்புக் கட்டுப்பாடு என்பதால் கருதப்படுவது யாது?
2. ஏன் ஓர் உற்பத்தி நிறுவகத்திற்கு வினைத்திறன் மிக்க இருப்புக்கட்டுப்பாட்டு முறை ஒன்று அவசியமானது என்பதனை விளக்குக.
2) 1. உற்பத்தி செயன்முறையினை வடிவமைத்தல் (Designing the Production Process) தொடர்பான பிரதான கருமங்களைக் குறிப்பிடுக.
2. "வணிக நிறுவகம் ஒன்றினை ஓரிடப்படுத்தும்போது பல்வேறு சமூக பாதிப்புக்களையும் சமூக நலன்களையும் எதிர்நோக்கமுடியும்" இதனை விளக்குக.
3) ஓர் உற்பத்தி நிறுவகத்தின் நிலைய அமைவிடம் (Layout) என்பதனை விளக்கி அதன் வகைகளைக் குறிப்பிடுக.
4) 1. உற்பத்தித் தொழிற்பாட்டில் ஆராய்ச்சியினதும் அபிவிருத்தியினதும் முக்கியத்துவத்தை விளக்குக.
2. உற்பத்திப் பொறியியலின் மூலம் ஆற்றப்படும் பிரதான பணிகளைக் குறிப்பிடுக.
5) 1. உற்பத்தி மட்டத்திற்கும் பொருளாதாரச் சிக்கன அளவிற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
2. பொருளாதாரச் சிக்கன அளவுகளான உள்ளகச் சிக்கனங்களையும், புறச் சிக்கனங்களையும் குறிப்பிடுக.
6) பின்வருவனப்பற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. தரஉறுதி (Quality Assurance)
2. மொத்த தரமுகாமைத்துவம் (Total Quality Management)
3. கணினி உதவியுடனான வடிவமைப்பு (CAD-Computer Aided Design)

03. 1) 1. (JIT) முறைமையின் விளைவாகக் களஞ்சியப்படுத்தலின் தேவை படிப்படியாகக் குறைந்து வருகின்றது விளக்குக.
2. இருப்புக் கட்டுப்பாட்டில் கணினி செயல்திட்டம் பயன்படுத்துவதன் அனுகூலங்களைக் குறிப்பிடுக.
2) ஒரு நிறுவகத்தின் உற்பத்திப் பகுதியானது எவற்றை முன்கூட்டியே உற்பத்தி தொடர்பாக நிச்சயித்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதனை குறிப்பிட்டு விளக்குக.
3) 1. ஓர் உற்பத்தித் திட்டத்தைத் தயாரிக்கும்போது கருத்திற்கொள்ளப்படும் காரணிகள் எவை?
2. ஒரு வணிகம் சரியான பொருள் (Right Goods) சரியான விலையில் (Right Price) உற்பத்தி செய்ய ஆய்வு அபிவிருத்திச் செயற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதனை விளக்குக.
4) பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. EOQ (சிக்கன கட்டளைக் கணியம்)
2. பாய்வு உற்பத்தி (Flow Production)
3. GANNT Chart

### ✱ சந்தைப்படுத்தல் Marketing

#### பகுதி - I

01. கொள்வனவாளர்களைக் கவரும் பொருட்டு வழங்கப்படும் சிறப்பான அம்சங்களைக் கொண்ட உற்பத்திப் பொருள் எவ்வாறு அழைக்கப்படும்?
1) மைய உற்பத்திப் பொருள் (Core Product)
2) அடிப்படை உற்பத்திப் பொருள் (Basic Product)
3) எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பொருள் (Expected Product)
4) பெரிதாக்கிய உற்பத்திப் பொருள் (Argumented Product)
5) சாத்தியமான உற்பத்திப் பொருள் (Potential Product)

02. வாடிக்கையாளர்களின் தேவைகளிலும் விருப்பங்களிலும் கூடிய அவதானம் செலுத்தும் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு எது?
1) உற்பத்திப்பொருள் எண்ணக்கரு
2) விற்பனை எண்ணக்கரு
3) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு.
4) உற்பத்தி எண்ணக்கரு
5) முழுமைப்படைப்பு எண்ணக்கரு (Holistic Concept)

03. கடைப்பண்டங்களை மட்டும் கொண்டுள்ள.தொகுதியைத் தெரிவுசெய்க.

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

1) வானொலிப் பெட்டிகள்/சலவை இயந்திரங்கள்/குளிர்சாதனப் பெட்டிகள் தொலைக்காட்சிப் பெட்டிகள்.
2) தேயிலை/சீனி/பாண்/பிஸ்கட்.
3) வானொலிப்பெட்டிகள்/தொலைக்காட்சிப் பெட்டிகள்/ பொறிவிருட்சம்/ வெடிமருந்துக்கள்.
4) வாகனங்கள்/கட்டடங்கள்/அலுவலக சாதனங்கள்/பொறிவிருட்சங்களும் சாதனங்களும்.
5) ஆடைகள்/கட்டடங்கள்/பாதணிகள்/பொறிவிருட்சங்கள்.

04. பொருள் சேவைகளுடன் தொடர்புடைய வெவ்வேறு உப பகுதிகளை உள்ளடக்கிய சந்தை அழைக்கப்படுவது எது?
1) இலக்குச்சந்தை (Target Market)
2) தேவைச்சந்தை (Need Market)
3) இணைந்தச் சந்தை (Meta Market)
4) வாய்ப்புள்ள சந்தை (Potential Market)
5) உற்பத்திப் பொருட்சந்தை (Product Market)

05. பின்வருவனவற்றுள் எது சந்தைப்படுத்தலில் உற்பத்திக் கலவையில் உள்ளடங்கும்,
1) ஓரிடப்படுத்தல் (Location) 2) பொதியிடல்(Packaging)
3) விளம்பரம் (Advertising)
4) பட்டியல் விலை (List Price)
5) விநியோக வழிகள் (Distribution Channels)

06. பொதியிடலின் ஒரு நோக்கம்,
1) பாதுகாப்பு. 2) கவனத்தை ஈர்த்தல்.
3) களஞ்சியப்படுத்த இலகுவாயிருத்தல்.
4) கிரயத்தை இழிவாக்கல். 5) மேற்போந்த அனைத்தும்.

07. இலத்திரனியல் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தை எவ்வாறு அழைக்கப்படும்?
1) தேவை சந்தை. 2) உற்பத்திப்பொருட்சந்தை.
3) சந்தையிடம் 4) தொடர்புப்பொருட்சந்தை
5) சந்தைவெளி.

08. உற்பத்தி ஒன்றின் இரண்டாம் கட்ட விநியோகச் செய்முறையில் உள்ளடக்கப்படுவோர்,
1) உற்பத்தியாளர் மட்டும்.
2) உற்பத்தியாளரும் சில்லறை வியாபாரியும்.
3) உற்பத்தியாளரும் முகவரும்.
4) உற்பத்தியாளரும் மொத்த வியாபாரியும்.
5) உற்பத்தியாளர், முகவர், மொத்த வியாபாரி.

09. மக்கள் தொடர்புக்கு (Public Relation) உதவும் முறை,
1) மாதிரிப் பொருட்களை வழங்குதல்.
2) பொது அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுதல்.
3) வர்த்தக கண்காட்சிகளை நடத்துதல்.
4) ஜன்னல் அலங்காரங்களை மேற்கொள்ளல்.
5) சுவரொட்டி பதாகை போன்றன பயன்படுத்தல்.

10. உற்பத்திப் பொருளின் கிரயத்துடன் குறித்த சதவீத இலாபத்தைக் கூட்டும் விலையிடல் முறை எவ்வாறு அழைக்கப்படும் ?
1) சந்தைவீத விலையிடல் (Going Rate Pricing)
2) பெறுமான அடிப்படை விலையிடல் (Value Pricing)
3) இலக்கு வருவாய் விலையிடல் (Target Return Pricing)
4) கூட்டிக் குறித்து விலையிடல் (Make up Pricing)
5) தொகுதி விலையிடல் (Group Pricing)

11. பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்ய கொள்வனவாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான வேறுபட்ட குறுங்கால ஊக்குவிப்புக்கள் பொதுவாக எவ்வாறு அழைக்கப்படும்?
1) விளம்பரப்படுத்தல். 2) விற்பனை மேம்படுத்தல்.
3) பொதுமக்கள் தொடர்புகள். 4) தனிப்பட்ட விற்பனை.
5) நேர்ச்சந்தைப் படுத்தல்.

12. வியாபாரக்குறியில் அடங்க வேண்டிய அம்சங்கள் தொடர்பாகத் தவறானது எது?
1) பொருளின் அடிப்படையினை பயன் தொடர்பான கருத்து பெயரில் பொதிந்திருத்தல்.
2) உச்சரிக்கவும் இனங்காணவும் கூடியதாக இருத்தல்.
3) போட்டிப் பொருளில் இருந்து இனங்காணக்கூடிய தன்மை.
4) குறித்த ஒரு மொழியுடன் மட்டும் தொடர்புடையதாக இருத்தல்.
5) பதிவிற்கும் சட்ட பாதுகாப்பிற்கும் பொருத்தமானதாக இருத்தல்.

13. மேம்படுத்தல் முறைகளில் நிகழ்வுகளும் அனுபவங்களும் (Events & Experience) என்பதனுள் எது உள்ளடங்கும்?
1) தொழிற்சாலை சுற்றுலா. 2) விளையாட்டு நிகழ்வு.
3) வீதிக்கருமங்கள். 4) கலை நிகழ்ச்சிகள்.
5) மேற்போந்த அனைத்தும்.

14. நுகர்வோரை அறிவூட்டலும் கொள்வனவுக்குத் தூண்டுதலும் பொருளின் எந்த வாழ்க்கை மட்டத்தின் கட்டத்தில் மேற்கொள்ளப்படும்?
1) அபிவிருத்திக் கட்டம். 2) வளர்ச்சிக் கட்டம்.
3) அறிமுகக்கட்டம். 4) முதிர்வுக் கட்டம்.
5) வீழ்ச்சிக் கட்டம்.

15. விலையிடலின் ஒரு குறிக்கோளாக அமைவது யாது?
1) நடைமுறை இலாபத்தை உச்சமயப்படுத்தல்.
2) வாடிக்கையாளர் கேள்வியை எதிர்கொள்ளுதல்.
3) போட்டியாளரின் விலையுடன் பொருந்தச் செய்தல்.
4) வாடிக்கையாளர் காணும் பெறுமதிற்கமைய விலையிடல்.
5) இலக்கு வருவாய்க்காக விலையிடல்.

16. பின்வருவனவற்றில் விளம்பரம் ஒன்றின் சிறப்பியல்பாகக் கருதமுடியாதது எது?
1) மக்களுக்கான பொதுவான அறிவித்தல்.
2) கவர்ச்சிகரமான விவரணம்.
3) மீண்டும் மீண்டும் வழங்கப்படுதல்.
4) தனிப்பட்டதாக இருத்தல்.
5) பொதுவான விவரணம்.

17. சந்தைப்படுத்தல் உபாயம், விலையிடல் உபாயம் என்பவற்றை வெளிப்படுத்தும் வணிகத்திட்டத்தின் பகுதி,
1) சந்தை விமர்சனம். 2) சந்தைப்படுத்தல்.
3) வணிக விவரணம். 4) கட்டளைச் சுருக்கம்.
5) உற்பத்தி.

(13 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: A.T.நந்தன் B.Com (Hons), MBA (Reading), CMA (SL)
ராஜேஸ்வரி கல்வி நிலையம், கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகக் கல்வி, பகுதி I: தொடர்ச்சி....

18. பின்வருவனவற்றுள் எது வணிகத்திட்டமொன்றின் இன்றியமையாத ஒரு கூற்று அன்று?
    1) இயலுமை ஆய்வு.
    2) நிறுவகம் பற்றிய விவரணம்.
    3) செய்பணி திட்டம்.
    4) சந்தைப்படுத்தல் திட்டம்.
    5) நிதித்திட்டம்.

19. திரவியங்கள் பொறிவிருட்சமும் பொறித்தொகுகளும் என்பவற்றிற்கான தேவைப்பாடு வணிசத்திட்டத்தின் கிரயப்பகுப்பாய்வு என்பவை பின்வருவனவற்றுள் எதில் உள்ளடக்கப்படும்?
    1) நிறைவேற்றுச்சுருக்கம்.
    2) கம்பனி பற்றிய சுருக்கம்.
    3) தொழிற்பாட்டுத் திட்டம்.
    4) சந்தைப்படுத்தல் திட்டம்.
    5) நிதித்திட்டம்.

20. ஒரு வணிகத்திட்டதின் சராம்சம் மூலம் பெறக்கூடிய விவரம் எது?
    1) வணிகத்தின் வளங்கள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்தல்.
    2) வணிகங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது என்பதனை வெளிப்படுத்தல்.
    3) வணிகத்தின் முகாமை அமைப்பு பற்றி வெளிப்படுத்தல்.
    4) வணிகத்தின் உற்பத்தி பற்றி வெளிப்படுத்தல்.

*** 21-30 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்குக.**

21. தனிப்பட்டவர்களும் குழுக்களும் தத்தமது தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு தேவையான பெறுமதி கொண்ட பொருட்களையும் சேவைகளையும் வேறு நபர்கள் மூலம் உற்பத்தி செய்தலும் பரிமாற்றுதலும் .......................... என அழைக்கப்படும்.

22. ஒரு நிறுவகம் தனது அனைத்து உற்பத்திகளுக்கும் ஒரே வகையான குறியைப் பயன்படுத்துதல் .............................. ஆகும்.

23. ஒரு தரப்பினால் நிறைவேற்றப்பட்டு இன்னமொரு தரப்பினருக்கு கையளிக்கும் செயற்பாடு .............................. ஆகும்.

24. ஒரு வியாபார நிலையத்தின் சந்தைப்படுத்தற் செயற்பாடுகளின் வெற்றியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்கம் செலுத்தும் மக்களுடனோ நிறுவனங்களுடனோ தொடர்புகளை விருத்தி செய்தல் .............................. என அழைக்கப்படும்.

25. குறித்த ஒரு பண்டத்திற்கு சந்தையின் அனுபவம்மிக்க துண்டம் ............... எனப்படும்.

26. குறித்த் தனிச்சில்லறை வியாபாரியினால் மட்டும் பொருட்கள் பங்கீடு செய்யப்படும் விநியோக வழி .............................................. ஆகும்.

27. வாடிக்கையாளர் வேறுபாடு, உற்பத்தி வேறுபாடு புவியியல் வேறுபாடு அடிப்படையில் குறிக்கப்படும் விலையிடல் .............................. ஆகும்.

28. ஒரு பொருளினை சந்தைக்கு அறிமுகப்படுத்தும்போது உயர்ந்த விலையினை நிர்ணயித்தல் .............................. என அழைக்கப்படும்.

29. சமபப்பாட்டுப்புள்ளி திட்டமிடல்நிதிக்கூற்றுக்கள் என்பவற்றை தெளிவுபடுத்தும் வணிகத் திட்டத்தின் பகுதி .............................. ஆகும்.

30. ஒரு வணிகத்திட்டம் .............................. உருவாக்குவதற்கான ஒரு நியாயமான ஆவணமாகப் பயன்படுத்தலாம்.

*** 31-40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

31. பின்வரும் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் அணுகுமுறையின் மூலம் அடிப்படையாக அகக்றை செலுத்தப்படும் விடயம் எதுவெனக் குறிப்பிடுக.

| எண்ணக்கரு | அக்கறை |
|---|---|
| உற்பத்தி | |
| உற்பத்திப்பொருள் | |
| விற்பனை | |
| சந்தைப்படுத்தல் | |

32. வெவ்வேறு வாடிக்கையாளருடன் அன்னியோன்யமானது திருப்திகரமான்துமான தொடர்பினை ஏற்படுத்தும் சந்தைப்படுத்தல் என்பது யாது?

..............................................................................................

33. வரையறுத்த கம்பனியொன்றின் தரவுகள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| அலகிற்கான மாறும் கிரயம் | 60 |
| அலகிற்கான விற்பனை விலை | 200 |
| மொத்த நிலையான கிரயம் | 280,000 |
| விற்பனை அலகுகள் | 1,000 |

இந்நிறுவனத்தின் சமபாட்டு விற்பனை அலகுகளின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

34. பின்வரும் அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| விற்பனையாளர் 4P's | கொள்வனவாளர்கள் -4C's/SIVA model |
|---|---|
| உற்பத்திப் பொருள் | .................................................. |
| விலை | .................................................. |
| இடம் | .................................................. |
| மேம்படுத்தல் | .................................................. |

35. விளம்பரப்படுத்தலின் மூன்று அடிப்படை நோக்கங்களைக் குறிப்பிடுக.

..............................................................................................

36. கொள்வனவாளரின் தேவையடிப்படையில் சந்தையின் பிரதான வகை இரண்டும் எவை?

..............................................................................................

37. வாடிக்கையாளர் எண்ணகக்ரு பிரதானமாக எதில் கருத்தில் கொள்ளும்?

..............................................................................................

38. விநியோக வழிமுறைகள் நான்கும் எவை?

..............................................................................................

39. நிதி திட்டமொன்றிலே உள்ளடக்கப்பட வேண்டிய இன்றியமையாத மூன்று நிதிக் கூற்றுக்களும் எவை?

..............................................................................................

40. வணிகத்திட்டம் ஒன்று கொண்டிருக்க வேண்டிய நான்கு பிரதான அம்சங்களும் எவை?

..............................................................................................

## பகுதி – II

01. 1) உற்பத்தி எண்ணக்கரு (Production Concept), உற்பத்திப் பொருள் எண்ணக்கரு (Product Concept), விற்பனை எண்ணக்கரு(Selling Concept), சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (Marketing Concept)முழுமைப்படைப்பு எண்ணக்கரு (The Holisitic Concept), என்பவற்றை ஒப்பிட்டு பின்வரும் அடிப்படையில் வேறுபடுத்துக.
    ஆரம்பம், அக்கறை, உபாயம், இறுதி இலக்கு (உமது விடையை ஓர் அட்டவணை அடிப்படையில் விளக்குக)
    2) விற்பனை மேம்படுத்தல்.
       1. நுகர்வோர் மேம்படுத்தல் (Consumer Promotion)
       2. வியாபார மேம்படுத்தல் (Trade Promotion)
       3. வணிக ஊழியர் மேம்படுத்தல் (Sale Force Promotion)
    போன்றவாறு மேற்கொள்ளப்படும். அதற்கமைய பின்வரும் கருவிகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள நுட்பங்களின் கீழ் தொகுதிப்படுத்துக.
    * கடன்வசதி
    * விலைக்கழிவு (Premiums)
    * விற்பனைப் புள்ளி
    * வியாபாரக்கழிவு
    * விருது வழங்கல்
    * இலவச உபகரணம் வழங்கல்
    * உத்தரவாதச் சான்றிதழ்
    * ஊழியர்களுக்கிடையிலான போட்டி
    * கூப்பன்
    * இலவச மாதிரிகளை வழங்கல்
    * பொழுதுபோக்கு சுற்றுலா
    * விற்பனைத் தள்ளுபடி
    3) விலையிடலின்போது செல்வாக்குச்செலுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கிடையிலான தொடர்பை விளக்குக.
    4) பண்டப்பெயர் (Brand name) ஒன்றுடன் நீர் ஒரு மென்பானம் (Soft Drink) உருவாக்கத் தீர்மானித்துள்ளீர்.
       1. பொருத்தமான பண்டப் பெயர் ஒன்றை எழுதுக.
       2. நீர் தீர்மானித்த பண்டக்குறியை எப்பண்புகளின் அடிப்டையில் தீர்மானித்துள்ளீர்?
       3. பொருளை பண்டக்குறியுடன் வழங்குவதன் மூலம் வணிகரும், வாடிக்கையாளரும் அடையும் அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

02. 1) 1. விலையிடல் உபாயங்களையும் குறிக்கோள்களையும் குறிப்பிடுக.
       2. குறித்தப் பொருள் ஒன்றிற்குக் காணப்படக்கூடிய பல்வேறு வகையான கேள்விகளைக் குறிப்பிடுக.
    2) 1. பொதியிடல் மூலம் வணிக நபர்கள், வாடிக்கையாளர்கள் ஆகிய இரு பகுதியினருக்கும் கிடைக்கும் அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.
       2. சந்தை ஆய்வுக்கான தகவல் சேகரிப்பு மூலங்களின் ஒன்றான வினாக்கொத்து (Questionaire) முறையில் எவ்வாறான வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
    3) 1. மேம்படுத்தல் கலவையின் கூறுகளைப் பெயரிடுக.
       2. தற்காலத்தில் மேம்படுத்தல் கலவையின் கூறுகளில் ஒன்றாக 'நிகழ்வுகளும் அனுபவங்களும்' (Events & Experience) பயன்படுத்தப்படுகின்றன. அதனை விளக்கி, நிகழ்வுகளுக்கும் அனுபவங்களுக்கும் பயன்படுத்தப்படும் கருவிகளைக் குறிப்பிடுக.
    4) 1. சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளில் மிகவும் பழைமை வாய்ந்த எண்ணக்கரு உற்பத்தி எண்ணக்கரு (Product Concept) ஆகும். எனினும், அது இன்னும் தொழிற்படுகின்றது என்பதை விளக்குக.
       2. பொருள் அல்லது சேவை தொடர்பாக வணிகங்கருமங்களில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு எவ்வகையான கருமங்களுக்கு சந்தைப்படுத்தலானது அவசியமாகக் காணப்படுகின்றது?

03. 1) 1. சந்தைத்துண்டமாக்கல் (Market Segmentation) எனப்படுவது யாது?
       2. ஓர் ஆடை விற்பனையாளர் தனது சந்தையினை என்ன அடிப்படையில் துண்டமாக்க முடியும் என்பதனை விளக்குக.
    2) பின்வரும் விளம்பரப்படுத்தல் முறைகளின் நன்மைகளையும் வரையறைகளையும் ஒப்பீட்டு ரீதியில் காட்டுக.
       1. தொலைக்காட்சி.
       2. செய்தித்தாள்.
       3. மஞ்சள்பக்கம்.
       4. வானொலி
    3) 1. உற்பத்திப் பொருளின் வாழ்க்கை வட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பின்வருவன தொடர்பாகப் பின்பற்றும் விரகுகளைக் குறிப்பிடுக.
       உற்பத்தி, விலை, மேம்படுத்தல், விநியோகம்.
       2. தற்கால வணிக நிறுவனங்கள் ஏன் வாடிக்கையாளர் மைய எண்ணக்கருவினை நோக்கி செயற்படுகின்றன என்பதனை விளக்குக.
    4) சந்தைப்படுத்தலில் தனிப்பட்ட விற்பனைகளில் ஈடுபடும் ஊழியர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகளையும் அவர்கள் ஆற்றும் பணிகளையும் குறிப்பிடுக.

04. 1) சந்தைப்படுத்தலில் பொதுசன உறவும் பகிரங்கப்படுத்தலும் (Public Relation & Publicity) எனும் எண்ணக்கரு முக்கியத்துவம் உடையதாக கருதப்படுகின்றது.
       1. பொதுசன உறவு எனப்படுவது யாது?
       2. சந்தைப்படுத்தலில் பொதுசன உறவின் முக்கியத்துவத்தினை விளக்குக.
    2) Catalog மூலமான விநியோக முறையானது தற்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று வருகின்றது. இதன் மூலம் நுகர்வோருக்கும் வணிகருக்கும் ஏற்படும் நன்மைகளை விளக்குக.
    3) 1. சந்தைப்படுத்தலின் அண்மைக்காலப் போக்குகளைக் குறிப்பிடுக.
       2. பண்டங்களை விநியோகிப்பதில் ஏன் இடைநடுவர்கள் முக்கியமானவர்கள் என விளக்குக.
    4) பின்வருவனபற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
       1. நுண்பாக சந்தைப்படுத்தலும் பேரண்டச் சந்தைப்படுத்தலும் (Micro Marketing & Macro Marketing)
       2. இலக்குச் சந்தைப்படுத்தல் (Target Market)
       3. வழங்கல் சேவை (Market Logistics)

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 வருட பூர்த்தி பெருமையுடன் DIMO Automobile பயிற்சி பாடசாலை இன்று முதல் யாழ் மண்ணிலும்!



## 16 மாணவர்களுக்கு ஒருவருட பாடநெறி இலவசம்!

இலங்கை Automobile துறையில் அமைந்த ஒரே தனியார் பாடசாலையான DIMO Automobile Training School (மோட்டர் வாகன பயிற்சி பாடசூலை) தனது 20ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடும் இன்றைய தினம், யாழ் மண்ணில் முதல் முறையாக தனது பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதில் பெருமை கொள்கிறது.

1990ம் ஆண்டு இத்தினத்தில் பியகமவில் ஆரம்பிக்கப்பட்ட DIMO மோட்டார் வாகன பயிற்சி பாடசாலையானது, Mercedes-Benz இனால் வடிவமைக்கப்பட்ட சர்வதேச தரத்திலான 2 வருட கற்கை நெறியினை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், DIMOவின் தாபன சமூகப்பொறுப்பு திட்டத்தின் கீழ், யாழ் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் 16 மாணவர்களுக்கு ஒருவருட பாடநெறி இங்கு இலவசமாக வழங்கப்படும்.

Automobile தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை பயிற்சி நெறியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சிறப்புற சித்தி பெறும் 8 மாணவர்கள், கொழும்பு சியம்பலாபேயிலுள்ள DATS Workshopகளில் நடத்தப்படும் செயன்முறை பயிற்சி நெறிக்கு தகுதி பெறுவர்.

**DIESEL & MOTOR ENGINEERING PLC**
214, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்.
www.dimolanka.com
மேலதிக விபரங்களுக்கு: 0773 686651

dimo TECHNOLOGY
உன்னத எதிர்பார்ப்பு

www.sarva.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கலாசார பண்பாட்டுக் கழகம்

பெருமையுடன் வழங்கும்

மஹாகவி காளிதாஸின் சிறப்புமிகு காவியம்

## அபிக்ஞான சகுந்தலம்

நாட்டிய நாடகம் வழங்குபவர்கள்: அரு ஸ்ரீ கலையகம்



காதல், அவமானம்,
அவநம்பிக்கை,
மனஉறுதி,
இனிய மறு இணைப்பு,
இணைந்த
ஒரு காதல் காவியம்

தயாரிப்பு நெறியாள்கை: கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்

மே 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு

வீரசிங்கம் மண்டபம்,
12 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை :

Shakthi TV சக்தி FM





# Marina

## பேக்கரி உரிமையாளர்களே, வியாபாரிகளே, இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

பேக்கரிகளுக்கான உற்பத்திப் பொருள்களை 25க்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எமது நிறுவனம், சர்வதேசத் தரச்சிறப்புச் சான்றிதழ்களைப் பெற்ற, உன்னத தயாரிப்புக்களை உள்நாட்டுச் சந்தைக்கும் பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. 100 % உள்நாட்டு மூலப்பொருள்களையும் உள்நாட்டு மனித உழைப்பையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இப் பொருள்களை வாங்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு உந்துசக்தி அளிக்கும் எமது முயற்சியில் நீங்களும் பங்குகொள்ளுங்கள்.

Halaal - Sri Lanka

100% SRI LANKAN PRODUCTS



எமது தயாரிப்புக்கள்: மாஜரின் / பாண் கொழுப்பு / கேக் ஐசிங் கொழுப்பு / தாவரக் கொழுப்பு (ஐஸ் கிறீமுக்காக) பிஸ்கட் கொழுப்பு / ஃபிறையிங் கொழுப்பு / பாண் தட்டுக்குப் பூசும் எண்ணெய்

Marina தூய்மையான தேங்காய் எண்ணெய் (R.B.D) / குக்கிங் ஒயில் (R.B.D PALM OLEIN)

மரீனா தயாரிப்புக்களின் விநியோகஸ்தராகச் செயற்பட உங்களுக்கு வாய்ப்பு

பினவரும நகரஙகளில விநியோகப பிரதிநிதிகள தேவை

பேக்கரித் தயாரிப்புகள்
FMCG தயாரிப்புகள் } யாழ்ப்பாணம்

தேவையான தகுதிகள்

ஒரு மில்லியன் ரூபாய் வங்கி உத்தரவாதம்
களஞ்சிய இடவசதி (வசதியான ஒரு பிரதேசத்தில்)
வாகன வசதி

அழைக்கவும் 0772 386 711

MEMBER OF NMK GROUP Marina

ஒரு மில்லியன் ரூபாய் வங்கி உத்தரவாதம்
களஞ்சிய இடவசதி (வசதியான ஒரு பிரதேசத்தில்)
வாகன வசதி

அழைக்கவும் 0772 386 711








# சமூக அபிவிருத்திக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT4D) யாழில் தடம் பதிக்கின்றது

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப படைப்புக்கள் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் யாழ்நகரில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வானது விவசாயிகள், பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள், சிறு தொழிலாளர்கள் மற்றும் வெவ்வேறுபட்ட நிலையில் உள்ள குழுவினருக்கு பயனுடையதாகும்.

அனுமதி இலவசம்

நாள் மற்றும் நேரம் :
மே மாதம் 6 ஆம் திகதி 2010
( காலை 9.30 மணி முதல் - மாலை 5.00 மணி வரை )

இடம் :
யாழ் நூலக கணனிக்கூடம்

மேலதிக தகவல்களுக்கு
இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்
160/24, கிரிமண்டல மாவத்தை கொழும்பு-5
தொலைபேசி : 011-2369099 தொலைநகல் : 011-2369091
மின்னஞ்சல் : esociety@icta.lk இணையம் : www.icta.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்

JCB Backhoe Loader



மணித்தியால அடிப்படையில் வாடகைக்கு பெறலாம்

தொடர்புகளுக்கு:

நிமோவி றெடிமிக்ஸ்நிறுவனம்
Nimovi Readymix (Pvt) Ltd

இல.25 இராமகிருஸ்ண வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
011-2363435

கேரதீவு வீதி,
நாவற்குழி,
யாழ்ப்பாணம்.
071-3680291
0777252722



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2117 திகதி 01-05-2010

ஆங்கில எழுத்திற்கும் M

வெற்றி எண்கள் 48 67 69 70

போனஸ் இல: 06

ஜக்பொட் பரிசு ரூ. 17,253,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 135769 | 20/- | 2,715,380/- |
| 2 இல | 9575 | 100/- | 957,500/- |
| 3 இல | 198 | 1,000/- | 198,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 5190 | 40/- | 207,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 500 | 1,000/- | 500,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,253,400/- | - |
| 1 இல + போனஸ் இல | 6503 | 100/- | 650,300/- |
| 2 இல + போனஸ் இல | 308 | 500/- | 154,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 222 | 200/- | 44,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 5,860,680/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 158299 | | 6,460,680/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - B. நதீகா லக்மினி சந்ரசேகர - மீனுவான்கொடை.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - M.M. நலிந்த ருவன் பண்டார - தெல்கொடை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 301879000-2-22 |
| மொணராகலை | 301874873-6-23 |
| களுத்துறை | 301878389-7-37 |
| மாத்தளை | 301877000-5-27 |
| மட்டக்களப்பு | 301877537-8-43 |
| பதுளை | 301885250-5-12 |
| கம்பஹா | 301888331-1-42 |
| கொழும்பு | 301889407-1-47 |
| வவுனியா | 301882410-4-16 |
| கம்பஹா | 301884743-1-21 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு


ரூ. 17,623,425/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 மே 05 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு விதிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 03 |
| ★ | ★ |
| 06 | 05 |
| ★ | ★ |
| 1928 | 2009 |

அமரர்

### ஆபரணம் யோவான்பிள்ளை

(புகையிரத கட்டடப் பகுதி மேற்பார்வையாளர், வவுனியா/யாழ்ப்பாணம்)

குடும்பத்தின் நல்ல தந்தையாக பேரப்பிள்ளைகளின் அன்புப் பேரனாக சமூகத்தின் சிறந்த முன்மாதிரியாய் அமைதியை நாடி வாழ்ந்த தந்தையே! இவ்வுலகில் உமது உருவம் மறைந்து ஓராண்டு சென்றதே-என்றும் அழியாத உருவமாக எம் மனக்கண் முன்னே என்றும் வாழ்கின்றீர்.

அன்னாரின் இடப்பெயர்விலும், பிரிவிலும் துணைநின்ற அருட்தந்தையர்கள், அன்னை தெரேசா கன்னியர்மட அருட் சகோதரிகள், பணியாளர்கள் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்து எமது துயரிலும் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தொ.பே:0779801447

55, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.


பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்க ஒரு தங்கமெடல் வழங்குங்கள்.



ரூபா 350 இல் இருந்து

S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)


## விக்னேஸ்வரா ஆரம்பப்பிரிவு மீண்டும் சொந்தக் கட்டடத்தில்

யாழ்ப்பாணம்,மே 3

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளன.

கடந்த 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தஅனர்த்தங்களின் போது சேதமடைந்த இந்த வகுப்பறைகள் வித்தியாலயத்துடன் இணைந்து இயங்கி வந்தன.

பாடசாலைக் கட்டடம் புனரமைக்கப்பட்டதையடுத்து மீண்டும் ஆரம்பப்பிரிவு சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதாக வித்தியாலய அதிபர் த.அம்பலவாணர் தெரிவித்தார். (1-207)

## மாணவர்களுக்கு காலணிகள்

நல்லூர்,மே 3

நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு அமலராஜ் அடிகள் நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி காலணிகளை பாடசாலை அதிபர் கோ.பத்மநாதனிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (201-111)

## பொதுமக்களின் எதிர்ப்பினால் நவாலிக் கிளையை மூடும் திட்டம் கைவிடப்பட்டது

மானிப்பாய்,மே 3

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் நவாலியிலுள்ள ஆறாம் இலக்க கிளையை மூடிவிட்டு எட்டாம் இலக்கக் கிளையுடன் இணைப்பதற்கான முயற்சி பொது மக்களின் பலத்த எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆறாம் இலக்கக் கிளை போதிய வருமானம் இல்லையெனக் காரணம் காட்டப்பட்டு சென்றமாதம் முதல் மூடப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்ததோடு, சங்க நிர்வாகத்தினருடனும் தொடர்பு கொண்டு தமது எதிர்ப்பைக் காட்டினர். இதன் காரணமாக இந்தக் கிளையை மூடிவிடுவதென்ற தீர்மானத்தைக் கைவிட சங்க நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-100)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 3

சாவகச்சேரி, வாரிவளவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம் தொடர்பான பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆலய மண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆலயப் பரம்பரையினர் உட்பட பொதுமக்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04-207)

## மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம்,மே 3

வீதியில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை கல்வயல் பகுதியில் இடம்பெற்றது.

மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த தேவசகாயம் ஆபிரகாம் (வயது-53) என்பவரே இவ்வாறு மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (04-207)

## அக்குப்பஞ்சர் சிகிச்சை

கைதடி ஆயுர்வேத வைத்திய சாலையில் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் அக்குப் பஞ்சர் சிகிச்சை நடைபெறவுள்ளதாக வைத்திய கலாநிதி [illegible] அறிவித்துள்ளார். (6)


## மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங்வகைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மர அடைப்புகள் மற்றும் இறக்குமதி செய் யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

ஸ்ரார் செராமிக்ஸ்

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 5672061, 077 7578277- ராஜா

(இ/567231)



## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 17
திகதி - 01.05.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து E — அதிர்ஷ்ட இலக்கம் 9 — வெற்றி இலக்கம் 4 5 2 9 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E 9 4 5 2 9 9 | ரூ. 22,623,345.00 | - |
| 1 பரிசு | 9 4 5 2 9 9 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 4 5 2 9 9 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 5 2 9 9 | ரூ. 10,000.00 | 22 |
| 4 பரிசு | 2 9 9 | ரூ. 1,000.00 | 188 |
| 5 பரிசு | 9 9 | ரூ. 50.00 | 1919 |
| 6 பரிசு | 9 | ரூ. 20.00 | 18603 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 5 2 9 | ரூ. 1,000.00 | [illegible] |
| 8 பரிசு | 4 5 2 | ரூ. 100.00 | 197 |
| 9 பரிசு | 4 5 | ரூ. 50.00 | 1952 |
| 10 பரிசு | E | ரூ. 20.00 | 7542 |
| 11 பரிசு | E 9 | ரூ. 100.00 | 864 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,447,550.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 22,964,585.00


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 | 14 |
| ★ | ★ |
| 04 | 05 |
| ★ | ★ |
| 1975 | 2009 |

### வெள்ளையன் கீதகுமார்

(சண்டிலிப்பாய்)

என்றும் எங்கள் குலவிளக்கே!
நினைக்கின்ற பொழுதெல்லாம் உன்
புன்னகை, அன்பு கலந்த பேச்சை எம்
காதோரம் ஒலிக்கவிட்டுச் சென்று-இன்றுடன்
ஓராண்டு கடந்து விட்டதய்யா-ஓராண்டு
என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உறவாடி வாழுவோம் என்றும் உன்
நினைவோடு கலங்கிய விழிகளுடன்...

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
(97713)
குடும்பத்தினர்.


## எங்களின் வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு!

- ★ மென்பானம் தயாரிப்பு பொருள்கள்
- ★ கேக் தயாரிக்கும் பொருள்கள்
- ★ பொலித்தீன், லஞ்ச் பொக்ஸ்
- ★ இந்தியன் ஊதுபத்தி வகைகள்
- ★ ஆயுர் வேத மூலிகைகள்
- ★ பாடசாலை உபகரணங்கள்
- ★ பான்சி குட்ஸ் வகைகள்
- ★ ஹொட்டல் மற்றும் சைனிஸ் ஹொட்டலுக் குரிய பொருள்கள் மற்றும் பல்வேறு வகையான அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
- ★ ஐஸ்கிறிம் தயாரிப்புப் பொருள்கள்
- ★ எமல்சன் வகைகள்
- ★ பிஸ்கட் வகைகள்
- ★ ஆயுர்வேத மருந்துகள்
- ★ றோயல் தயாரிப்புப்பொருள்கள்
- ★ சொக்லெட் வகைகள்
- ★ பேப்பர் சேவியற்
- ★ எசன்ஸ் வகைகள்
- ★ றொபி வகைகள்
- ★ சொப்பிங் பாக்
- ★ லைற் வகைகள்



[illegible] நறுமணப் பூங்கா

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: இல. 021 222 2567

(சி-567170)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.12.1990**

இலங்கை அரசு மனித உரிமைகளை முறைப்படி பேணுவதாகத் தமக்கு அறிக்கைகள் கிடைத்தால் மாத்திரமே இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது குறித்துத் தீர்மானிப்போம் என ஜப்பானும் மேற்குலக நாடுகளும் கண்டிப்புடன் தெரிவிப்பு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் 480 பேர் தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமது கல்வியைத் தொடர வசதியாக இடமாற்ற அனுமதி கோரியுள்ளனர். இவர்களில் 400 பேர் வைத்திய பீட மாணவர்கள் எனத் தெரிவிப்பு.

**02.12.1990**

இந்திரா காங்கிரஸ் மற்றும் அண்ணா தி.மு.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியப் பிரதமரிடம் முன்வைப்பு.

யாழ். மாவட்டத்தில் செயற்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கொழும்பிலிருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வடபகுதி மக்களுக்கென எடுத்து வருவதற்கு அரசு முட்டுக்கட்டை போடுவதாகக் குற்றச்சாட்டு.

**03.12.1990**

கட்டுவன், வயாவிளான், குரும்பசிட்டிப் பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மூண்ட கடும் சண்டையில் படையினருக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிப்பு.

தமிழக முதலமைச்சர் கருணாநிதி இன்று இந்தியப் பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்து ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசவுள்ளதாகத் தெரிவிப்பு.

**04.12.1990**

வடக்கு- கிழக்கில் நடக்கும் யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஜனாதிபதி பிரேமதாஸ, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைத் தாமே நேரில் சந்தித்துப் பேசுவதற்கு முயற்சிப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

வவுனியா கந்தசாமிகோயில் பகுதி வீடுகளிலிருந்து ஊர்காவல் படையினரால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்ட பத்துத் தமிழ்ப் பொதுமக்கள் அவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

**05.12.1990**

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் அரச படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினால் 13 ஆயிரத்து 600 வீடுகள், 776 வர்த்தக நிலையங்கள், 175 கோயில்கள் மற்றும் 450 பாடசாலைகளும் பொதுக்கட்டடிடங்களும் சேதமுற்றதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு.

முஸ்லிம் குழுக்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கிடைத்த தகவல்களையடுத்து கொழும்பில் தமிழர்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பித்து தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிப்பு.

**06.12.1990**

யாழ். மாவட்டத்திலுள்ள 501 பாடசாலைகளில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுமார் நூறு பாடசாலைகள் இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதாகத் தெரிவிப்பு.

இந்திய மண்ணில் தமிழீழ விடுதலைப்புலிகள் வன்செயல்களை மேற்கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்தத் தமிழக அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு மத்திய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என மத்திய உள்துறை இணை அமைச்சர், தமிழக முதலவர் கருணாநிதிக்கு உறுதி மொழி வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

**07.12.1990**

பருத்தித்துறையிலும் சாவகச்சேரியிலும் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சினால் ஆறுபேர் பலி. பலர் படுகாயமுற்றதாகத் தெரிவிப்பு.

தற்போது ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களும் இராணுவத்தில் இணைக்கப்படுவர் என அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

**08.12.1990**

இலங்கை ஆயுதப்படையினரின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இதுவரை 8 ஆயிரத்து 633 தமிழ்க் குடும்பங்கள் வேறு மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிப்பு.

கொழும்பில் வதியும் தமிழர்களுக்கு பொலிஸாரும் ஆயுதப்படையினரும் தொடர்ந்தும் தொல்லை கொடுத்து வருவதாகத் தெரிவிப்பு.

**09.12.1990**

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இருநாள்களிலும் மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களில் மாணவர்கள் உட்பட 76 பேர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் குற்றச்சாட்டு.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தாம் மீண்டும் அரசியலில் பிரவேசிக்கும் சாத்தியம் உள்ளதாகப் பேட்டியொன்றில் தெரிவிப்பு.

**10.12.1990**

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிர்வாக அதிகாரத்தைத் தமிழர்களிடமிருந்து பறிக்கும் ஒரு திட்டத்துடன் சிங்கள அதிகாரிகளைக்கொண்டு வடக்கு - கிழக்கை நிர்வகிக்கும் இடைக்கால ஏற்பாடொன்றை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகள் அனுப்புவதற்குக் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் கட்டுப்பாடு விதித்துள்ளமையால் போதிய அளவு மருந்து வகைகளை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க முடியாதுள்ளதாகச் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பு.

**11.12.1990**

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளைச் சத்தடி செய்யாமல் பலவந்தமாக இலங்கைக்குத் திரும்பி அனுப்பும் நடவடிக்கையில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

கொழும்பிலிருந்து வந்து வவுனியாவில் தங்கியிருந்தவர்கள் பூந்தோட்டம் பகுதியூடாக யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்த இராணுவத்தினர், மறு பகுதியிலிருந்து பூந்தோட்டம் பகுதியூடாக வவுனியாவுக்குள் செல்ல எவரையும் அனுமதிக்க மறுத்ததாகத் தெரிவிப்பு.

**12.12.1990**

வளைகுடாப் பிரச்சினை காரணமாக மசகு எண்ணெயின் விலை அதிகரித்ததால் இலங்கைக்கு 600கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு தெரிவிப்பு.

மன்னார் நகரத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது கொள்ளையிடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் அங்கிருந்து கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

**13.12.1990**

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் எனக் கருதப்படும் ஒதுக்குப் புறப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள ஆயுதப் படை முகாம்களை அரசு வாபஸ் பெறத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிப்பு.

எந்த நிலையிலும் இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்பமாட்டாது. அதே சமயம் பிறநாடெதுவும் இலங்கையில் தலையிடவும் இந்தியா அனுமதிக்காது என இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா தெரிவிப்பு.

**14.12.1990**

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் உண்மை நிலையை நேரில் சென்று கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரிட்டிஷ் அரசு கொழும்பிலுள்ள தனது தூதுவரைப் பணித்திருப்பதாகத் தெரிவிப்பு.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் சொல்லொணாத் துன்பங்களைச் சித்தரிக்கும் வண்ணப் படங்களைக் கொண்ட நத்தார் வாழ்த்து மடல்கள் லண்டனில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிப்பு.

**15.12.1990**

வடக்கு - கிழக்கில் அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி சமாதானப் பேச்சு வார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு உலக திருச்சபைப் பிரதிநிதிகள் இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடுப்பு.

விடுதலைப் புலிகள் இயக்கம் 'குமரப்பா 5000' என்ற பெயரிலான அதிசக்தி வாய்ந்த குண்டு வகையொன்றைத் தயாரித்துள்ளதாக இலங்கை இராணுவ நிபுணர்கள் தெரிவிப்பு.

# கைதடி ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவை சுற்றயல்கூறு வைத்தியசாலையாகத் தரமுயர்த்துக

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

நாவற்குழி, மே3

கைதடியிலுள்ள பொது அமைப்புக்கள் கைதடி ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவை சுற்றயல்கூறு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றன.

இயல்பு நிலை மீளத் திரும்பியதனைத் தொடர்ந்து மருத்துவ அதிகாரிகள், தாதியர் உட்பட்ட ஆளணியினரை நியமித்து விடுதி வசதிகளுடன் கூடிய சுற்றயல்கூறு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துமாறு நீண்ட காலமாகவே கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுக்கும் இந்த மருத்துவமனையின் தர உயர்வும் வசதிகள் அதிகரிப்பதும் பேருதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் இடைப்பட்ட 16 கிலோ மீற்றர் பிரதேசத்தில் விடுதி வசதிகளுடன் எந்த ஒரு மருத்துவமனையும் இல்லை.

இதனால் பரந்த தென்மராட்சிப் பிரதேசத்தின் கைதடி, நாவற்குழி, நுணாவில், மட்டுவில் பிரதேச மக்கள் அரசின் மருத்துவச் சேவைகளைத் திறம்படப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனக் கூறப்பட்டது. (50-121)

# கத்தோலிக்க மாணவர் மாதத்தின் முதல் வெள்ளி மத அனுட்டானங்களில் ஈடுபட அனுமதிக்குக

## அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அறிவுறுத்து

பருத்தித்துறை, மே3

கத்தோலிக்க மாணவர்கள் மாதத்தில் முதல் வெள்ளிக்கிழமைகளில் மத அனுட்டானத்தில் கலந்துகொள்வதற்குப் பாடசாலை அதிபர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை கத்தோலிக்க சபையினால் கல்வி அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்ட யோசனையை அடுத்தே பாடசாலை அதிபர்களுக்கு இவ்வேண்டுகோள் கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ளது.

மாதத்தில் முதல் வெள்ளிக்கிழமைதோறும் ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாத நேரத்தில் பாடசாலையில் அல்லது பாடசாலைக்கு அண்மையிலுள்ள கத்தோலிக்க வணக்க ஸ்தலத்தில் ஆராதனை, பூசை வழிபாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்குமாறு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1-190)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஆளுநர் சந்திரசிறியால் திறந்து வைப்பு

## முதற்கட்டமாகச் செங்கற்கள் உற்பத்தி

கொழும்பு, மே3

யுத்தம் காரணமாகச் சேதமடைந்து நீண்டகாலமாக இயங்காமல் இருந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மீண்டும் செயற்பட ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்த நிலையில் தொழிற்சாலையை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அண்மையில் திறந்துவைத்தார்.

முதற்கட்டமாக இத்தொழிற்சாலையில் செங்கற்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன என்றும் அடுத்துவரும் மாதங்களில் ஓடுகளைத் தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், செங்கல் உற்பத்தி தொடர்பாக மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களில் ஐம்பது பேருக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிட்டியுள்ளதோடு, ஓடுகள் உற்பத்தி செய்யப்படும் பிரிவில் இருநூறு பேருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-206)

# சுகாதார நிலைமைகளை உறுதி செய்ய உணவகங்களுக்குள் திடீர் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், மே3

யாழ்.நகரப்பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் சுகாதாரப்பகுதியினர் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீரென உணவகங்களுக்குள் நுழைந்து அங்குள்ள சுகாதார நிலைமைகளைப் பார்வையிட்டு உறுதி செய்கின்றனர். மக்களின் சுகாதர நலனைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது சுகாதாரமற்ற முறையில் இயங்கும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதனால் உணவகங்களில் சனநெரிசல் அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் அங்கு சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும், அவற்றைத் தடுப்பதற்காகவே இந்தத் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கோள்ளப்படுவதாகவும் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.நகரில் மட்டுமன்றி குடாநாட்டின் அனைத்து பகுதிகளிலும் இந்தச் திடீர்சோதனைகள் நடைபெறவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (50-224)

# மல்லாவி மத்திய கல்லூரி வழமைக்குத் திரும்பியது

மல்லாவி, மே 3

மல்லாவி மத்திய கல்லூரியைப் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான நிதியை வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின்கீழ் மாகாணக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி மத்திய கல்லூரி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. துணுக்காய் வலயக் கல்வித் திணைக்களத்தினர் இந்த வேலையைச் சிறப்புறச் செய்து முடிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த கால யுத்தத்தினால் பகுதியளவில் சேதமுற்ற இந்திராணி கலையரங்கம் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது. அதிபர், ஆசிரியர் தங்கும் விடுதிகள் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. மீதியாகவுள்ள இரண்டு ஆசிரியர் விடுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக தலா நான்கு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைக் கட்டடங்களில் பகுதியளவில் சேதமுற்றவை யாவும் புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசி அழகாகக் காட்சி அளிக்கின்றன. அத்தோடு மீள் குடியேறிய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் யாவும் சிறப்பாக நடைபெறுவதையும் காணமுடிகின்றது. (க-121)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதியை அகலித்தலும் மரபுரிமை சின்னங்களைப் பாதுகாத்தலும்

கலாநிதி திருமதி அ. நோ. கிருஷ்ணவேணி

கடந்தகால அனர்த்த நிலைமைகளினால் எமது பண்பாட்டு, வரலாற்று முதன்மையுடைய மரபுரிமை இடங்கள் மற்றும் மரபுரிமைச் சின்னங்கள் (heritage sites and heritage properties) பலவும் அழிந்துள்ளன. யுத்தம் மட்டுமன்றி, எமது சமூகத்தில் மரபுரிமைச் சின்னங்கள் தொடர்பாகக் காணப்படுகின்ற அறியாமையும், அக்கறையீனமும் கூட இந்த இழப்புக்களுக்கான மிகப் பெரிய காரணமாகும்.

இப்போது மாறியுள்ள நிலைமைகளுக்குள் பாதிக்கப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்தல் என்பது முக்கியமான செயற்பாடாகியுள்ளது. இது கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டியதும், வரவேற்கப்பட வேண்டியதுமான ஒரு நிகழ்ச்சித் திட்டம்தான். ஆனால், அபிவிருத்தி பற்றிய தெளிவான சிந்தனையும், அதனையொட்டிய ஆற்றல் மிகுந்த துறைசார் விற்பனர்களினது செயற்பாடுகளும் எமக்குத் தேவைப்படுகிறது. அமைதிக்குப் பின் அபிவிருத்திகளை அவசரமாகச் செய்ய வேண்டும் என்ற உந்தல் காரணமாக நிலவரங்களை மேலும் மோசமடையச் செய்யக்கூடாது. யுத்த காலங்களிற் கூட தப்பிப் பிழைத்தவை இன்று அழிக்கப்படுவதற்கு நாமே காரணங்களாகி விடக்கூடாது. நன்றாகத் திட்டமிடப்பட்ட திட்டமிடற் கொள்கை, உள்ளூர் திட்டமிடற் தந்திரோபாயங்களை உருவாக்குதல், தற்காலிக கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை உருவாக்குதல் என்பவற்றை ஒட்டிய பொது வேலைத்திட்டமொன்று எமக்கு வேண்டும்.

இந்த இடத்தில் மூன்றாம் மண்டல நாடுகளிற் செய்யப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி உலகவங்கி சுட்டிக் காட்டுமொரு விடயம் எமக்கு முக்கியமானதாகும். அதன்படி மூன்றாம் மண்டல நாடுகளில் செய்யப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் துரதிஷ்டவசமாக அவர்களது சொந்த பண்பாட்டு வரலாற்று அடையாளங்களை அழிப்பதாக உள்ளது எனச் சுட்டிக் காட்டும் உலக வங்கியானது அதற்குப் பதிலாக அவர்களது பண்பாட்டு வரலாற்று அடையாளங்களைப் பேணிப்பாதுகாத்தபடி முன்னெடுக்கப்படும் நவீன அபிவிருத்திச் செயற்பாடுகளே அபிவிருத்திக்கான சரியான மூலோபாயமாக இருக்கும் என வற்புறுத்தியுள்ளது. துரதிஷ்டவசமாக எமது பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படும் புதிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் உலகளாவிய நியமங்களைப் பற்றி மட்டும் யோசிக்கின்ற நாம்; உள்ளூர் பண்பாடு, சமூகப் பெறுமானம், அவற்றின் வரலாறு என்பவற்றுக்குச் சிறியளவு மதிப்பைக் கூட கொடுப்பதில்லை. இதனால் அபிவிருத்தி, பூகோள மயமாக்கம் என்பவற்றின் பெயரால் நாமே நமது பண்பாட்டு வரலாற்று அடையாளங்களை அழிப்பவராகின்றோம்.

ஆனால் மறுதலையாக வளர்ச்சியடைந்த நாடுகளோ மிகவும் பிரக்ஞை பூர்வமாக தமது பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்களையும், இடங்களையும் அபிவிருத்தியின் போதும் இடித்தழிக்காது பாதுகாத்து வருகின்றன என்பதை மட்டும் நாம் தவறவிடுகின்றோம்.

இவ்விதமான சமூக நிலவரம் இலங்கையிலும் உண்டெனினும், இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களும் தமது பிராந்தியத்தின் தனித்துவமான பண்பாட்டு வரலாற்று அம்சங்களை அழியவிடாமல் பாதுகாப்பதில் பெரும் பிரயத்தனத்தினை மேற்கொண்டுள்ளன. ஆனால் எங்களிடம் இவ்விதமான முயற்சிகளோ, அதற்கான வேலைத் திட்டங்களோ இல்லை என்பதுமிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

முக்கியமாகத் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளை அகலிக்கும் செயற்பாடுகள் எமது பண்டைய பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களையும் - சின்னங்களையும் பகுதியாகவோ, முழுதாகவோ அழித்து விடக்கூடிய வாய்ப்பைப் பேரளவிற் கொண்டுள்ளன. குறிப்பாக வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை மையமாகக் கொண்ட இலங்கையின் ஒரேயொரு கோயில் நகரமும் (1790) அந்த நகரத்தை ஒட்டிக் காணப்படுகின்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட (1890) வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டபம், யாழ்ப்பாணத்தின் மூத்த பத்திரிகைகளில் ஒன்றான இந்து சாசனத்தின் பழைய கட்டடத்தொகுதி, நாவலர் இயக்கத்தின் கருத்து நிலையைக் கேள்விக்குள்ளாக்கிய கில்னரின் மண்டபம், யாழ்ப்பாணத்தின் சித்தர் பரம்பரையின் குறியீடான சிவதொண்டர் நிலையம் (1930) சுதேசியப் பாடசாலை இயக்கத்தின் முன்னோடியான நாவலர் பாடசாலை (1848) முதலியன உட்பட பல கோயில்களும், தேவாலயங்களும் காங்கேசன்துறைவீதி அகலிப்பால் பாதிக்கப்படப் போகின்றன. இதனைப் போலவே கள்ளியங்காடு - முத்திரைச் சந்தி பகுதியில் இருக்கும் பண்டைய சின்னங்கள், மானிப்பாய் வீதியில் காணப்படும் புராதன கிறிஸ்தவ தேவாலம், கண்டி வீதியில் ஒல்லாந்தர் கால யாழ்ப்பாண நகரக் கட்டுமானங்கள், நகரவடிவமைப்புக்கள் உட்பட மரபுரிமைச் சொத்துக்கள் பலவும் மேற்படி வீதி அகலிப்புச் செயற்பாட்டினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இந்த நிலைமைக்குள் மிஞ்சியுள்ள, இறுதியிலும் இறுதியான மரபுரிமைச் சின்னங்களை நமது எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டிய சமூக கடப்பாடு எமக்கு உள்ளது. அதே நேரம்,பொருத்தப்பாடுடைய புதிய அபிவிருத்திகளையும் நாம் ஏற்படுத்த வேண்டும். நவீன வசதிகளும் - அதே நேரம் பண்பாட்டுத் தனித்துவமும் உடைய (பூகோளப் போக்கும், பிராந்திய தனித்துவமும் தனிச் சிறப்பியல்புகளோடு கலந்திணைந்த), பண்டைய பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்களை அழிக்காது உடள்ளெடுத்துக் கொண்டிருக்கும் அபிவிருத்தியே எமக்குத் தேவைப்படுவது. அதற்கான சாத்தியப்பாடுகளை பொது நலத்தோடு நாம் கண்டடைய முயற்சிக்க வேண்டும். பொதுத் திட்டங்களையும், மாற்றுத் திட்டங்களையும் சிந்திக்க வேண்டும். பழைய நகரத்துக்குப் பதிலாக புதிய நகரத்தினை உருவாக்கியோ (அநுராதபுரம் போல) அல்லது நடைமுறைச் சாத்தியமுடைய புதிய வீதி நிர்மாணங்களை மேற்கொண்டோ எமதும், உலத்தின் ஒரு பகுதியாயும் உள்ளதுமான மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வமான உரையாடல்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். பொது மக்கள், அரச அதிகாரிகள், துறைசார் வல்லுனர்கள் இணைந்த கூட்டு நடவடிக்கை இதற்கு அவசியம். நாடுகளும் உலகமும், பண்பாடுகளும் மரபுரிமைகளை பாதுகாத்தல் ஊடாக தமது வளமிக்க எதிர்காலத்தை இவ்வாறே உருவாக்கியுள்ளன; உருவாக்குகின்றன. எனவே இச் செயற்பாடுகளோடு சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் இதன் சமூக பண்பாட்டு முதன்மை கருதி ஆக்கபூர்வமான நடவடிக்கை யெடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

***


## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணின் மடியில் 21 - 04 - 1946

கண்ணன் திருவடியில் 03 - 04 - 2010



அமரர் வல்லிபுரம் பரம்சோதி

(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர், இலங்கை மின்சாரசபை)

கடந்த 03.04.2010 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்தோர், மரணச் சடங்குவரை நின்றோர், தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.05.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

135, செம்பொனடிக் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 4064179, 077 2380186 (97517)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 * 11 * 1958

இறப்பு 14 * 05 * 2009



அமரர் கிருஷ்ணபிள்ளை நித்தியானந்தன்

திதி: பஞ்சமி

எங்களை இடைநடுவில் தவிக்கவிட்டுச் சென்று
ஆண்டொன்று ஆனதுவோ அப்பா!
உங்கள் பிரிவுத் துயர் தந்த ஆறாத காயங்கள்
என்றென்றும் எம்மனதில் ஓயாத அலைகளாய்
பாய்ந்த வண்ணம் உள்ளது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



திருமதி விநாயகமூர்த்தி மகேஸ்வரி

ஏழாலை விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி விநாயகமூர்த்தி மகேஸ்வரி 01.05.2010 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் நாவலப்பிட்டி ஆத்மஜோதி அச்சக முன்னாள் முகாமையாளர் நாகலிங்கம் விநாயகமூர்த்தியின் பாசமுள்ள மனைவியும் திரு. திருமதி கந்தையா தம்பதியரின் சிரேஷ்ட மகளும் திரு. திருமதி நாகலிங்கம்- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் ஜீவகாந்தி, சிதம்பரநாதர், முருகையா, அமரர் கணேசபிள்ளை, நடேசன் மாஸ்ரர், செல்வரத்தினம், குணரத்தினம், பரமானந்தமூர்த்தி, திருமதி ஸ்ரீயானந்தம் திரு. திருமதி விவேகானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி திருப்பதி ஜீவகாந்தி, ஸ்ரீயானந்தம், விவேகானந்தம் திருமதிகள் சிதம்பரநாதர், முருகையா, பேராம்பிகை, அமரர் அகிலாண்டேஸ்வரி, அமரர் ஸ்ரீனிவாசகம், கந்தசாமி, ஜெயதேவி, செல்வராணி, மனோசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,ஏழாலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர் நா.விநாயகமூர்த்தி.

விழிசிட்டி, ஏழாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டம்; சென்றல், சென்.பற்றிக்ஸ் கல்லூரிகளில் இன்று

வலி.வடக்கு,மே 3

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரிகளின் மைதானங்களில் ஆரம்பமாகின்றன.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் அணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் 'பி' பிரிவில் கொக்குவில். இந்துக் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் இடம் பெற்றுள்ளன.

'சி' பிரிவில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் 'டி' பிரிவில் உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரியும் நாரந்தனை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை யும் இடம் பெற்றுள்ளன.

'ஈ' பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும் 'எப்' பிரிவில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் 'ஜி' பிரிவில் வேலணை மத்திய கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் 'எச்' பிரிவில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியும் இடம் பிடித்துள்ளன. (6-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 3

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கற்கோவளம் ஐஸ் உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை கற்கோவளம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு,

பி.ப.3.30 மணி மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் சிவானந்தா (பி) விளையாட்டுக்கழகம்.

பி.ப.4.30மணி சென்.தோமஸ் (பி) விளையாட்டுக்கழகம் எதிர் நவசக்தி (ஏ) விளையாட்டுக்கழகம். (6-23)

## வலிகாமம் வலய கரப்பந்தாட்ட சம்பியனை கைப்பற்றியது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம்,மே 3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் நான்காவது தடவையாகவும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வலிகாமம் கல்வி வலய சம்பியனாகியது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களை கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 25:16, 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் இணுவில் மத்திய கல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி கைப்பற்றியது. (6-86)

## ருவென்ரி - 20 போட்டி

வலி.வடக்கு,மே 3

கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளின் பழைய மாணவர்கள் மோதும் ருவென்ரி - 20 துடுப்பாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந்துக்களின் போரை அடுத்து முதன் முறையாக இருகல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் ருவென்ரி - 20 போட்டியில் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-86)

## பருத்தித்துறை உதயதாரகையின் உதைபந்தாட்டம்; சிவானந்த, கலட்டி வி.கழகங்கள் வெற்றி

யாழ்ப்பாணம், மே 3


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரனை விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் செவ்வாய்க்கிழமை கற்கோவளம் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் சிவானத்த விளையாட்டுக்கழகமும் கலட்டி விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்த விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் சிவானத்த விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய இமையாணன் மத்திய விளையாட் டுக் கழக அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கலட்டி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் (ஏ) விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கலட்டி விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (6-23)




## வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சைக்கிள், மரதன், வேக நடைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 3

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலருக்குமான மரதன், சைக்கிள் ஓட்டங்கள், வேகநடைப் போட்டிகள் இம் முறை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த வீர, வீராங்கனைகள் இதில் பங்கு பற்றவுள்ளனர்.

இந்த போட்டிகளுக்கான ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-23)

# மத்தியஸ்தரை வீரர்கள் தாக்கிய சம்பவம்; 5 வருடத் தடை விதித்தது யாழ். லீக்!

வலி.வடக்கு,மே 3

உதைபந்தாட்ட மத்தியஸ்தரைத் தாக்கியதற்காக நாவாந்துறை சென்.நீக்லஸ் விளையாட்டுக் கழகத்திற்கு 5 வருடத் தடையும் 50ஆயிரம் ரூபா தண்டப்பணமும் யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 18ஆம் திகதி உரும்பிராய் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நடந்த அணிக்கு 7பேர்கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகமும் ஊரெழு றோயல் கழகமும் மோதின.

இதில் இரண்டாவது பாதி ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சென்.நீக்கிலஸ் அணியின் வீரர் ஒருவர் விதிமுறைகளை மீறி நடந்ததால் மத்தியஸ்தரால் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார்.

இதனை எதிர்த்து அவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் மத்தியஸ்தரையும் தாக்கினார். இதனையடுத்து அவருக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதனால் அவ்விளையாட்டுக் கழகத்தினரால் மத்தியஸ்தர் கடுமையாகத் தாக்கப்பட்டார். கோப்பாய் பொலிஸார் வந்தே அவர்களைக் கட்டுப்படுத்த முடிந்தது. தாக்குதலில் மத்தியஸ்தர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூடிய யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஒழுங்காற்றுக்குழு விசாரணைகளை நடத்திய பின் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது.

தாக்குதலினால் காயமடைந்த மத்தியஸ்தருக்கு நட்டஈடாக 30ஆயிரம் ரூபாவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. (6-86-23)

## உடற்பயிற்சிப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், மே 03

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையேயான ஆண், பெண் இரு பாலருக்குமான உடற்பயிற்சி போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலை களின் விவரங்கள் வருமாறு:

ஆண்கள் பிரிவு

யாழ். மத்திய கல்லூரி( முதலாம் இடம்)

பெண்கள் பிரிவு

வேம்படி மகளிர் கல்லூரி (முதலாம் இடம்) (6-23)

## 13 வயதுப் பிரிவு உதைபந்தாட்டத்திற்கான விண்ணப்ப முடிவு நாளை மறுதினம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே 13 வயதுப்பிரிவு (98, 99) ஆண், பெண் இருபாலருக் குமான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி மே மாதம் இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குகொள்ளவுள்ள பாடசாலைகள், விண்ணணப்பபடிவங்களை நாளை மறுதினம் 5 ஆம் திகதி புதன் கிழமை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (6-23)

## பருத்தித்துறை உதயதாரகையின் உதைபந்தாட்டம்; ஐக்கிய, கரணவாய் மத்திய வி.கழகங்கள் வெற்றி

யாழ்ப்பாணம், மே 3

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கற்கோவளம் ஐஸ் தொழில்சாலை அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் அண்மையில் கற்கோவளம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகம், பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை ஐக்கிய (பி) விளையாட்டுக்கழகத்தை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றொஞ்சஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் பாரதி விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய றொஞ்சஸ் விளையாட்டுக்கழகத்தை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (6-23)




அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கராத்தேப் போட்டியில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்ற வீரர்கள் பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தால் கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சட்டத்தரணி சபா. இரவீந்திரன், ரீ. வெனிஸ்டாஸிக்கும் [illegible] பல்கலைக்கழக முகாமைத்துவப் பேராசிரியர் கே. பிரசாந்தினிக்கு (வெண்கலப் பதக்கம்) விருது வழங்குவதையும் வர்த்தகர் பொ. இராசதுரை கராத்தே ஆசிரியர் [illegible] கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட ஆற்றுகையான அபிஞ்ஞான சகுந்தலம் நாட்டிய-நாடகம் யாழ்ப்பாணத்தில்

ஆயக்கலைகள் அறுபத்து நான்கிற்குள்ளும் அரங்கக்கலைகள் தனித்துவமானவை. நிகழ்த்தப்படும் கணத்தில் ஒரேநேரத்தில் கட்புல,செவிப்புல ரீதியாக நுகர்வோரிடம் சென்றடையும் வல்லமை அரங்கக் கலைகளுக்கே உண்டு. அதிலும் ஆடற்கலை பார்ப்போரை தன்வசம் எப்போதுமே ஈர்த்துவைக்கக்கூடிய மாயாஜாலம் கொண்டது. உலகின் எல்லா பண்பாடுகளிலும் இருப்பதைப் போலவே நம்முடைய ஆடற்கலையும் மிக நீண்ட பாரம்பரியத்தை உடையவை .

இத்தகைய நடனக்கலையில் நம்மிடையே அதிகளவில் பயிலப்பட்டுவரும் துறையாக பரதம் விளங்குகிறது. பரதத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழில் மட்டுமல்லாது இந்தியாவில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் நாட்டியக்கலை வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டியக் கலைக்கே மகுடம் சூட்டுவது போல காளிதாசர் எழுதிய 'அபிஞ்ஞான சகுந்தலம்' என்ற நாட்டிய நாடகம் அமைந்திருக்கிறது.

குப்தர் காலத்தில் பாரத தேசத்தில் புகழ்மிக்க கவிஞனாகவும் நாடக ஆசிரியராகபவும் விளங்கிய காளிதாசர் நாடகம் சார்ந்த இலக்கிய வடிவங்களை ஆக்குவதில் கைதேர்ந்தவர். இவர் கர்ணபரம்பரைக் கதையொன்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அபிஞ்ஞான சகுந்தலம் சாகாவரம்பெற்ற படைப்பாக இன்றும் உயிர்வாழ்கின்றது.இந்தப் படைப்பின் நீடித்த வாழ்விற்கு குறித்த நாடகம் கொண்டுள்ள உயர்கவிவரிகள், ஆடலுக்கேற்ற விதானிப்புகள், என்றைக்கும் பொருந்தக்கூடிய காதல் ரசம் சொட்டும் பண்பாட்டை பிரதிபலிக்கும் உயிர்த் துடிப்பான கதைக்கரு என்பனவை காரணம் எனலாம்.

அரச வம்சத்தவரான விசுவாமித்திரர் தானும் ரிஷியாக வருவதற்காக நீண்ட தவம் புரிகின்றார். இவருடைய தவத்தைக் குலைப்பதற்காக இந்திரனுடைய ஏவுதலின் பேரில் தேவலோகக் கன்னியர் அவருக்கு காதல் கணை வீசுகின்றனர். அவர்களின் மேனகையின் அழகில் மயங்கி தன்னுடைய தவத்தினின்றும் விலகுகிறார் விசுவாமித்திரர். மேனகைக்கும் விசுவாமித்திரருக்கும் ஒரு அழகிய பெண் குழந்தை பிறக்கிறது. தன் குழந்தையை தேவலோகம் அழைத்துச் செல்ல முடியாததால் காட்டிலேயே அக்குழந்தையை கைவிட்டுச் செல்கிறாள். அந்தக் குழந்தையை சகுந்தலை எனப் பெயரிட்டு கன்வரிஷி அன்போடு வளர்க்கிறார். ஒருநாள் அந்தக் காட்டிற்குள் வேட்டையாட வரும் துஷ்யந்த மன்னன் சகுந்தலையின் அழகில் மயங்குகின்றான். சகுந்தலையும் அவன் மீது மையல் கொள்கின்றாள். இருவரும் காந்தர்வமுறைப்படி திருமணம் செய்கின்றனர். தன்னை நினைவுபடுத்தும் அடையாள மோதிரத்தை சகுந்தலையிடம் கொடுத்துவிட்டு நகர் திரும்புகின்றான் துஷ்யந்தன். அவனை பிரிந்ததால் துயர்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் சகுந்தலை இருக்கும்போது ஆசிரமத்துக்கு துர்வாசர் வருகின்றார். அவர் வந்ததையும் கவனியாது சகுந்தலை இருந்ததால் அவளுக்கு 'நீ யாரை நினைத்துக்கொண்டு என்னை வரவேற்காது இருந்தாயோ அவன் உன்னை மறக்கக்கடவது' என்று சாபமிடுகிறார். பின்னர் சகுந்தலை தன்னிலையைக் கூற அடையாள மோதிரத்தைக் காட்டினால் அந்த சாபம் நீங்கும் என்று துர்வாசர் கூறிச்செல்கின்றார்.



சகுந்தலை கர்ப்பம் தரிக்கிறாள். இதனால் அவளை காந்தர்வமுறைப்படி திருமணம் செய்த துஷ்யந்தனிடம் சேர்த்துவைக்க சகுந்தலையை அழைத்துக்கொண்டு கன்வரிஷி புறப்படுகிறார். வழியில் அருவியில் நீரருந்தும்போது சகுந்தலையின் கையில் இருந்த அடையாள மோதிரம் தவறிவீழ்ந்து விடுகின்றது. அரச சபையில் சகுந்தலையை அடையாளம் தெரியாத துஷ்யந்தனுக்கு ஞாபகம் ஊட்ட சகுந்தலையிடம் மோதிரம் இல்லாததாதல் அவள் ஜோதிவடிவில் வானுலகம் செல்கின்றாள். பின்னர் ஒரு மீனவனின் மூலம் மோதிரத்தைக் காணும் துஷ்யந்தனுக்கு சகுந்தலை பற்றி நினைவு வருகிறது. பின்னர் நீண்ட தேடுதலின் பின்னர் சகுந்தலையையும் தன் மகனையும் கண்டடைந்து மகிழ்வோடு வாழ்கின்றான் துஷ்யந்தன். இதுவே அபிஞ்ஞான சகுந்தலம் நாடகத்தின் கதை.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல கலைப்படைப்புகளை ஆற்றுகை செய்த அரு ஸ்ரீ கலையகம் அபிஞ்ஞான சகுந்தலம் நாடகத்தை யாழ்ப்பாண மக்களுக்காக எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை 5மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றவுள்ளது.

இந்திய கலாசார பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் இந்நிகழ்வு பிரமாண்டமான முறையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளராகவும் இசைக் கலைஞராகவும் நடன நெறியாளராகவும் பல்துறை விற்பன்னராக விளங்கும் கலைஞர் கலாசூரி.அருந்ததி ஸ்ரீரங்கநாதன் இந்த ஒப்பற்ற காவியத்தை தயாரித்து நெறியாள்கை செய்துள்ளார்.

மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் பண்பாட்டு விழுமியம் சார்ந்த கலைப் படைப்பொன்றை ரசிக்கும் சந்தர்ப்பம் இதன் ஊடாக குடாநாட்டு மக்களுக்கு வாய்த்திருக்கின்றது. உதயனின் ஊடக அனுசரணையோடு நிகழவிருக்கும் இந்த ஆற்றுகையை ரசித்து, அனுபவிக்க குடாநாட்டு ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

-நடவன்-

## வடக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம் கட்டுக்கோப்புடனும் சிறப்புடனும் விளங்குகின்றது

### உதவித் தொழில் ஆணையாளர் புகழாரம்

கட்டுக் கோப்புடைய சிறந்த சங்கமாக வடக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம் விளங்குகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன்.

வடக்கு,கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தால் நாவலர் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேதினக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்றைய தினம் தொழிலாளர்களது தினமாகும். அனைத்துத் தொழிலாளர்களதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். யாழ்.மாவட்டத்தில் இச்சங்கம் முன்னெடுக்கும் பணிகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியன. அத்துடன் இன்று இச்சங்கத்தின் கணனி வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதேபோன்று தொழிலாளர்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக கடன்திட்டங்கள் இன்று அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் மேலும் நன்மை அடையக் கூடியதாக இருக்கும் - என்றார்.

யாழ்.மாவட்ட கிளைத் தலைவரும் தலைமைச் செயலக உப தலைவருமான க.கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்திற்கான புதிய இணையத்தளமான www.nepgou.org என்ற இணையத் தளத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உதவித் தொழில் ஆணையாளர் ஆரம்பித்து வைத்தார். (04-16)


### வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட வைத்தியர் குடும்பத்துக்கு (வாகனத் தரிப்பிட வசதியும் விரும்பத்தக்கது) யாழ்.மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0775114154

### காணி விற்பனைக்குண்டு

சப்பச்சி மாவடி, சாவகச்சேரியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776648752

### வாடகைக்கு

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய (5 Rooms,2 Halls) வீடு நிறுவனங்களுக்கு, விற்பனைப் பிரதிநிதிகளுக்கு (Reps) வாடகைக்கு உண்டு. ஆண் மாணவர்களுக்கு, அலுவலர்களுக்கு உணவு வசதியுடன் தங்குமறைகள் உள்ளன.
தொடர்பு: 0779578244


### தவறிவிட்டது

"சந்திராவனம்" கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சண்முகானந்தன் துளசிராம் என்பவரது தேசிய அ. அட்டை (870873492 V) 27.04.2010 அன்று கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கலாம்.

### கலந்துரையாடல்

தீவக வலய பாடசாலைகளின் ஆங்கிலப் பாடப் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை 12.30 இற்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஆங்கில மொழித் திறன் போட்டி ஏற்பாடுகள், வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கில மொழியறிவு எனும் விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது எனவும் உரிய ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராமகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். (201-267)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் நடேசு
### கிருஷ்ணகுமாரன்
(பொலிஸ்)

பிறப்பு 20.07.1958 இறப்பு 20.03.2010

கடந்த 20.03.2010 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அவர்களின் நினைவு நாள் இன்று(03.05.2010) திங்கட்கிழமை காலை 6 மணியவில் குச்சம் ஞானவைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"சோபனம்"
நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 ★ 08 ★ 1970



அனைவரும் நெகிழ 03 ★ 05 ★ 2004

அமரர் **தில்லைநாதன் கெங்காதரன்**
(உரிமையாளர், தரன் மரக்காலை, கொக்குவில்)

கெங்காதரன் என்ற மங்காத பெயர் கொண்ட மாணிக்கமே!
ஆண்டுகள் ஆறு அருளாமற் சென்றதையா!
ஆற்றொண்ணாத் துயரில் அமிழ்ந்தித் தவிக்கின்றோம்
ஈண்டு வருவீர் என்று எண்ணி இலவு காத்த கிளியானோம்
இன்னல்கள் நிறைந்து இருண்டு போனதையா எம் வாழ்வு
வேண்டுமென்றோ நீரும் விண்ணுலகில் உறைகின்றீர்
விரைந்து வந்து எமது வேதனையைத் தீரும் ஐயா
நீண்ட பயணத்தை நிறுத்திவிட்டு வாரும் ஐயா
நெஞ்சம் கலங்குகின்றோம் நினைவு தடுமாறுகின்றோம்.

முகவரி: மில் ஒழுங்கை,மல்லாகம்.
தற்காலிக முகவரி: நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலிய மசூதியில் குண்டுவெடிப்பு; 30 பேர் உயிரிழப்பு! 70 பேர் காயம்!!



மொகடிஷ்ஷு, மே 03

சோமாலியாவின் தலைநகரான மொகடிஷ்ஷுவில் உள்ள மசூதியொன்றுக்குள் இரு குண்டுகள் வெடித்தன. இவற்றில் 30 பேர் கொல்லப்பட்டனர். எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

அப்டெல்லா சிடிய் மசூதிக்குள் நண்பகல் தொழுகைக்காக மக்கள் அமர்ந்திருந்தனர். அப்போது இக்குண்டுகள் பயங்கரமாக வெடித்தன என வர்த்தகரான அஹமத் அப்தலி என்பவர் பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''சில நிமிடங்களுக்குள் இக்குண்டுகள் வெடித்தன. பலரின் உடல்கள் சிதைந்துவிட்டன. அநேகர் காயமடைந்தனர். மசூதிக்குள்ளே அவலக் குரலும், அபயக் குரலும் ஒலித்தன'' என இஸ்மாயில் தாஹீர் என்பவர் தெரிவித்தார்.

அல்-சபாய் தீவிரவாத இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் புவாட் மொகமத் கலாப்பை இலக்கு வைத்து இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் இதில் படுகாயமடைந்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்-சபாய் இஸ்லாமிய தீவிரவாதிகள் தமது பிரசாரத்துக்கு அப்டெல்லா சிடிபி மசூதியை பயன்படுத்துவதுண்டு. எனினும், இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் உரிமை கோரவில்லை என உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதே பகுதியில் அமைந்துள்ள அபு வஹிரியா மசூதிக்கருகில் செவ்வாய்க் கிழமை ஒருவர் கண்ணிவெடிக்குப் பலியானார்.

1991 ஆம் ஆண்டு முதல் சோமாலியாவில் ஸ்திரமான ஆட்சி கிடையாது. இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் நாட்டின் பல பகுதிகளைத் துண்டாடி தத்தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன.

இந்த இஸ்லாமியக் குழுக்களிடையே மூண்டுவரும் மோதல்களில் பொதுமக்களில் அநேகர் பலியாகியுள்ளனர். இடைக்கால அரசின் கட்டுப்பாட்டுக்குள் தலைநகரின் சில பகுதிகளே உள்ளன. ஆபிரிக்க அமைதிப் படைகளின் உதவியோடு அரசு இயங்கி வருகிறது.

# அணு ஆயுதங்களின் இருப்பை மாநாட்டில் அமெ. வெளியிடும்

வாஷிங்டன், மே 03

அமெரிக்கா தன்னிடம் உள்ள அணு ஆயுதங்களின் இருப்பு விவரத்தை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்த ஆய்வு மாநாட்டில் வெளியிடும் என்று தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் இந்த மாநாடு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டின்போது அமெரிக்காவிடம் உள்ள அணு ஆயுத வகைகள், இருப்பு விவரம் குறித்து தகவல் வெளியிடப்படும் என்று தெரியவந்துள்ளது என வாஷிங்டனிலிருந்து வெளியாகும் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்த ஆய்வு மாநாட்டின்போது வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி ரோதம் கிளிண்ரன் உரையாற்றவுள்ளார். மாநாட்டில் இந்தத் தகவல்களை அவரே தெரிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அதற்கு முன்னதாகவே அணு ஆயுதங்களின் இருப்பு விவரம் குறித்து தகவல் வெளியாகும் என்று தெரிகிறது.

அணு ஆயுதங்கள் வைத்திருப்பதிலுள்ள கட்டுப்பாடுகளை அதிகப்படுத்த வேண்டும் என்று இம்மாநாட்டில் பேசவுள்ள ஈரான் ஜனாதிபதி முகமது அஹமதி நிஜாத் கோரிக்கை வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோன்ற கோரிக்கையை அவர் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கையடக்கத் தொலைபேசியின் பாதிப்புகள் குறித்து ஆய்வு

லண்டன், மே 03

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் உடல்நல பாதிப்புகளை உறுதியாக அறிந்து கொள்வதற்கு என பிரிட்டன், டென்மார்க் உள்ளிட்ட ஐந்து ஐரோப்பிய நாடுகளில், நீண்டகால ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதார ஆராய்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயற்படுத்தி வரும், பேராசிரியர் லாவ்ரி சாலிஸ் கூறுகையில், ''கையடக்கத் தொலைபேசிகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால், இதய நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படும் என ஒரு சிலர் கூறி வருகின்றனர். இருந்தாலும், இது தொடர்பான உறுதியான ஆய்வு முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை.

''இதுகுறித்து, இதுவரை வெளியான ஆய்வு முடிவுகள் அனைத்தும், மிகக் குறுகியகாலங்களில் மேற் கொள்ளப்பட்டவை. இது தொடர்பாக, குறைந்தது 20 ஆண்டுகள் தொடர்ந்து ஆய்வு நடத்தினால் தான், கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால், என்ன பாதிப்பு ஏற்படும் என்பதைத் தெளிவாக அறிய முடியும். இதற்காக பிரிட்டன், டென்மார்க், பின்லாந்து, சுவீடன், நெதர்லாந்து ஆகிய ஐந்து நாடுகளில், நீண்டகால ஆய்வு நடத்தவுள்ளோம்.

''இந்த நாடுகளில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் 20 இலட்சம் பேர், இந்த ஆய்வில் பங் கேற்கவுள்ளனர். 18இலிருந்து 69 வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமே, இந்த ஆய்வில் பங்கேற்பர். கையடக்கத் தொலைபேசி பயன்பாடு குறித்தும், இதனால் அவர்களுக்கு எந்த வகையான மாற்றம் அல்லது பாதிப்பு ஏற்படுகிறது என்பது குறித்தும் 'ஒன் லைன்' வாயிலாகக் கேள்விகள் கேட்கப்படும்.

''இதற்கு அவ்வப்போது அவர்கள் பதில் அளிப்பர். அவர்களுக்கு ஏற்படும் தலைவலி, தூக்கமின்மை போன்ற பிரச்சினைகள் குறித்தும் இதில் கேட்கப்படும். 20 ஆண்டுகளுக்கு பின், இந்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்படும். இதன் முடிவில், கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால், எந்தவகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை உறுதியாக அறிந்துகொள்ள முடியும்.'' - என்றார்.

உலக அரங்கில்

# நேபாள அரசை பதவி விலகக்கோரி மாவோவாதிகள் கண்டனப் பேரணி



ள பிரதமர்

காத்மாண்டு, மே 03

''நேபாள பிரதமர் மாதவ் குமார் நேபாள் பதவியிலிருந்து விலகும்வரை எமது போராட்டம் தொடரும்'' எனநேபாளமாவோவாதிகளின் தலைவர் புஷ்பகமல் தஹால் தெரிவித்துள்ளார்.

நேபாள அரசு பதவி விலகக் கோரி தலைநகர் காத்மாண்டுவில் மாவோயிஸ்ட் தொண்டர்களின் மாபெரும் கண்டனப் பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

நேபாள நாட்டின் பிரதமராக மாதவ் குமார் நேபாள் உள்ளார். அவரது தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக மே 1 ஆம் திகதி முதல் மிகப் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம், கண்டனப் பேரணியை மாவோயிஸ்ட்கள் அறிவித்திருந்தனர்.

இதற்காக காத்மாண்டு நகரில் கடந்த சில நாள்களாக, அவர்கள் குவியத் தொடங்கியிருந்தனர். வெள்ளிக்கிழமை வரை சுமார் 30 ஆயிரம் மாவோயிஸ்ட் தொண்டர்கள் நகரில் திரண்டிருந்தனர்.

இந்த நிலையில் சனிக்கிழமை காலை ஆயிரக்கணக்கான மாவோயிஸ்ட் தொண்டர்கள் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டனர். மாதவ் குமார் நேபாள் தலைமையிலான அரசு பதவியிலிருந்து விலகவேண்டும் என்று கோரி மாவோயிஸ்ட் தொண்டர்கள் கோஷம் எழுப்பியவாறே பேரணியில் சென்றனர். சிவப்பு நிற சட்டை, தொப்பி அணிந்து சிவப்புக் கொடியுடன் அவர்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணி காத்மாண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்றது. பேரணியையொட்டி கலவரம் ஏதும் ஏற்படாமல் தடுக்க ஏராளமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நேபாளத்தில் தேசிய ஒருங்கிணைந்த அரசு அமையவேண்டும் என்றும், மாவோயிஸ்ட் கட்சி ஆட்சியில் அமரவேண்டும் என்றும் பேரணியில் தொண்டர்கள் கோஷம் எழுப்பினர்.

மேலும் இந்திய - நேபாளம் இடையிலான அமைதி மற்றும் நட்பு ஒப்பந்தத்தை கைவிடவேண்டும், மாவோயிஸ்ட் தலைமையிலான தேசிய அரசை அமைக்கவேண்டும், பிரதமர் பதவியிலிருந்து மாதவ் குமார் நேபாள் விலகவேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பினர்.

முன்னர் மாதவ் குமார் நேபாள் தலைமையிலான ஆட்சியை கவிழ்க்க காலவரையற்ற பொது வேலைநிறுத்தம் நடத்துவது தொடர்பாக மாவோயிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இதில் மாவோயிஸ்ட் நேபாளி காங்கிரஸ், சிபிஎன்-யுஎம்எல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை (நேற்று) முதல் காலவரையற்ற பொது வேலைநிறுத்தம் ஆரம்பமாகும் என்று மாவோயிஸ்ட் துணைத் தலைவர் பாபுராம் பட்டாராய் தெரிவித்தார். ஆனால், அதற்கு முன்னர் அரசிடமிருந்து நல்ல முடிவு கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கண்டனப் பேரணியில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட் தொண்டர்கள் கலந்துகொண்டனர். பேரணியையொட்டி நகரம் முழுவதும் கடைகள் மூடப்பட்டிருந்தன. தொழிற்சாலைகள், வங்கிகள், வர்த்தக வளாகங்கள் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்து இல்லாததால் சாலைகள் வெறிச்சோடியிருந்தன.

# ரஷ்யாவில் குண்டுவெடிப்பு; ஒருவர் பலி; 21 பேர் காயம்!

## மேதினக் கொண்டாட்டத்தில் அனர்த்தம்

மாஸ்கோ, மே 3

ரஷ்யாவின் கபார்டினோ - பல்கேரியா குடியரசில் சனிக்கிழமை மேதினக் கொண்டாட்டத்தின் போது நடந்த குண்டு வெடிப்பில், ஒருவர் பலியானார்; 21 பேர் படுகாயம் அடைந்தனர்.

ரஷ்யாவின் கபார்டினோ - பல்கேரியா குடியரசின் தலைநகரான நல்சிக், விளையாட்டுகளின் சொர்க்க பூமியாகக் கருதப்படுகிறது. இங்கு, சனிக்கிழமை மேதினக் கொண்டாட்டமாக, குதிரைப் பந்தயம் நடந்துகொண்டிருந்தபோது, குண்டு வெடித்தது. இதில் ஒருவர் பலியானார்.

இதுகுறித்து, அந்நாட்டு உள்துறை செய்தித் தொடர்பாளர் மரினா க்யாசோவா கூறுகையில், ''குண்டு, குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. அதன் உட்பகுதியில் நிறையபேரைக் காயப்படுத்தும் வகையில் நிறைய இரும்புத்துண்டுகள் வைக்கப்பட்டுள்ளன; 21 பேர் காயமடைந்துள்ளனர். ஆனால், சரியான எண்ணிக்கை எவ்வளவு என்பது இனிமேல் தான் தெரியும்'' என்று தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தநேரமும் தீவிரவாதிகள் தாக்கலாம்!
# புதுடில்லியில் உச்சக் கட்டப் பாதுகாப்பு!!
## அமெ., ஆஸி., பிரிட்டன் எச்சரிக்கையையடுத்து

புதுடில்லி, மே 03

எந்த நேரத்திலும் தீவிரவாதிகள் தாக்கலாம் என்று அமெரிக்கா விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து டில்லியில் உச்சக் கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் அமெரிக்கா மற்றும் மேலைநாடுகளைச் சேர்ந்த மக்களைக் குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதைத்தொடர்ந்து, வெளிநாட்டில் உள்ள அமெரிக்கர்களின் பாதுகாப்புக்கான எச்சரிக்கை அறிவிப்புகளை அமெரிக்க உளவுத்துறையினர் அவ்வப்போது வெளியிட்டு வருகிறார்கள்.

அதுபோன்ற ஒரு எச்சரிக்கை அறிவிப்பை, கடந்த வாரம் அமெரிக்கா வெளியிட்டது. அதன்படி, புதுடில்லியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இதேபோன்ற எச்சரிக்கை அறிவிப்புகளை, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளும் வெளியிட்டு இருக்கின்றன.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது எச்சரிக்கையாக இருக்குமாறு இங்கிலாந்து வெளியுறவுத்துறையின் அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

ஆஸ்திரேலியா விடுத்துள்ள அறிக்கையில், புதுடில்லியில் உள்ள சந்தைப் பகுதிகளில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என வலுவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு பிறகு, எந்த நேரமும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் தயாராக உள்ளனர். எனவே, ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர்கள், புதுடில்லியில் பயணம் மேற்கொள்ளும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாடுகளின் எச்சரிக்கை அறிவிப்புகளைத் தொடர்ந்து புதுடில்லி பொலிஸாரை மத்திய உள்துறை அமைச்சகம் உஷார்படுத்தி உள்ளது. அதே நேரத்தில் மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சக உத்தரவின்படி, டில்லியின் முக்கிய வீதிச் சந்திப்புகள், சந்தைகள், சினிமா அரங்குகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் முக்கிய இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டு உச்சக் கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுடில்லி பொலிஸ் செய்தித் தொடர்பாளர் ராஜன் பகத் இந்த தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# அமிதாப், ஐஸ்வர்யா ராய் இலங்கை சென்றால் 'இராவணனை'த் திரையிடவிட மாட்டோம்
## சீமான் இயக்கம் முடிவு

சென்னை, மே 03

இலங்கையில் நடைபெறவிருக்கும் திரைப்பட விழாவிற்கு அமிதாப்பச்சனோ அல்லது ஐஸ்வர்யாராயோ சென்றால் 'இராவணன்' படத்துக்கு எதிராக போராட்டத்தில் குதிக்க சீமானின் 'நாம் தமிழர்' இயக்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

ஐஸ்வர்யா ராய் நடித்துள்ள இப்படம் தமிழிலும் வெளியாகிறது. அந்தப் படத்தைப் புறக்கணிக்கவும்,. திரையிட விடாமல் தடுக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கையில் வரும் ஜூன் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை சர்வதேச இந்திய திரைப்பட விழா நடக்கிறது.

இவ்விழாவைத் தொடக்கி வைக்க ஹிந்தி சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் அழைக்கப்பட்டுள்ளார். ஐஸ்வர்யாராய், ஷாருக்கான் போன்றோரும் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரிகிறது. இதற்கு தமிழ் நடிகர் - நடிகைகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விழாவில் அமிதாப்பச்சன் உள்ளிட்ட நடிகர் நடிகைகள் கலந்து கொள்ளக் கூடாது என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இயக்குநர் சீமான் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அமிதாப்பச்சன் வீட்டையும், சீமானின் நாம் தமிழர் இயக்கத்தினர் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழ் நடிகர் நடிகைகள் இலங்கை பட விழாவை புறக்கணித்துவிட்டனர். அமிதாப்பச்சனோ, ஐஸ்வர்யாராயோ இலங்கைக்குச் சென்றால் 'இராவணன்' படத்துக்கு எதிராக போராட்டத்தில் குதிக்க சீமான் இயக்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

ஐஸ்வர்யா ராய் நடித்துள்ள இப்படம் தமிழிலும் வெளியாகிறது. அந்தப் படத்தைப் புறக்கணிக்கவும், திரையிட விடாமல் தடுக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கை சர்வதேச படவிழாவில் இராவணன் படத்தை திரையிடவும் திட்டமிடப்பட்டது. அது தற்போது கைவிடப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

# புலிகளின் பாணியில் நக்ஸல்கள் தாக்குதல் 'சி.டி'க்கள் வெளியீடு
## பொலிஸ் அதிகாரிகள் தெரிவிப்பு

கொல்கத்தா, மே 03

விடுதலைப் புலிகளின் உத்தியைப் பார்த்து மத்திய, மாநில அரசுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்து வரும் மாவோயிஸ்ட்களும் இப்போது தாக்குதல் 'சி.டி'க்களை வெளியிட ஆரம்பித்து விட்டனர் - என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் தந்தேவாடாவில் கைது செய்யப்பட்ட மாவோயிஸ்ட்களிடமிருந்து சில 'சிடி'க்கள் கைப்பற்றப்பட்டன. அதில் இருந்த ஒரு 'சிடி' பொலிஸாரின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஏழு நிமிடம் மட்டுமே ஓடக்கூடிய அந்த 'சிடி'யில் தந்தேவாடா தாக்குதலில் படையினர் 76 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. தங்கள் அமைப்பினரை ஊக்குவிப்பதற்காக, மாவோயிஸ்ட்கள் இதை வெளியிட்டுள்ளனர்.

சத்திஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்டுள்ள அந்த 'சி.டி'யில் மாவோயிஸ்ட் தலைவர் பேசுவது தெளிவாகவே கேட்கிறது.

இறந்து கிடக்கும் சி.ஆர்.பி.எப்., பொலிஸாரிடமிருந்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு மாவோயிஸ்ட்கள், தப்பி ஓடும் காட்சி அதில் உள்ளது. அதோடு, காட்டுப் பகுதியில் பல மூடைகளில் வெடிபொருட்களை எடுத்துக் கொண்டு அவர்கள் செல்லும் காட்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் காட்சிகள், சிந்தல்னோர் காட்டிலிருந்து சி.ஆர்.பி.எவ். பொலிஸாரைத் தாக்குவதற்காக வரும் போதும், தாக்குதலை முடித்து விட்டுச் செல்லும் போதும் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பாணியில் மாவோயிஸ்ட்கள் இப்போது தாக்குதல் 'சி.டி'க்கள் வெளியிட ஆரம்பித்துள்ளனர் என்றும் பொலிஸ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, 'போடோ' இயக்கப் பயங்கரவாதிகளிடமிருந்து ஏ.கே. ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களை மாவோயிஸ்ட்டுகள் வாங்கிக் குவித்துள்ள ரகசிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் பதுங்கியிருக்கும் மாவோயிஸ்ட்களுக்கு, இதுபோன்ற பயங்கர ஆயுதங்கள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால், பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மேற்கு வங்கம், சத்தீஸ்கர், பீஹார், ஜார்க் கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் வேக மாக வளர்ந்து வரும் மாவோயிஸ்ட் அமைப்புகள், அந்தந்த மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் பெரும் சவாலாக விளங்கி வருகின்றன.

## இந்தியச் செய்திகள்

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவையை உடன் ஆரம்பிக்க அனுமதியளியுங்கள்!
## மத்திய அரசிடம் தமிழக மக்கள் கோரிக்கை

தூத்துக்குடி, மே 03

பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க மத்திய அரசு உடனடியாக அனுமதியளிக்க வேண்டும் - என்று தமிழகத் தென் மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியா - இலங்கையில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்துத் திட்டம், கடந்த பல ஆண்டுகளுக்கு முன் தீட்டப்பட்டது. வாரம் மூன்று முறை தனியார் மூலம் அக்கப்பல் போக்குவரத்து இயக்கப்படும். அதில், தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கு, ஆறு மணி நேரத்தில் சென்றுவிடலாம். ஒரு கப்பலில் 300 பேர் வரை பயணிக்கலாம். பயணக்கட்டணம், சென்னை - கொழும்பு விமானக் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்குதான் இருக்கும் என தனியார் மற்றும் துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கப்பல் நிறுத்தத் தளம், கப்பலில் வந்து செல்லும் பயணிகள் அமர இருக்கைகள், தொலைத்தொடர்புக் கருவிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் தூத்துக்குடி துறைமுகத்தில், 2004 ஆம் ஆண்டே ஏற்படுத்தப் பட்டுவிட்டன.

ஆனால், இலங்கையில் இராணுவம் - விடுதலைப்புலிகளுக்கு இடையே நடந்துவந்த உள்நாட்டுப்போரால் பாதுகாப்பு கருதி இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்திற்கு அப்போது மத்திய அரசு அனுமதியளிக்கவில்லை.

இலங்கையில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து, தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டுமென தூத்துக்குடி துறைமுக நிர்வாகம், மத்திய கப்பல்துறை அமைச்சகம் மூலமாக, மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதியளித்தால், உடனடியாக கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க துறைமுகம் தயாராகவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் குறைந்துள்ள சூழ்நிலையில், சுற்றுலாப்பயணிகள், பக்தர்களின் நலன்கருதி தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க மத்திய அரசு உடனடியாக அனுமதிக்க வேண்டுமென தமிழக தென் மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நளினி-பிரியங்கா சந்திப்புக் குறித்த விவரங்களை உடன் வெளியிடுக
## இதன் பிறகே ஈழத்தமிழர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்கிறது பா.ஜ.க.

கடலூர், மே 03

வேலூர் மத்திய சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும், ராஜீவ் காந்தி கொலை குற்றவாளி நளினியை, ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா 2008 ஆம் ஆண்டு சந்தித்துப் பேசிய விவரங்களை அரசு வெளியிட வேண்டும் - என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கடலூரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

நளினியுடன் பிரியங்கா சந்தித்துப் பேசிய பின்னர்தான் இலங்கையில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

எனவே, அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்ற விவரத்தை அரசு வெளியிட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயாருக்கு தமிழகத்தில் மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்தமை இந்திய மக்களுக்கே பெரிய தலைக் குனிவை ஏற்படுத்தி விட்டது. இது மனிதாபிமானமற்ற செயல். இந்திய அரசு அவரது மருத்துவ சிகிச்சைக்கு அனுமதி அளிக்க வேண்டும். அவரது வருகையால் இந்தியாவில் தீவிரவாதம் தோன்றி, சட்டம் - ஒழுங்கு பாதிக்கும் என்றால் அதைக் கண்காணிக்க வேண்டியது மத்திய மாநில அரசுகளின் கடமையாகும். தமிழ்ச் சமுதாயத்துக்கே எதிராக தி.மு.க. செயற்படுகிறது.

சுவாமி சகஜானந்தா மக்களுக்கு சிறந்த வழிகாட்டியாகத் திக [illegible] தவர். அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்தவர். எனவே, அவரது குருபூஜையில் பா.ஜ.க. கலந்து கொள்கிறது - என்றார்.

# எட்டுக் கோடி உலகத் தமிழரையும் ஒன்றிணைப்பதே எமது குறிக்கோள்
## புதிய தமிழகம் கட்சி

கோவை, மே 03

உலகம் முழுக்க உள்ள எட்டு கோடி தமிழர்களை ஒன்றிணைப்பதே எங்களின் குறிக்கோள் - என்று புதிய தமிழகம் கட்சியின் நிறுவுநரும் தலைவருமான கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

கட்சியின் இணையத்தள தொலைக் காட்சியை கோவையில் நேற்றுமுன்தினம் தொடக்கி வைத்துப் பேசியபோதே அவர் இதைத் தெரிவித்தார். அங்கு அவர் பேசியவை வருமாறு -

கட்சி சார்பில் ஏற்கனவே ptparty.org என்ற இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, தமிழ் மக்களுக்காக 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கும் வகையில் http://webtv.ptparty.org என்ற இணையத்தளத் தொலைக்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. உலகத் தமிழர்களின் நிலை குறித்த நிகழ்ச்சிகள், செய்தி, மருத்துவம், உள்ளிட்ட தகவல்களும் இணையத்தள தொலைக்காட்சியில் இடம் பெறும்.

உலகம் முழுக்க உள்ள எட்டு கோடி தமிழர்களை ஒன்றிணைப்பதே எங்களின் குறிக்கோள். இதன் மூலம் ஒன்றிணைந்த தமிழ் உலகமாகவும், உலகத்தமிழ் சமுதாயமாகவும் மாறும் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் கோலாகலம்

30.04.2010 – 16.05.2010

## தென்னாபிரிக்கா, இந்தியா அபார ஆட்டம்; சுரேஸ்ரெய்னாவின் சதத்தால் இந்தியா வெற்றி!

செயின்ட் லூசியா, மே. 03

இறுதிப்பந்து வரை இலக்கைத் துரத்திச் சென்ற தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர்களின் ஓட்டவேகத்தைத் தடுத்து நிறுத்திய இந்திய அணியின் பந்து வீச்சாளர்கள், சுரேஸ் ரெய்னாவின் அதிரடிச் சதத்தின் மூலம் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி வீரர்களான டினேஸ் கார்த்திக்கும், முரளி விஜயும் களமிறங்கினர்.

முரளி விஜய் ஓட்டம் எதனையும் பெறாமல் கெலின்வெல்ட்டின் பந்து வீச்சில் பௌச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சுரேஸ் ரெய்னா தனது அதிரடி ஆட்டத்தைக் காண்பித்தார். தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களின் பந்துகளை எல்லைக்கோட்டுக்கு அனுப்பிய ரெய்னா 60 பந்துகளில் 9 பௌண்டறிகள் 5 சிக்ஸர்கள் அடங்கலாக ருவென்ரி - 20 போட்டிகளில் தனது நான்காவது சதத்தைக் கடந்தார்.

மோர்கல் வீசிய பந்தை அடித்தாட முற்பட்ட ரெய்னா ஏ.வி.டி. வில்லியர்ஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அவருடன் ஜோடி சேர்ந்து ஆடிய யுவராஜ் சிங் 3 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 30 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்று கெலின் வெல்டிக் பந்தில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

யூசுப்தான் 11 ஓட்டங்களுடன் ஸ்ரைனின் பந்தில் வான்டேர் மேர்விடம் பிடிகொடுத்துப் பெவிலியன் திரும்பினார்.

அணித்தலைவர் டோனி 6 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பௌண்டறியுடன் 16 ஓட்டங்களைப் பெற்றும், ஹர்பஜன்சிங் பந்துகள் எதனையும் சந்திக்காத நிலையில் களத்தில் இருக்க 20 ஓவர்கள் நிறைவு பெற்றன.

இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைத் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

தென்னாபிரிக்கா சார்பில் பந்து வீசிய கெலின்வெல்ட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

187 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு கலிஸ் பலமான அடித்தளத்தை இட்டுக்கொடுத்த போதும் தென்னாபிரிக்க அணியால் இலக்கை அடைய முடியவில்லை.

கலிஸுடன் ஜோடி சேர்ந்து துடுப்பெடுத்து ஆடிய லுஸ்மன் 8 ஓட்டங்களுடன் பதானின் பந்தில் சாவ்லாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் ஸ்மித் கலிஸுக்கு பக்கபலமாக நின்று ஆடியபோதும் இந்த ஜோடி வெகுநேரம் நிற்கவில்லை. ஸ்மித் 36 (ஒரு பௌண்டறி 2 சிக்ஸர்கள்) ஓட்டங்களுடன் "ரன் அவுட்" ஆனார்.

ஏ.வி.டி. வில்லியர்ஸ் தனது வழமையான அதிரடியில் துடுப்பெடுத்தாட கலிஸ் 54 பந்துகளில் (3 பௌண்டறிகள், 3 சிக்ஸர்கள்) 73 ஓட்டங்களைப் பெற்று சாவ்லாவின் பந்தில் ஜடேஜாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மோர்ன் மோர்கல் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க வில்லயர்ஸ் ஒரு பௌண்டறி, 3 சிக்ஸர்களுடன் 15 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்று நெஹ்ராவின் பந்தில் சாவ்லாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

பௌச்சர், டுமினி ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 4 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் முடிவடைந்தது.

தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை 172 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்திய அணி சார்பில் பந்து வீசிய யூசுப்தான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### இன்றைய ஆட்டங்கள்

குழு 'பி'
இலங்கை – சிம்பாவே
இடம் : கஜானா
நேரம் : இரவு 7 மணி

குழு 'டி'
மேற்கிந்தியத் தீவுகள் – இங்கிலாந்து
இடம் : கஜானா
நேரம்: இரவு 11 மணி


உங்களுக்காக ஒரு சில நிமிடம் !

வேலைதேடும் பட்டதாரிகளே. இளைஞர்களே. யுவதிகளே கல்விசார் தகைமைகள் இருந்தும் ஆளுமை விருத்தியின்மை, நேர்முகத் தேர்வினை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாத காரணங்களினால் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் உங்களை விட்டுச்செல்கின்றது. வங்கிகள். தனியார் நிறுவனங்கள் தகுதியான பணியாட்களை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். எனவே. இன்றே எமது பயிற்சிப்பட்டறையில் இணைந்து எதிர்காலத் தொழில் வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள். பயிற்சிப் பட்டறையில் இணையும் அனைத்து மாணவர்களும் எமது தொழில் வங்கியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

British College of Higher Studies

Tel: 021-2224550, Mobile: 0777222422, 0714299935, 0773501499 web: www.bchs.lk Email:info@bchs.lk

யாழ். மாநகரிலே...

British College of Higher Studies ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தர உதவும் பயிற்சிப்பட்டறைகள் (Personality Development Work shops)

உள்ளடக்கம்: நேர்முகத் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்வது, உரையாடுவது, முகாமைத்துவம், மனிதவளப் பயன்பாடுகள், அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள், ஆங்கில உரையாடற் பயிற்சிகள் என்பன அடங்கலான

பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்குச் சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாகவும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியிற் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலை வாய்ப்பைப் பெற ஆவன செய்து தரப்படும்.





★ சிக்கன் புரியாணி
★ சிக்கன் கொத்துறொட்டி
★ மீன்சாப்பாடு
★ நூடில்ஸ்
★ மட்டன் றோல்ஸ்
★ மட்டன் புரியாணி
சுத்தம்
தரம்
அனைவரும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
அனைத்தும் அதி உயர்ந்த தரத்தில் வழங்கப்படும்
ஹொட்டல் எஸ்.எம்.எஸ்
பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/567256)


## அக்மல் - சல்மான்பட் ஜோடி அதிரடி இணைப்பாட்டம்; பங்களாதேஷை இலகுவாக வென்றது பாகிஸ்தான்!

செயின்ட் லூசியா, மே. 03

கம்ரன் அக்மல் - சல்மான்பட் ஜோடியின் அபாரமான இணைப்பாட்டத்தினால் பங்களாதேஷ் அணியை 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது பாகிஸ்தான் அணி.

ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி -20 உலகக்கிண்ணப் போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில் பாகிஸ்தான்-பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

பாகிஸ்தானின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக அக்மலும், சல்மான் பட்டும் களமிறங்கினர். இருவரும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர். பாகிஸ்தான் அணி 142 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 55 பந்துகளில் 8 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 73 ஓட்டங்களைப் பெற்று ஸகீப் அல்ஹஷனின் பந்தில் அப்துல் ரஸாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



இவ்விருவரும் இணைந்து பெற்ற 142 ஓட்டங்கள் இது வரை முதலாவது விக்கெட்டுக்காக ருவென்ரி - 20 உலகக்கிண்ணப் போட்டிகளில் பெறப்பட்ட இரண்டாவது அதிகூடிய ஓட்டமாகும்.

தொடர்ந்து ஆடிய பட்டுடன் ஜோடி சேர்ந்தார் அணித்தலைவர் சயிட் அப்ரிடி. அவர் 9 ஓட்டங்களைப் பெற்ற போது ஷகீப் அல்ஹஷனின் பந்தில் மஹமதுல்லாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சல்மான்பட் 46 பந்துகளில் 8 பௌண்டறிகள், 2 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங் களைப் பெற்றபோது ஷகிப்புல் இஸ்லாமின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அப்துல் ரஸாக் 6 ஓட்டங்களுடனும், மிஸ்பா-உல்-ஹக் 8 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றபோது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களும் நிறைவடைந்தன.

பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் சார்பில் பந்து வீசிய ஷகிப் அல்ஹஸன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

173 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களையே பெற்றது.

பங்களாதேஷின் சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய தமீம் இக்பால் 3 பௌண்டறிகளுடன் 19 ஓட்டங்களைப் பெற இம்ருல் ஹைருஸ் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டம் இழந்தார்.

அஷ்ரர்புல் நிதானமாகவும் சிறப்பாகவும் ஆட சகிப் அல்ஹசன் அவருக்குப் பக்கபலமாக நின்று ஆடினார்.

இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட் இழப்புக்காக 91 ஓட்டங்களைக் குவித்தனர். அல்ஹஸன் 31 பந்துகளைச் சந்தித்து 3 பௌண்டறிகளையும் 2 சிக்ஸர்களையும் விளாசி 47 ஓட்டங்களைப் பெற்று முஹமட் சமியின் பந்தில் உமர் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முஹம்மதுல்லா ஓட்டம் எதனையும் பெறாமல் சமியின் பந்தில் முஹமட் ஆமெரிடம் பிடிகொடுத்துப் பெவிலியன் திரும்பினார்.

நஜீம் இஸ்லாம் ஆட்டமிழக்காமல் 10 அதிரடியாக ஆடிய அஸ்றர்புல் 49 பந்துகளில் 4 பௌண்டறிகள், 3 சிக்ஸர்களுடன் 65 ஓட்டங்களைப் பெற்று ஆமெரின்பந்தில் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி சார்பில் ருவென்ரி - 20 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு அறிமுகமான சமி 3 விக்கெட்டுக்களையும் ஆமெர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சல்மான்பட் தெரிவானார். (6)

**போட்டி இல.02**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

* அனுப்புபவர் பெயர் :..........................................
* முகவரி :..........................................
* தொ.பே.இல. :..........................................

**கேள்வி:**

1. சர்வதேச ருவென்ரி-20 போட்டிகளில் ஒரே ஓவரில் 6 சிக்ஸர்களை விளாசிய வீரர் யார்?..........................................
2. 3ஆவது உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டிகளில் விளையாடும் அதிகூடிய வயதான வீரர் யார்? ..........................................
3. எமது UNI ICT CAMPUS ஆனது அண்மையில் கட்டட வரைபடத் தொழிநுட்பவியலாளர்களுக்கான கணனிக் கற்கை நெறி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தக் கற்கை நெறியின் பெயர் என்ன?..........................................

போட்டி இலக்கம் 02இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு 2500/= பெறுமதியான KINGSTON 8GB PEN DRIVE UNI ICT CAMPUS நிறுவனத்தினரால் பரிசாக வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரந்துறை படிப்பகம் / நாகரசபை, யாழ்ப்பாணம்

# யாழ்.நகரில் நீண்ட இடைவெளிக்குப்பின் படையினரின் சோதனை நடவடிக்கை

யாழ். நகரை அண்டிய குறிப்பிட்ட சில இடங்களில் நீண்டகால இடைவெளிக் குப் பின்னர் படையினர் வாகனங்களை நிறுத்தி, பயணிகளை இறக்கிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களாகச் சோதனை கள் ஏதுமின்றி பயணித்துப் பழகிய மக்களுக்கு நேற் றைய சோதனை நடவடிக்கை பெரும் அசௌ கரியமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்றையதினம் யாழ். நகரில் தட்டா தெருச்சந்தி, ஓட்டுமடம் ஆகிய இடங்க ளில் பயணிகள் இறக்கிவிடப்பட்டுக் குறிப்பிட்ட தூரம் நடந்து சென்ற பின்னரே மீண்டும் பஸ்களில் ஏறி பயணத்தைத் தொடர அனு மதிக்கப்பட்டனர். (ஒ-க-86)

## வருடத்தின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. கண்டித்துள்ளது.

பத்திரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியே இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறி யவை வருமாறு:-

2010ஆம் ஆண்டு பிறந்து காலாண்டு முடிந்துவிட்டது. ஆனால், இந்த வருடத் துக்கான வரவு - செலவுத் திட்டம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. இனியும் சமர்ப் பிக்கும் திட்டம் அரசிடமில்லை.

முதல் நான்கு மாதங்களுக்காக அரசால் இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது. இந்த வருடம் புதிதாக உருவாகும் அரசு அதன் கொள்கைகளுக்கு அமைவாக வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிப்பதற்காகவே இடைக்காலக் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது என்று அரசு கூறியது.

இப்போது அரசு உருவாகிவிட்டது. இனியும் தாமதிக்காமல் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவேண்டும். ஆனால் அதைவிடுத்து இப்படியே மீதி மாதங்களை யும் இழுத்தடித்து விடுவதே அரசின் திட்டம்.

வரவு - செலவுத் திட்டம் இல்லாவிட் டால் அரசு நன்மையடையுமே தவிர இந்த நாடு நன்மையடையாது. பொருள்களின் விலை அதிகரிப்பால் மக்கள் அதிகம் துன்பப்படுகின்றனர்.

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்ப டாமையானது அரசியல் யாப்பை முற்றாக மீறும் செயலாகும். நிறைவேற்று அதிகாரத் தைப் பயன்படுத்தி அரசியல் யாப்பை உதாசீனப்படுத்துவதை ஏற்க முடியாது.

அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளதென் றால் ஏன் வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப் பிக்க அரசு தயங்கவேண்டும்?

உண்மையில், வரவு - செலவுத் திட் டத்தை சமர்ப்பிக்கும் ஆற்றல் இந்த அரசி டமில்லை. பொருளாதார அறிவு அறவே இல்லை. இந்த அரசால் எப்படி நாட்டை நிர்வகிக்க முடியும்?

அரசு இனியும் தாமதிக்காது வரவு - செலவுத் திட்டத்தை உடன் சமர்ப்பிக்க வேண்டும். வரவு - செலவுத் திட்டத்திற் குப் பதிலாக மீண்டும் ஒரு இடைக்காலக் கணக்கறிக்கை சமர்ப்பிப்பதை எம்மால் ஏற்க முடியாது. - என்றார். (அ-சி)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
Che: Mr.M.A. நிரோஜன் B.Sc Mon, Wed, Fri 6.15am.
Phy: Wed, Fri - 6pm.
Bio: Mr.Kulanandan B.Sc, M.Ed Wed, Fri 5pm
B.st. Mr.B.S.
Acc. Mr.S.
Econ. Mr.N.B.கஜீதரன்
ENG. Mr.G.Ranjit.
G.I.T Mr.D.Shelian

பொருளியல்
N.B.கஜீதரன்
A/L 2012இற்கான புதிய பிரிவுகள்
(பிந்தி வந்து சேரும் மாணவருக்கானது)
விக்னா (யாழ்.நகர்)
நேர அட்டவணை - அலுவலகத்தில்

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜர் செய்யப்படுவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றப் பகுதியில் பொலிஸ் பாது காப்பு இன்று பலப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வீதிகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுழிபுரம், தொல்புரம் பகுதிகளில் இரவு வேளைகளில் குறிப்பிட்ட இளைஞர்கள் குழுக்களாக நின்று வம்புத்தனங்களில் ஈடுபட்டுவந்துள்ளனர். இவர்கள் பலதட வைகள் படையினரால் எச்சரிக்கை செய் யப்பட்டுவந்த நிலையில் நேற்றிரவு சுழிபு ரம் படைமுகாம் படையினரால் முகாமுக் குக் கூட்டிச்செல்லப்பட்டனர். இதனை அறிந்த பெற்றோர் இராணுவ முகாமுக்குப் படை யெடுத்துச் சென்றிருந்தனர். (ஒ-16-93)

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை சம்பந்தப்பட்ட முக்கிய தீர்மா னங்களை எடுக்கமுடியாத நிலையிலும் அவை இருக்கின்றன.

இவ்வருடம் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு 1,492 முறைப்பாடுகளும், இலஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக்குழு வுக்கு 500 முறைப்பாடுகளும் கிடைத்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

அரசமைப்பு சபை இயங்காத கார ணத்தால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு ஆகியன வும் செயற்பட முடியாத நிலையில் இருப் பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## தமிழ்க் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட பல விடயங்கள் இச்சந்திப்பின் போது கூட்டமைப்புத் தூதுவரிடம் எடுத்து ரைக்கும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய் யப்பட்டிருக்கும் கூட்டமைப்பு எம்.பிக் களை இந்தியத் தூதுவருக்கு அறிமுகப்ப டுத்தி வைப்பதே இச்சந்திப்பின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் போது பேசவேண்டிய விடயங்கள் தொடர்பாக கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுக் கூட்டமைப்பின் தலை வர் ஆர்.சம்பந்தன் தலைமையில் கொழும் பில் கூடி ஆலோசித்தனர் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## யாழ்.நகரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டனப் பேரணி ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அமைதியான முறையில் எவரது பெய ரையும் குறிப்பிடாமல் பேரணியை நடத்து வதற்கு பொலிஸ் அதிகாரி அனுமதி வழங் கியிருந்தார். எனினும் சனிக்கிழமை இரவு கிடைத்த தொலைபேசி அழைப்புகளில் பேரணியை நடத்தக்கூடாது என்று அச்சு றுத்தப்பட்டதால் பேரணியை நடத்தாமல் கைவிட நேர்ந்தது என்று ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.

மாவட்டத்தின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வந்தவர்களை நிகழ்விடத்துக்கு வராமல் பஸ் நிலையத்திலேயே நின்று திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது அழைப்பை ஏற்றுப் பேரணியில் கலந்துகொள்ள வந்தோருக்கு உண்டான இடையூறுக்கு வருத்தம் தெரிவிப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப் பேரணியை யாழ்.முனியப்பர் கோயில் முன்றலில் இருந்து ஆரம்பித்து வைப் பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதேவேளை பேரணி ஆரம்பமாவதற்கு முன்பாக அவ்விடத்தைச் சுற்றிப் பொலிசாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டனர். பேரணியில் கலந்துகொள்ள வந்தவர்கள் துருவித்துருவி சோதனை செய்யப்பட்டனர். (அ-04-14-83-224)

## இளைஞர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று திறப்பதற்காக கடையொன்றில் சமய நிகழ்ச்சியில் இந்த இளைஞன் நேற்றிரவு ஈடுபட்டிருந்தார். அந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரது பெயரைக் கூறி வெளியே அழைத்ததாகவும் - வெளியே வந்த சதீசனை சுட்டுவிட்டு அவர்கள் தப்பிவிட் டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## குடாநாட்டின் பாதுகாப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பிராந்திய படைகளின் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க யாழ்.நகரில் உள்ள 51 ஆவது படையணித் தலைமையகத்தில் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை விவரிக் கும் பொருட்டு நேற்றிரவு ஊடகவியலா ளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

அங்கே அவர் தெரிவித்தவை வருமாறு:

போர் முடிவடைந்த பின்னர் குடாநாட் டின் பாதுகாப்பு ஏற்பாடுகளை படிப்படி யாகத் தளர்த்திவந்தோம். மக்கள் சுதந்திர மாக தமது செயற்பாடுகளை முன்னெ டுக்க வசதியாக வீதித்தடைகளை காவல ரண்களை அகற்றினோம். மக்களின் சுமூக வாழ்க்கைக்குத் தடையாக இருந்த பல் வேறுபாதுகாப்புச் செயற்பாடுகளையும் நீக்கினோம். மக்கள் தமது பணிகளை சுமூகமாக - சீராக - மேற்கொள்ள வசதிகள் செய்தோம்.

ஆனால் கடந்த சில நாள்களாக குடா நாட்டில் உருவாகியுள்ள வன்செயல் சம்ப வங்கள் காரணமாகப் பாதுகாப்பு நிலை மையை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக வும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்காகவும் கடந்த வெள்ளிக்கிழமை பலாலியில் விசேட மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் முப்படைகளின் தளபதி களும், பொலிஸ்மா அதிபரும் கலந்து கொண்டனர்.

குடாநாட்டின் பாதுகாப்பை உறுதி செய் யவும் சட்டம் ஒழுங்கைப் பேணவும், உட னடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அந்த மாநாட்டில் வைத்து பொலிஸ் மா அதிபருக்குப் பாதுகாப்புச் செயலர் பணிப்புரை விடுத்தார்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலி ஸார் நடவடிக்கை எடுக்கும் அதேநேரம், அதற்குப் புறம்பாக இராணுவத்தினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அந்த மாநாட்டில் முடிவுகள் எடுக்கப்பட்டன.

அவற்றின் பிரகாரம்-

* படையினரின் வ..கன ரோந்து, நடைரோந்து ஆகியன இடம்பெறவுள்ளன.
* வீதித்தடைகளோ, புதிய காவலரண் களோ அமைக்கப்பட மாட்டா.
* படையினரின் பிரசன்னம் அதிகரிக் கப்படும்.
* முன்பு இருந்தது போன்று கூடுதல் எண்ணிக்கையான படையினர் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

### குற்றம் புரியும் எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

ஈ.பி.டி.பியாகவோ, விடுதலைப்புலிக ளாகவோ யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். இத் தகைய செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுப்பர். அதற்குப் படையினர் உதவியாகச் செயற்படுவர்.

முப்பது வருடங்களாக மக்கள் அனுப வித்து வந்த கஷ்டங்களில் இருந்து விடு பட்டுள்ள நிலையில் கடத்தல், கொலை, கப்பம் கோருதல், கற்பழித்தல் போன்ற வன்செயல்களில் - சமூக விரோத குற்றங் களைப் புரிவதற்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை. இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவ டிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளின் பின் னால் இருந்து செயற்படுபவர்கள் பொலி ஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

### நீதிவானுக்கு விசேட பாதுகாப்பு

சாவகச்சேரி மாணவன் கொலை தொடர் பாக விசாரணை செய்துவரும் சாவகச்சேரி நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் தனது பாது காப்புக் குறித்து என்னுடன் கலந்துரையாடி னார். அவரது வாசஸ்தலத்துக்கும், அவர் நீதிமன்றம் சென்று திரும்பவும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதாக உறு தியளித்துள்ளேன். இப்போது அந்தப் பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் பாதுகாப்பைப் பலப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றார் தளபதி. (அ-1)

## ஐ.தே.க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க. ஆதரவுச் சட்டத்தரணிகளின் 'கட்சி மறுசீரமைப்பு' யோசனைகள் தொகுக் கப்பட்டு கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு நேரடியாகக் சமர்ப்பிக்கப்பட வுள்ளன. இதற்காக கட்சித் தலைவரை எப் போது சந்திப்பதென்பதையும் இக்கூட்டத் தில் சட்டத்தரணிகள் தீர்மானிப்பார்கள்.

A/L 2012
கணக்கீடு
பிரிவு - 2
ஆரம்பம்:
03.05.2010 Mon 4 p.m [Mon, Fri - 4 - 5 p.m.]
* ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
By: A.P.Pagieerathan [B.B.A. (FM Spl)]
NEC Clock Tower Road, Jaffna.

படிவங்கள் விற்பனையாகின்றன
1. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
2. மருந்துக் கலவையாளர்
3. காணி நிர்வாக திணைக்களப் போதனாசிரியர் (தகைமை O/L)
4. கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்
5. கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு - III
6. சுகாதார முகாமை உதவியாளர் வகுப்பு - III
பூபாலசிங்கம் புத்தகசாலை,
வேம்படிச் சந்தி - யாழ்ப்பாணம்.
பஸ் நிலையம் - யாழ்ப்பாணம்.
021 222 1637, 021 222 6693

MOTHERBOARD
Intel DG 31 PR 7000/-
Foxconn G 31 5600/-
Asrock G 31 5300/-
E-Sonic G 31 5250/-
Intel DG 41 PR 8250/-
Asus G 41 7400/-
HARD DISK
40 GB SATA 2200/-
160 GB SATA 48[illegible]
250 GB SATA 5500/-
320 GB SATA 6000/-
PROCESSOR
Intel 2.6 Ghz / 4 M Core 2 Quad Box 23900/-
MONITORS
CRT 17" Flat 7500/-
LCD 16" 12000/-
LCD 19" 15250/-
PRINTERS
HP 1663 (Colour) 4200/-
Epson T 10 (Colour) 4600/-
Canon Laser Jet (LBP 3050) 14250/-
HP 3 in 1 Model 4355 13900/-
(Printer, Scanner & Fax)
UPS
UPS 650 VA 3800/-
UPS 1200 VA (1 KV) 7900/-
MEMORY (RAM - KINGSTON)
DDR I 400 Mhz 512 MB 2500/-
DDR II 800 Mhz 1 GB 3800/-
DDR III 1333 Mhz 1 GB 6900/-
DONGLE
DNS 7.2 HSDPA 6250/-
D-Link HSDPA 8500/-
Prolink HSDPA 9250/-
ADSL ROUTERS
TP Link ADSL 1 Port Router 3750/-
TP Link ADSL 2 Port Router 3900/-
TP Link ADSL 4 Port Router 5750/-
PAP2 LINKSYS
PAP2 LinkSys 6500/-
(No.1 Green Light)
DVD WRITERS
Samsung SATA 3100/-
Sony SATA 3700/-
ATX CASING
Power Logic 2700/-
MAGA (500 W) 2500/-
(All Models)
SCANNERS
Mustek USB 5250/-
HP G 2410 7250/-
COMPUTER ACCESSORIES
Network Cable (300m Box AMP) 3500/-
Power Supply 450 W 1250/-
Micro Lab 2.1 2800/-
Web Camera 950/- to 3500/-
Recovery Card (No.1) 1200/-
Keyboard 350/-
Optical Mouse Sony 230/-
Sound Card 500/-
Intel LGA Fan 500/-
478 Fan 700/-
FM Modulator 700/-
Modem 550/-
Network Card 750/-
USB Capture Card 3500/-
SAMSUNG Digital Camera 12.2 Mega pix 13900/- Only
Games Player (Mp3/Mp4) 9,750.00 Only
VISA
கடன் அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்
விலைகுறைப்புக்கள்!!!
இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
3 வருடங்கள் வரையிலான உத்தரவாதம்
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk (ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.